# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 12 | வள்ளுவர் ஆண்டு 2047 | கார்த்திகை 23, வியாழக்கிழமை 08.12.2016


## பாட நூலில் தமிழர் வரலாறு புறக்கணிப்பு

ஆராயச் சிறப்புக் குழு

யாழ்ப்பாணம், டிசெ. 8
தமிழ் மொழி மூலமான வரலாற்றுப் பாடத் திட்டத்தில் தமிழர் தொடர்பான வரலாறு புறக்கணிக்கப்பட்டிருப்பது தொடர்பில் ஆராய்வதற்குச் சிறப்புக் குழு அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார். >> 25

## எம்மை மீறி அரசமைப்பை திருத்தினால் குருதி ஆறு ஓடும்

ஞானசாரதேரர் சூளுரை



யாழ்ப்பாணம், டிசெ. 8
4 ஆயிரம் பிக்குகளைக் கொழும்பில் அணிதிரட்டி அரசமைப்புத் திருத்தங்களைத் தோற்கடிப்போம். எம்மையும் மீறி –தாண்டித் திருத்தங்களை மேற்கொண்டால், நாட்டில் குருதி ஆறுதான் ஓடும். இவ்வாறு சூளுரைத்துள்ளார் பொதுபலசேனாவின் பொதுச்செயலர் ஞானசாரதேரர். கொழும்பில் நேற்று >> 25

## வடக்கு மாகாண அமைச்சர்கள் மீது 5 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 8
வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிராக இதுவரை 5 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கான காலம் ஒரு வாரத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சபையில் நேற் >> 25

கூட்டமைப்பினரை ஓட ஓட அடித்து வெட்டிய நாரந்தனைப் படுகொலையில்

# ஈ பி டி பியினரே குற்றவாளிகள்

**யாழ்.மேல்நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு**
**நெப்போலியன், மதனராஜா, ஜீவன் மூவருக்கும் இரட்டைத் தூக்கும் 20 வருட கடூழியச் சிறையும்**

யாழ்ப்பாணம், டிசெம்பர் 8
15 வருடங்களுக்கு முன்னர் நாரந்தனையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரப்புரைக் குழு மீது நடத்தப்பட்ட கொலை வெறித் தாக்குதலில் ஈபிடிபியினரே குற்றவாளிகள் என்று யாழ். மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மூவரைக் குற்றவாளிகளாகக் கண்ட நீதிமன்றம், அவர்களுக்கு இரட்டைத் தூக்குத் தண்டனை விதித்ததுடன், 20 வருட கடூழியச்சிறைத்தண்டனையும் விதித்தது. நான்காவது நபர் குற்றமற்றவர் என விடுவிக்கப்பட்டார்.
கடந்த 15 நாள்களாக இந்த வழக்கு விசாரணை யாழ்.மேல் நீதிமன்றில் நடைபெற்று வந்தது. நேற்றுத் தீர்ப்பு வழங்கப்பட்டது.
ஈபிடிபி கட்சியின் தீவுப்பகுதி இராணுவப் பொறுப்பாளராக இருந்த செபஸ்டியன் ரமேஸ் அல்லது நெப்போலி >> 04

## ஜயம்பதி எம்.பிக்கு கொலை மிரட்டல்

அரசமைப்பு உருவாக்கத்தில் பங்களிப்பதற்கு எச்சரிக்கை



யாழ்ப்பாணம், டிசெ. 8
புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றி வரும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரட்ணவுக்கு, கொலை அச் சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.
அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டே, கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட் >> 25

## 25 ஆயிரம் தண்டம்; மாற்றம் கிடையாது

அரசு நேற்றுத் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 8
7 வகையான வீதிப் போக்குவரத்து விதிமுறை மீறலுக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்படும். இதில் எந்த மாற்றமும் இல்லை. இவ்வாறு அரசு நேற்றுத் திட்டவட்டமாக அறிவித்தது. அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக் கையிலேயே, அமைச்சர் ராஜித மேற் >> 25

## தடுப்புக் காவல் சித்திரவதை

## சி.ஐ.டியினர் மீது ஐ.நா. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 8
கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் இருக்கும் நபர்களை சித்திரவதை செய்வது இன்னும் தொடர்கிறது. குறிப்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினராலேயே அதிகளவில் சித்திரவதைகள் மேற்கொள்ளப் படுகின்றன என்று ஐ.நா. சபை குற்றஞ்சாட்டியுள்ளது. >> 04

## கம்மன்பிலவின் கட்சிக்கே தடை விதிக்கவேண்டும்

கூட்டமைப்புக்கு அல்ல என்கிறார் அமைச்சர் ராஜித

யாழ்ப்பாணம், டிசெ. 8
தடை செய்ய வேண்டியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அல்ல. மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவின் தூய ஹெல உறுமயவைத்தான் தடை செய்ய வேண்டும். இவ்வாறு அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித >> 25

## வடக்கு அரசுக்கு தனியான கீதம்

மூன்று ஆண்டுகளின் பின்னர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 8
வடக்கு மாகாண சபைக்கு என்று தனித்துவமான – தனியான கீதம் இயற்ற அதற்கான சபை செயற்பட ஆரம்பித்து மூன்று ஆண்டுகளின் பின்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண சபைக்குத் தனித்துவமான கீதத்தை உருவாக்குவதற்கான எத்தனிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, அவைத் >> 25



## தாஜூதீனின் உறவினர்கள் கொழும்பில் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 8
ரக்பி வீரர் வசீம் தாஜூதீனின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் இணைந்து, கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு முன்னால் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.
வசீம் தாஜூதீன் >> 25

## ஒற்றையாட்சியை விட்டுக்கொடார் ஜனாதிபதி

அமைச்சர் நிமல் நம்பிக்கை

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிநடத்தல் குழுவின் அறிக்கை நாளை மறுதினம் சனிக்கிழமை சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், புதிய அரசமைப்பில் ஜனாதிபதி ஒற்றையாட்சியை விட்டுக் கொடுக்கமாட்டார் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா. நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சு >> 25

மூச்சந்தி முனி



உதைத்தான் பாருங்கோ காலங் கடந்த ஞானம் எண்டுறது...

## புதிய அரசமைப்புப் பற்றி உடன்பாடு ஏதுமில்லை

உண்மை நிலையை நேற்று வெளிப்படுத்தினார் ஜனாதிபதி

யாழ்., டிசெ. 8
புதிய அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகள் இன்னும் பேச்சு மட்டத்திலேயே இருக்கின்றன. இது வரை எந்தவொரு உடன்பாடும் எட்டப்படவில்லை.
இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.
புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் வழிநடத்தல் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு குறித்த வரவு - செலவுத் திட்டக் குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
புதிய அரசமைப்புப் பற்றி விமர்சிக்கும்போது அந்த விடயத்தை அற்பமாகக் >> 25

## குளத்தில் மூழ்கி சகோதரிகள் சாவு

ஆனைவிழுந்தானில் நேற்று மாலை பரிதாபச் சம்பவம்

கிளிநொச்சி, டிசெ. 8
கிளிநொச்சி, ஆனைவிழுந்தான் குளத்தினைப் பார்வையிடச்சென்ற ஓரே குடும்பத்தைச் சேர்ந்த 17,18 வயதுடைய சகோதரிகள் குளத்தில் மூழ்கி உயிரிழந்தனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
இந்தத் துயரமான இழப்புச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. அதே கிராமத்தைச் சேர்ந்த ரகுநாதன் கவிப்பிரியா (வயது 17), கஜேந்திரன் >> 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரக்னா லங்காவை கலைக்க அனுமதி

யாழ்ப்பாணம், டிசெ. 8
ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்தைக் கலைப்பது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது சமாதானத்துடன் கூடிய சூழ்நிலை தொடர்வதால் அரசுடன் இணைந்து தனியார் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றின் சேவைஅவசியமில்லை. இதனாலேயே ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்தைக் கலைப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்திடமிருந்து இதுவரை பெறப்பட்டு வந்த நிலப் பாதுகாப்பு தொடர்பான விடயங்களைச் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்துக்கும், கடல்பாதுகாப்புசார் விடயங்களை இலங்கைக்கடற்படையிடமும் ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ரக்னா லங்கா நிறுவனத்திலுள்ள ஊழியர்கள் அனைவரும் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளவர்கள். அவர்கள் நிரந்தர ஊழியர்கள் அல்லர் - என்றார். (த-5)

# மனிதாபிமானத்துடன் போர் செய்த ராணுவம்

## சரத் அமுனுகம நற்சான்றிதழ்



யாழ்ப்பாணம், டிசெ. 8
எங்கள் இராணுவம் மனிதாபிமானத்துடனேயே போரைச் சந்தித்தது. அதை முன்னெடுத்துச் சென்றது. இன்று மத்திய கிழக்கு நாடுகளில் நடக்கும் சம்பவங்களைப் பார்க்கும்போது இங்கு எவ்வளவு மனிதாபிமானத்துடன் போர் முன்னெடுக்கப்பட்டது என்பதை எவரும் புரிந்து கொள்ளலாம். இவ்வாறு அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இங்கு நடைபெற்ற போரின்போது ஒரு சிலரின் செயற்பாடு தவறாக இருக்கலாம். அது கருப்புப் புள்ளியை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால், ஒட்டுமொத்த பாதுகாப்புக் கட்டமைப்பை எடுத்துக் கொண்டால் அதன் செயற்பாடு சிறப்பானது. மனிதாபிமானமிக்கது. எமது பாதுகாப்புப் படையின் பணியைக் கருணையுடன் பார்க்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அதேவேளை, ஹிலாரி கிளின்டனின் தோல்வி குறித்து பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. சிலர் அதிர்ச்சியடைந்துள்ளனர். வதைக்கும் - வதை கொடுக்கும் வகையிலான அயலுறவுக் கொள்கையையே அவர் அயலுறவுத்துறை அமைச்சராக இருக்கும்போது கடைப்பிடிக்கப்பட்டது.

இலங்கைக்குக் கடன் உதவி வழங்கவேண்டாம் என்று பன்னாட்டு நாணய நிதியத்துக்கு நேரடியாகக் கட்டளையிட்டார் என்று விக்கிலீக்ஸில் தகவல் கசிந்தது. எனவே, அவரின் தோல்வியொன்றும் வியப்புக்குரிய விடயமல்ல - என்றார். (த-5)



கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு யாழ். நகரில் விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் 'பாலன் தொட்டில்கள்'. (த)

# வடக்கின் பாதுகாப்பு கூட்டமைப்பின் கைகளில்

## சாடுகிறார் விமல் வீரவன்ச



யாழ்ப்பாணம், டிசெ. 8
வடக்குக்கான பாதுகாப்பைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தீர்மானிக்கின்றது என்று மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எவ்வித பாதுகாப்புக் கணிப்பீடுமின்றி வடக்கிலிருந்து இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு வருகின்றன. காணிகள் மீளக் கையளிக்கப்படுகின்றன எனக் குறிப்பிட்டு அந்த நடவடிக்கை நியாயப்படுத்தப்படுகின்றது.

புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். மேலும் சில புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். முன் அனுமதியின்றி வெளிநாட்டவர்கள் படைமுகாமுக்குள் நுழைகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டளையின் பிரகாரம்தான் வடக்குக்கான பாதுகாப்பு தீர்மானிக்கப்படுகின்றது. ஆவாக் குழுவினர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உடனடியாகப் பிணை கிடைக்கின்றது. இது ஏன் என்று புரியவில்லை.

வடக்கில் கரையோரப் பாதுகாப்பும் பலவீனமாகவே உள்ளது. இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து கடல் வளங்களைச் சூறையாடுகின்றனர். நடவடிக்கை எடுக்க வேண்டிய கடற்படையினருக்கும் கடிவாளம் போடப்பட்டுள்ளது.

நாட்டுக்காகப் பாடுபட்ட படையினர் பழிவாங்கப்படுகின்றனர். தண்டிக்கப்படுகின்றனர். ஊனமுற்ற படையினர் மீதும் தாக்குதல் நடத்தப்படுகின்றது. இதற்கிடையில் இந்தியாவுடன் எட்கா உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது. பாலம் அமைக்கப்படவுள்ளது. எட்கா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டால் இன்னும் 10 ஆண்டுகளில் இலங்கை இந்தியாவின் கொலனியாக மாறும் - என்றார்.

இதே விவாத்தில் கருத்துத் தெரிவித்த மற்றொரு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினரான கெஹலிய ரம்புக்வெல, துப்பாக்கியால் செய்ய முடியாததைக் கடதாசியால் செய்வதற்குக் கூட்டமைப்பு முயற்சிக்கின்றது என்றார். (த-5)

# மகிந்த வெளியேற்றியவர் யாழில் இப்போது தளபதி

## சபையில் கூறினார் பிரதமர்



யாழ்ப்பாணம், டிசெ. 8
மகிந்த ராஜபக்ச நாட்டை விட்டு வெளியேற்றியவரையே நாம் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக நியமித்துள்ளோம். அவர் ஈராக்கிலிருந்து அனுபவங்களுடன் வந்துள்ளார்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சு மீதான குழுநிலை விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கு எதிர்காலத்தில் ஏற்படும் எந்தவொரு அச்சுறுத்தலையும் முறியடிக்கும் வகையில் நவீனமயமான பாதுகாப்புக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

தற்போதைய உலகுக்கேற்ப நவீன இராணுவமொன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. இலங்கையில் போர் நடைபெற்றபோது நவீன வசதிகளுடன் கூடிய விமானங்கள் இருக்கவில்லை. விமானம் எனக் கூறி உக்ரைனில் இருந்து இரும்புக் கம்பியே கொண்டுவரப்பட்டது. விமானப் படைக்கு பல்நோக்குத் தாக்குதல் விமானமொன்றைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை முதற்றடவையாக அனுமதியளித்துள்ளது.

நவீன கப்பல்களையும் கொண்டு வரவுள்ளோம். அது கடலோர நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக மட்டுமல்லாது, கடல் முழுவதும் பயணித்து நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடியதாக இருக்கும். இலங்கை இராணுவம் நேபாளத்துக்குச் சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டது. ஐ.நா. அமைதிப் படையிலும் பணியாற்றி வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் 2 மாணவர்கள் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டால் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தால் நாம் கவலையடைகிறோம். தெற்கில் இப்படியொரு சம்பவம் நடைபெற்றிருந்தால் நிலைமை மோசமாகியிருக்கும்.

இதேநேரம், மேஜர் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்கவை நாம் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதியாக நியமித்துள்ளோம். போரின் போது பெரும் சேவையாற்றிய இவரை மகிந்த ராஜபக்ச ஆட்சியின்போது நாட்டை விட்டு வெளியேற்றி ஈராக்குக்கான தூதுவராக்கினர். அவர் அங்கு அனுபவங்களைப் பெற்றுவந்துள்ளார். பயங்காரவாதிகளிடம் இருந்த மக்களை காப்பாற்றுவதற்காகவே நாம் யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்தோம். ஆகவே, மக்களின் ஆதரவு எமக்கு இருந்தால்தான் இராணுவத்தினரின் எண்ணிக்கையை எவ்வாறு பயன்படுத்துவது என்று தீர்மானிக்க முடியும்.

பயங்கரவாதமும் மக்களும் ஒன்றிணைந்து காணப்பட்டால் மட்டுமே பிரச்சினை ஏற்படும். இந்த நிலைமையை நாம் மாற்றியமைத்து மக்களின் ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருகிறோம் - என்றார். (த-5)

# சுதேச மருத்துவ நியதிச் சட்ட விவாதம் தொடரும்

யாழ்ப்பாணம், டிசெ. 8
வடக்கு மாகாணத்தின் சுதேச மருத்துவத் திணைக்களத்தை உருவாக்குவதற்கான நியதிச் சட்டம் வடக்கு மாகாண சபையில் நேற்றைய தினம் இரண்டாவது வாசிப்புக்காக எடுக்கப்பட்டது. இதன்போது திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. இதன் தொடர்ச்சி அடுத்த அமர்வில் எடுக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், சுதேச மருத்துவத் திணைக்களத்தை உருவாக்குவதற்கான நியதிச் சட்டத்தின் இரண்டாம் வாசிப்பு இடம்பெற்றது. திருத்தங்கள் சபை உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டன. சபை மதியத்துடன் ஒத்தி வைக்கப்பட்டமையினால், இதன் மீது முழுமையான விவாதம் நடைபெறவில்லை. இதேவேளை, சுற்றுலாத்துறை தொடர்பான நியதிச் சட்டமும் அடுத்த அமர்வில் இரண்டாம் வாசிப்புக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது. (த-5-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சை நிலையங்களில் ஹிஜாப் அணியத் தடா

யாழ்ப்பாணம், டிசெ. 8

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கல்விப் பொதுத் தராதரச் சாதாரண தரப் பரீட்சை எழுதும் முஸ்லிம் மாணவிகள் அணிந்து சென்ற பர்தா மற்றும் ஹிஜாப்பை அகற்றுமாறு பரீட்சை அதிகாரிகள் கோரியதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

வடக்கின் முல்லைத்தீவு மாவட்டத்திலும், கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்திலும் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை கடந்த 6 ஆம் திகதி ஆரம்பமானது. இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் முஸ்லிம் மாணவிகளே நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். அவர்கள் தமது கலாசார முறைப்படி பர்தா மற்றும் ஹிஜாப் அணிந்து பரீட்சை நிலையங்களுக்குச் சென்றுள்ளனர். அங்குள்ள பரீட்சை மேற்பார்வை அதிகாரிகள் அதனை அகற்றுமாறு பணித்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தின் முள்ளிப்பத்தானையில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தின், தண்ணீர் ஊற்று முஸ்லிம் மகா வித்தியாலத்தில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவிகளுக்கும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

'பர்தாவுடன் பரீட்சை மண்டபத்திற்குச் சென்றோம். அங்கிருந்த பரீட்சை மேற்பார்வையாளர் பர்தாவை அகற்றினால்தான் பரீட்சைக்கு தோற்ற முடியும் என்று குறிப்பிட்டார். இனிவரும் நாள்களில் தாவணி அணிந்து வருமாறும் பணித்தார். பர்தாவை அகற்ற மறுத்தால் சுட்டெண்களைப் பரீட்சை திணைக்களத்திற்கு அனுப்பி, பரீட்சைப் பெறுபேறுகளை வெளிவராமல் தடுப்போம் எனவும் எச்சரித்தார் என்று முஸ்லிம் மாணவிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பில் நேற்றுக் கேள்வி எழுப்பப்பட்டது.

'சாதாரணத்தரப் பரீட்சை எழுத வந்த முஸ்லிம் மாணவிகளுக்கு ஹிஜாபை கழட்டிவிட்டு வருமாறும், கிழக்கில் புதிதாக ஆசிரியர் நியமனங்களைப் பெற்றுள்ள முஸ்லிம் ஆசிரியர்களுக்கு ஹிஜாப் அன்றி சேலை அணிந்து வருமாறும் அதிகாரிகளால் பணிக்கப்பட்டுள்ளது. இது அரசின் கொள்கையா?' என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் ராஜித,

இல்லை. அரசு அவ்வாறு ஒருபோதும் கூறியதே இல்லை. ஹிஜாப் என்பது முஸ்லிம் பெண்களின் கலாசார ஆடையாகும்;. இதனைத் தானே அவர்கள் அணிந்து வருகிறார்கள். இந்த நிலையில், இதனை அணிந்து வர வேண்டாம் என்று கூற எவராலும் முடியாது. மீறி அவ்வாறு அறிவிக்கப்படுமானால் உடனடியாக எமக்கு அறியத் தாருங்கள். நாம் அந்த அதிகாரிகள் தொடர்பில் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம் - என்றார்.

'பரீட்சை மண்டபங்களில் முஸ்லிம் பெண்களின் கலாசார ஆடை சில நேரங்களில் தவறான முறையில் பயன்படுத்தப்படுவதாலேயே அதனை அணிந்துவர வேண்டாம் என்று சிலரால் கூறப்பட்டுள்ளதாகஎமக்குத்தெரிய வந்துள்ளது. எவ்வாறாயினும், அது அரசின் கொள்கை கிடையாது' என்று பிரதியமைச்சர் கருணாசேன பரணவித்தானவும் இதற்குப் பதில் வழங்கினார்.

பரீட்சைக்கு தோற்றும் பரீட்சாத்தி ஒருவரின் காதுகள் தெரியும் படி இருக்கவேண்டும் என்று பரீட்சைத் திணைக்களத்தின் புதிய சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுவே குழப்பங்களுக்குக் காரணமாக அமைவதாகக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. (த-5-21)

# வடமாகாண எதிர்க்கட்சி தலைவராவதில் தவநாதன் தீவிரம்

## அவரது கோரிக்கையை உடனேயே நிராகரித்தார் வடக்கு அவைத் தலைவர்

யாழ்ப்பாணம், டிசெ. 8

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கைப்பற்றுவதற்கு, எதிர்க்கட்சி உறுப்பினர் வை.தவநாதன் தீவிர முயற்சியை மேற்கொண்டுள்ளார். வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவே என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அந்த அறிவிப்பைத் தீர்மானத்தை மீளாய்வு செய்யுமாறு வை.தவநாதன் சபையில் நேற்றுக் கோரிக்கை விடுத்தார். அவைத் தலைவர் அதனை உடனடியாகவே நிராகரித்தார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று நடைபெற்றது. எதிர்க்கட்சித் தலைவராகத் தவராசாவை நியமித்ததை மீளாய்வு செய்யுமாறு எதிர்க்கட்சித்தலைவர் பதவிக்குப்பெயர்பிரேரிக்கப்பட்ட வை.தவநாதன் கோரிக்கை விடுத்தார். வடக்கு மாகாண சபையில் கடந்த இரண்டு தடவைகள் எதிர்க்கட்சித் தலைவர் நியமனத்தின் போது பின்பற்றப்பட்ட நடைமுறையை (கட்சியின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டவர் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்) இப்போது ஏன் பின்பற்றவில்லை என்று கேள்வி எழுப்பினார். புதிய முறைமையில் எதிர்க்கட்சித் தலைவர் நியமிக்கப்பட்டதை மீளாய்வு செய்யுமாறு கோரினார்.

இதற்குப் பதிலளித்த அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், நாடாளுமன்றச் சம்பிரதாயங்களையும், உரிய மரபுகளையும் பின்பற்றியே இந்த விடயம் தீர்மானிக்கப்பட்டது. இந்த விடயத்தில் மீளாய்வு செய்ய முடியாது. எதிர்க்கட்சிகள் தமக்குள் முடிவை எட்டாது அவை வரை கொண்டு வந்ததே பொருத்தமற்ற விடயம். அவைக்கு வந்தமையினால் எனது பொறுப்புக்கும், சம்பிரதாயத்திற்கும் ஏற்ப உரிய தீர்ப்பின் அடிப்படையில் நீதியாக தீர்வு எட்டப்பட்டது என்றார். (த-5-101)

# திட்டங்களை மாற்றுமாறு கோருகின்றனர் அதிகாரிகள்

## எம்.பி.சிகள் விசனம்

மாகாண சபை உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டுக்கு வழங்கிய திட்டங்களை வருட இறுதியில் மாற்றுமாறு அதிகாரிகளினால் கோரப்படுகின்றது. இது ஏன் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சபையில் நேற்றுக் கேள்வி எழுப்பினர்.

வடக்கு மாகாண சபையின் 67 ஆவது அமர்வு நேற்று நடைபெற்றது. இதன்போதே மேற்படி விடயம் சபையின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

ஆளும் கட்சி உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவிக்கையில், 2016ஆம் ஆண்டுக்கு எமது பன்முகப்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டில் திட்டங்களை முன்மொழிந்திருந்தோம். அதில் மூன்று திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாது. அதற்கு மாற்றுத் திட்டங்கள் சமர்ப்பிக்குமாறு ஆண்டின் இறுதியில் கோருகின்றனர். இதனை நடைமுறைப்படுத்த முடியாது என்பதைக் கூட ஆரம்பத்தில் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் அறிவிக்கவில்லை. தலைமைச் செயலர் அலுவலகமே அறிவித்தது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் கீழ் வலி. மேற்குப் பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் குழாய்க் கிணறு அமைக்க முடியாது என்று கூறுகின்றனர். ஆனால் அதே பிரதேசத்தில் வேறு குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன -என்றார்.

மற்றொரு ஆளும் கட்சி உறுப்பினரான எம்.தியாகராசா, ஆண்டின் ஆரம்பத்தில் நாம் கொடுத்த திட்டங்களுக்குரிய வேலைகள் இன்னும் நடைபெறவில்லை என்றார்.

# ஜெயாவின் மறைவுக்கு தொடர்ந்து இரங்கல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 8

தமிழகத்தின் முதலமைச்சராக இருக்கும்போது உயிரிழந்த ஜெயலலிதாவுக்கு, ஈழத் தமிழ்த் தலைவர்கள், அமைப்புக்கள் என்பனவும் தொடர்ச்சியாக இரங்கல் தெரிவித்து வருகின்றன.

'கொடிய ஆணாதிக்க சமூகத்தில், தனித்து நின்று போராடி வென்ற முன்மாதிரி பெண் போராளி வீர மங்கை ஜெயலலிதா. அவரை, தமிழக தமிழின தல்லைவர் என்று வரையறை செய்வது குறைத்து மதிப்பிடுவதாகும். தமிழக தமிழர்களைவிட, அவரைப் போற்றிக் கொண்டாட, பெண்ணுரிமையாளருக்கும், பால் சமத்துவவாதிகளுக்கும் மிக அதிகமான காரணங்களும், உரிமைகளும் இருக்கின்றன. இதுவே அவரைப் பற்றிய நியாயமான கணிப்பீடு என்று நான் நம்புகிறேன்' இவ்வாறு அமைச்சர் மனோ கணேசன் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

''மார்கிரட் தச்சர், இந்திரா காந்தி வரிசையில் செல்வி ஜெயலலிதாவும் இரும்புப் பெண்மணியாகத் தமிழகத்தை ஆட்சி செய்திருந்தார். செல்வி ஜெயலலிதா தனது அரசியல் வாழ்வில் பல நெருக்கடிகளையும் சோதனைகளையும் சந்தித்தபோது அவற்றை எதிர்கொண்டு மக்கள் சேவையில் தொடர்ந்தும் ஈடுபட்டார். இதனால் தமிழக மக்கள் மத்தியில் அழியாத இடத்தினை அவர் தக்க வைத்துள்ளார்' என்று அனுதாபச் செய்திக் குறிப்பில் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

'தமிழ் மக்களுடைய பிரச்சினைகளில் என்றுமே ஒரு யதார்த்தவாதியாகவும், தமிழ் மக்களுடைய விடுதலையில் யதார்த்தத்துடன் அதீத அக்கறை கொண்டவராகவுமே ஜெயலலிதா திகழ்ந்திருக்கின்றார்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் தனது இரங்கல் உரைக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அனுதாபக் குறிப்பில், 'இலங்கைத் தீவில் தொடர்ச்சியான இன ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டு, நாதியற்ற நிலைக்குத் தள்ளப்பட்ட ஈழத் தமிழ் மக்கள் மீதான இன வழிப்புக்கு நீதி நிடைக்க வேண்டும் என்பதிலும், இணைந்த வடக்கு கிழக்கு தாயகத்தில் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும் என்பதிலும் மிகவும் பற்றுறுதியுடன் செயற்பட்டார். இவை தொடர்பில் சட்ட சபையில் தீர்மானங்களை இயற்றியதுடன், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் மிகவும் உறுதியான நிலைப்பாட்டுடன் ஜெயலலிதா அம்மையார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார்' என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

'தமிழர் விடிவுக்காய் பாடுபட்ட தமிழ்க் குலத்தின் தாயின் இழப்பு ஈடு செய்ய முடியாதது' என்று அகில இலங்கை இந்து மாமன்றம் தனது செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது. (த-5)

# புரண்டது கார்; இருவர் படுகாயம்

மட்டக்களப்பு, டிசெ. 8

மட்டக்களப்பு - கொழும்பு வீதியில் ஊறணிப் பகுதியில் சென்று கொண்டிருந்த காரொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த இருவர் காயங்களுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

வீதியில் வேகமாகச் சென்றுகொண்டிருந்த கார் சடுதியாகக் குடை சாய்ந்து விபத்துக்குள்ளானது. காருக்குள் அகப்பட்டிருந்தவர்களை வீதியால் சென்றவர்கள் கதவை உடைத்து வெளியே இழுத்தெடுத்து வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். (த-ய-46)



ஜேர்மனியின் இலங்கைக்கான புதிய தூதுவர் ஜோன் ரோட் நேற்று நாடாளுமன்றத்தில் சபாநாயகர் கரு ஜயசூரியவைச் சந்தித்து கலந்துரையாடினார். இரு நாடுகளுக்குமிடையில் நாடாளுமன்ற இராஜதந்திர உறவுகளை மேம்படுத்திக்கொள்ளல், இலங்கையில் அரசியல் கல்வியை விரிவுபடுத்தும் நோக்கில் ஜேர்மன் நாட்டின் உதவியைப் பெற்றுக்கொள்ளல் போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு வாடகைக்கு தேவை
தனியார் நிறுவனம் ஒன்றுக்கு
வவுனியா நகர்ப்பகுதி /
குருமன்காட்டு பிரதேசத்தில் வீடு
வாடகைக்குத் தேவை.
(C 26939)
(14.18.21)
தொடர்பு: 071 8 695 695

# யாழ். பொது நூலகத்தை எரித்தவர்கள் புலிகளா ?

## ஜனாதிபதி விசாரணைக் குழு அமைத்து விசாரிக்க வேண்டும் என்கிறார் கம்மன்பில

யாழ்ப்பாணம், டிசெ. 8

யாழ். பொது நூலகத்தை எரித்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் குண்டர் குழுவா அல்லது புலிகள் அமைப்பா? என்பதை ஜனாதிபதி விசாரணைக் குழு அமைத்து கண்டறிய வேண்டும்.

இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில சபையில் நேற்றுக் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தச் சபையில் நேற்று (நேற்று முன்தினம்) தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளார், ஆனால், எவரின் சார்பில் மன்னிப்புக் கோரப்படுகின்றது என்பதை அவர் விளக்கவில்லை.

எட்வட் குணவர்தன என்ற மூத்த பொலிஸ்மா அதிபரின் சுயசரிதையில், புலிகள்தான் ஆரம்பத்தில் யாழ். நூலகத்தை எரித்தனர் என்றும், அதன் பின்னரே தெற்கிலுள்ள குண்டர்கள் இணைந்தனர் என்றும் மாற்றுக் கருத்தொன்றை முன்வைத்துள்ளார். அப்படியானால் புலிகளின் சார்பில் பிரதமர் மன்னிப்புக் கோருகின்றாரா என்ற சந்கேமும் எழுகின்றது.

எது எப்படியோ இதைச் செய்தது யார் என்பதைக் கண்டறிவதற்காக ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவொன்றை அமைத்தாலும் பரவாயில்லை என்றார்.

(த-5)

# முப்படைகளினுள்ளும் தமிழரை ஈர்க்கவேண்டும்

## வலியுறுத்துகிறார் பொன்சேகா

யாழ்ப்பாணம், டிசெ. 8

முப்படையினுள்ளும் தமிழர்கள் உள்வாங்கப்படவேண்டும். காணாமற்போனவர்களுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்த அமைச்சர் சரத் பொன்சேகா, ஒற்றையாட்சியில் எந்த மாற்றமும் கொண்டு வரக்கூடாது என்று வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பை ஏற்படுத்தும் பணி இடம்பெற்று வருகின்றது. தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை வழங்கி நல்லிணக்கத்தை ஏற்படுத்தவேண்டும். அமையவுள்ள புதிய அரசமைப்பில் அது உறுதிப்படுத்தப்படவேண்டும். ஒற்றை யாட்சி என்ற பதத்தில் எவ்வித மாற்றமும் வரக்கூடாது. பௌத்தத்துக்குள்ள முன்னுரிமையும் அப்படியே இருக்கவேண்டும்.

போர்க் காலத்தில் முப்படையில் இணைவதற்குரிய வாய்ப்பைப் புலிகள் தமிழர்களுக்கு வழங்கவில்லை. தற்போது தமிழர்களுக்கு கதவுகள் திறக்கப்படவேண்டும். காணாமற்போனவர்களின் உறவினர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். இராணுவமென்பது எண்ணிக்கையில் மட்டுமல்ல, ஆயுத ரீதியிலும் பலமடைய வேண்டும். உள்ளக அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்கத் தயார் நிலையில் இருக்க வேண்டும் - என்றார்.

(த-5)

# கருணா பிணையில் விடுவிப்பு

கொழும்பு, டிசெ. 8

அரச வாகனத்தை முறைகேடாகப் பயன் படுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் இருந்த கருணா அம்மான் நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நிதிக் குற்றப் புலனாய்வு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட கருணா அம்மான் என்றழைக்கப்படும் முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

கொழும்பு முதன்மை நீதிவான் மன்றில் அவர் நேற்று முற்படுத்தப்பட்டபோது, அவரைப் 10 இலட்சம் ரூபா ரொக்கம் மற்றும் 50 இலட்சம் ரூபா பெறுமதியான நான்கு ஆள் பிணைகளில் விடுவிக்கப்பட்டார்.

அத்துடன், வெளிநாட்டுக்குச் செல்லமுடியாது என்று தடை விதித்த நீதிவான் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நிதிக் குற்றப் புலனாய்வு பொலிஸார் முன்னிலையில் முற்பட வேண்டும் என்று உத்தரவிட்டார். இந்த வழக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (வ-4)

# நல்லூர் கலாசாரப் பெருவிழா நாளை

யாழ்ப்பாணம், டிசெ.8

நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவையும் நல்லூர் பிரதேச செயலகமும் வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாச்சார அலுவல்கள் திணைக்களம் அனுசரணையில் நடத்தும் பண்பாட்டு பெரு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கல்யாண மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச செயலாளரும் கலாசார சபை மற்றும் கலாசார பேரவைத் தலைவருமான ஆள்வாப்பிள்ளை சிறி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம், சிறப்பு விருந்தினராக நல்லூர் கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் இ.நிசாந் தன், கௌரவ விருந்தினராக அரியாலை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சமாசத்தின் முன்னாள் தலைவர் தம்பு சிவலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-422)

# வணிகர் மன்றத்தின் அறிவித்தல்

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட வணிகர்கள் வணிக நிலையங்களில் பணியாற்றுவோர் ஆகியோருக்கான (தொழில் வழங்குபவர்களுக்கும் தொழில் கொள்வோருக்கும்) ஊழியர் நம்பிக்கை நிதிய சேவைகள் மற்றும் நலன்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு மன்ற மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கருத்தரங்கில் வளவாளர்களாக ஊழியர் நம்பிக்கை நிதிய யாழ்.மாவட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளதால் பிரச்சனைகளை எதிர்நோக்கும் தொழில் வழங்குவோர் மற்றும் தொழில் கொள்வோர் தவறாது கலந்து கொண்டு தமது பிரச்சனைகளை முன்வைக்குமாறு மன்றச் செயலாளர் கேட்டுள்ளார். (வ- 9)

## ஈ.பி.டி.பியினரே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யன். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இருந்தவரும் ஈ.பி.டி.பி. கட்சியில் முக்கிய பொறுப்பில் இருந்தவருமான நடராஜா மதன ராஜா அல்லது மதன், ஈ.பி.டி.பி. கட்சியைச் சேர்ந்த அன்ரன் ஜீவராஜா அல்லது ஜீவன் ஆகியோருக்கு இரட்டைத் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது. அவர்கள் மீது 47 குற்றங்கள் சுமத்தப்பட்டன. அவற்றில் நிரூபிக்கப்பட்ட 23 குற்றங்களுக்காக அவர்களுக்கு 20 வருடக் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தேர்தல் பரப்புரைக்காக ஊர்காவற்றுறைக்குச் சென்றுகொண்டிருந்தனர். யாழ். மாவட்டத்தின் தீவுப் பகுதியில் அமைந்துள்ளது ஊர்காவற்றுறை. வாகனத்தில் கும்பலாக வந்தவர்களால் நாரந்தனைப் பகுதியில் இவர்கள் வழிமறிக்கப்பட்டுத் தாக்கப்பட்டனர். இதில் ஏரம்பு பேரம்பலம், யோக சிங்கம் கமல்ஸ்டோன் ஆகிய இருவரும் படுகொலை செய்யப்பட்டனர். அடித்ததாலும் வெட்டியதாலும் ஏற்பட்ட காயங்களால் அவர்கள் உயிரிழந்தனர். மேலும் 18 பேர் காயமடைந்தனர்.

இந்த வழக்கில் மதன், நெப்போலியன், ஜீவன் ஆகிய 3 பேர் மீதும் உடனடியாகவே குற்றஞ்சாட்டப்பட்டது. அவர்கள் ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டது. வெளியே வந்ததும் மதன், நெப்போலியன் ஆகியோர் வெளிநாட்டுக்குத் தப்பி ஓடிவிட்டனர்.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றிலிருந்து சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் திருகோணமலை மேல்நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது. அங்கு நான்காவது சந்தேகநபராக வேலணை பிரதேச சபைத் தலைவராக இருந்த நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தியும் வழக்கில் சேர்க்கப்பட்டார். இரண்டு மாதங்களுக்கு முன்னர் வழக்கு விசாரணை யாழ். மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது.

சந்தேகநபர்கள் 4 பேருக்கும் எதிராக 2 கொலைகள், 18 பேருக்குக் காயம் ஏற்படுத்தியமை, மூன்று வாகனங்களை அடித்துச் சேதமாக்கியமை, சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியமை உள்ளடங்கிய 47 குற்றச்சாட்டுக்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்டன.

முதலாம், இரண்டாம் எதிரிகளான மதன் மற்றும் நெப்போலியன் ஆகியோர் மன்றில் முன்னிலையாகாத நிலையிலேயே வழக்கு முன்னெடுக்கப்பட்டது. 3 ஆம் 4 ஆம் எதிரிகள் மன்றில் முன்னிலையாகி வந்தனர்.

வழக்கில் 4 ஆம் எதிரியான கருணாகரகுருமூர்த்தியை 47 குற்றச்சாட்டுகளிலும் குற்றமற்றவராகக் கண்டு விடுவிப்பதாக நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

"வழக்கில் ஒன்று தொடக்கம் 24 வரையான குற்றச்சாட்டு சட்டவிரோத கூட்டம் கூடியமை தொடர்பானது. சட்டவிரோத கூட்டம் கூடியமைக்கு குறைந்தது 5 பேர் இருக்கவேண்டும். ஆனால் 4 பேர் இருப்பதனால் ஒன்று தொடக்கம் 24 வரையான குற்றச்சாட்டிலிருந்து 1 ஆம், 2 ஆம், 3 ஆம் எதிரிகள் விடுதலை செய்யப்படுகின்றனர். இருவரைக் கொலை செய்தமை நிரூபிக்கப்பட்டுள்ளதனால் இவர்களுக்கு இரட்டைத் தூக்குத் தண்டனை வழங்கப்படுகிறது" என்று யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

இதனைவிட மாவை. சேனாதிராசா மற்றும் சிவாஜிலிங்கம் ஆகியோரையும் தாக்கிய குற்றத்துக்காக குறித்த 3 எதிரிகளுக்கும் தலா 5 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ஏனைய 23 குற்றங்களுக்காகவும் தலா 15 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

தவிர ஒரு லட்சம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. அதனைச் செலுத்தத் தவறின் மேலும் 5 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. "தண்டனைக் காலத்தை ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்கவேண்டும்" என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

மதனராசா, நெப்போலியன் ஆகியோரைக் குற்றவாளிகளாக மன்று தீர்மானித்ததால் ஐரோப்பிய நாடுகளில் இருக்கும் அவர்களை நாடு கடத்த தேவையான நடவடிக்கைகளைச் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் எடுக்கவேண்டும் என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டார். தலைமறைவாகியுள்ள குற்றவாளிகள் இருவருக்கும் எதிராக மேல் நீதிமன்று மீண்டும் பகிரங்க பிடியாணையையும் பிறப்பித்தது.

நீதிபதி தனது தீர்ப்புக்கான காரணங்களை வாசித்த பின்னர் திறந்த நீதிமன்றில் அனைவரும் எழுந்து நிற்க மின் குமிழ்கள் அணைக்கப்பட்டன. மன்றில் அமைதி கொண்டுவரப்பட்டது. "3 எதிரிகளும் இந்த வழக்கில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டுள்ளதனால் ஜனாதிபதி தீர்மானிக்கும் தினத்தில் விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்தில் 3 பேரும் உடலிலிருந்து உயிர் பிரியும்வரை தூக்கில் தொங்கவிடப்படுவீர்கள்" என்று தனது தீர்ப்பை அறிவித்த நீதிபதி மா.இளஞ்செழியன் தண்டனைத் தீர்ப்பில் கையொப்பமிட்டுப் பேனையை உடைந்து எறிந்தார். (உ-4,6)

## சி.ஐ.டியினர்...

இவ்வாறு சித்திரவதைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் ஜெனிவாவில் எழுப்பப்படும் கேள்விகளுக்கு இலங்கை அரசின் பதில்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை என்றும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

கடந்த 15 மற்றும் 16ஆம் திகதிகளில் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. வின் சித்ததிரவதைகளுக்கு எதிரான குழுவின் 51ஆவது கூட்டத்தொடரின் போது இலங்கையில் இடம்பெற்ற சித்திரவதைகள் தொடர்பில் ஆராய்ந்த நிலையிலேயே ஐ.நா குழு 14 பக்க அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது.

ஐ.நாவின் சித்திரவதைகளுக்கு எதிரான குழு, இலங்கை தொடர்பில் 5ஆவது தடவையாக நடத்திய மீளாய்வுக் கூட்டத்தொடரில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்றுகூறி புனர்வாழ்வு வழங்கியதாக இலங்கை அரசு கூறும் 12 ஆயிரத்திற்கும் அதிகமானோர் தடுப்பில் வைத்திருந்தபோது மேற்கொள்ளப்பட்ட பாலியல் வன்கொடுமைகள் உட்பட சித்திரவதைகள் தொடர்பிலான விசாரணைகளுக்காக சுயாதீன விசாரணை ஆணைக்குழுவொன்றை உடனடியாக அமைக்கவேண்டும்.

கைதுசெய்யப்படும் நபர்கள் செய்த குற்றம் எதுவாக இருந்தாலும் பதிவுசெய்யாது முதல் சில மணி நேரங்கள் தடுத்து வைத்திருப்பது, நீதிவான் முன்னிலையில் நிறுத்தாது தடுத்து வைத்திருப்பதன் ஊடாக பொலிஸார் சித்திரவதைக்கான ஏற்பாடுகளை செய்து கொள்கின்றனர்.

வழக்கு விசாரணைகளுக்கு முன்னதாக மேற்கொள்ளப்படும் சித்திரவதைகள் தொடர்பில் நீதிவான்களால் விசாரணைக்கு உட்படுத்தாமை மற்றும் சந்தேக நபர்களை தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைத்திருப்பதற்கு பொலிஸார் விடுக்கும் கோரிக்கைக்கு எந்த வித விசாரணையும் இன்றி நீதிமன்றினால் அனுமதி வழங்கப்படுகின்றமை ஆகியன சித்திரவதைகள் தடையின்றித் தொடர்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளன - என்றுள்ளது.

ஊடகவியலாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், உள்ளூர் மற்றும் பன்னாட்டு பொது அமைப்புக்கள் ஆகியவற்றினால் வழங்கப்பட்ட தகவல்கள் மாத்திரமன்றி, இலங்கை அரச தரப்பினாலும் வழங்கப்பட்ட அறிக்கைகளை மையப்படுத்தியே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாநாட்டில் எழுப்பப்படும் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்காக அரசு சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் ஜெனிவாவிற்கு அனுப்பியிருந்த 11 பேர் அடங்கிய பிரதிநிதிகள் குழுவினால் வழங்கப்பட்ட பதில்கள் தொடர்பில் திருப்தியடைய முடியாது என்று ஐ.நா. குழு குறிப்பிட்டுள்ளது.

சட்ட பாதுகாப்பு பலவந்தமாக குற்றத்தை ஒப்புக்கொள்ளச் செய்வதை தடுத்தல், சித்திரவதைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பது, கடந்தகால குற்றச்செயல்கள் தொடர்பிலான பொறுப்புக்கூறல் ஆகியவற்றைநிறைவேற்ற இலங்கை அரசு தவறிவிட்டதாக ஐ.நா. குழு குற்றம்சாட்டியுள்ளது. (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டதாரி ஆசிரியர் ஆள்சேர்ப்பு போட்டிப் பரீட்சை டிசெம்பர் 18

யாழ்ப்பாணம், டிசெ. 8

வடக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு-1(அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு பட்ட தாரிகளை ஆள்சேர்ப்பு செய்வதற்கான தமிழ் மொழிமூல மான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ்ப் பாணம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் என்று வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலர் திருமதி ரூ.வரதலிங்கம் அறிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் பரீட்சைக்காக விண்ணப்பித்த தகைமையுடைய விண்ணப்ப தாரிகளுக்கு ஏற்கனவே அனுமதி அட்டைகளை அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் தாங் கள் பரீட்சைக்கு விண்ணப்பித்தமைக்கான சான்றுகளுடன் இல 393/48 கோவில் வீதி நல்லூர் எனும் முகவரியிலுள்ள வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அலு வலகத்துக்கோ அல்லது 021 - 2219939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவேண்டும் - என்றார். (வ- 8)

## சிவாகமப் பேருரை

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்ப்பாணம் இந்து சம யப் பேரவையின் ஏற்பாட் டில் தமிழ்நாட்டு முது பெரும் பேராசிரியர் ஆர். தியாகராஜாவின் வேத சிவாகமப் பேருரை நாளை மறுதினம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. பேரவை நடராஜர் மண்ட பத்தில் மு.ப 10 மணிக்கு நடைபெற உள்ள நிகழ் வில் "பரார்த்த பூசையின் அழநாதம் ஆன்மார்த்த பூசையே" எனும் தொனிப் பொருளிலான பேரு ரையை தமிழ் நாட்டு முது பெரும் பேராசிரியர் ஆர். தியாகராஜா நிகழ்த் துவார் என்று தெரிவிக்கப் பட்டது. (வ)


## கோழிக் குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kg மேல் வளர்ச்சியடையக் கூடிய
NO- 1 புறொயிலர் குஞ்சுகள் 10.12.2016 விநியோகிக்கப்படும்.
பதிவுகளை மேற்கொள்ளவும்.
விலை 85/= வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும்.

**ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.** (J 6629) (22,18,21) **077 609 0926**



## சாவகச்சேரி பிரதேசபை - கொடிகாமம்
## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2017

சபையானது 2017 ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள்,உற்பத்தியாளர்கள் ஒப்பந்த காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை எமது அலுவலகத்தில் **1170.00** ரூபாவைச் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பங்கள் யாவும் **31.01.2017**ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

01. பொருள்கள் வழங்குதல் (பொது)
    1. காகிதாதிகள் எழுதுபொருள்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள்
    2. தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/உருக்கு)
    3. கணினிகள் கணினியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள்
    4. பன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள்
    5. நீர் குழாய்கள் பைப்புக்கள்,பைப் இணைப்புக்கள் மற்றும் அதனோடு இணைந்த பொருள்கள்
    6. கட்டட இரும்புப்பொருள்கள் பெயின்ற், வாணிஸ் மற்றும் காட்வெயார் பொருள்கள்
    7. மின்சாரப்பொருள்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டார்கள், மின்சாரப் பல்புக்கள்,மின் விசிறிகள்,மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருள்கள்
    8. தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம்,மொப்பர், மற்றும் ஏனையவை.
    9. அழுக்கும் நீக்கும் பவுடர்கள்,விம், காப்பிக், மற்றும் கிருமி நாசினிகள், ஏனையவை
    10. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், ரயர், ரியூப் மற்றும் ஏனையவை
    11. தோல் உற்பத்தி பொருள்கள், சப்பாத்துக்கள்
    12. இறப்பர் முத்திரைகள்
    13. நூலகங்களுக்கான நூல்கள்
02. பொருள்கள் வழங்குதல் (மருத்துவம்)
    1. சித்த மருத்துவ மருந்துகள்
    2. மருத்துவ உபகரணங்கள்
03. சேவை விவரம்
    1. உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல்
    2. மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் (தொலைநகல் இயந்திரம், நிழற்பட இயந்திரம்)
    3. மின் மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரம், மின் விசிறிகள்,ஜெனரேற்றர்கள் திருத்தலும் மீள முறுக்குதலும்
    4. பதிப்பக வேலை - சகல வித படிவங்கள் - ஏனையவை
    5. கட்டட திருத்த வேலை , உள்ளக தொலைபேசி பராமரித்தல்
    6. வாகனங்களுக்கான ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள்
    7. கணினிகள் பழுதுபார்த்தலும்,சேவிஸ் செய்தலும்
04. வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும்
    1. சகல விதமான வாகனத்திருத்தமும், வாகன உட்பக்கம், சீற் கவர் என்பவற்றுக்கான குசன் வேலை
    2. சகல விதமான வாகனங்களும் சுத்திகரிப்புச் செய்தல்.
05. ஒப்பந்தகாரர் பதிவு செய்தல்
    1. இக்றாட் பதிவு உள்ளவராக இருத்தல் வேண்டும்
    2. பதிவின் போது இக்றாட் பதிவுப் புத்தகம் சமர்ப்பிக்க வேண்டும்
    3. பதிவின் போது இக்றாட் பதிவுத்திகதி காலவதியற்றதாக இருத்தல் வேண்டும்
    4. செய்யப்பட்ட வேலைகளின் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்

நிபந்தனைகள்
1. வழங்கல்கள்/ சேவைகள் 2017 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்
2. திருப்திகரமற்ற வழங்கல்கள்/ சேவைகளை நிராகரிக்கும் உரிமை செயலாளருக்கு உண்டு.
3. பதிவிற்காக பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை செயலாளருக்கு உண்டு
4. பதிவு செய்யப்படாதவர்களிடமிருந்தும் வழங்கல்களையும் சேவைகளையும் பெற்றுக்கொள்ளவும் ஒப்பந்தங்களை வழங்கவும் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.
2016.12.08.



## DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

## பெறுமதிமிக்க வதிவிட சொத்து விற்பனை (வீடு) இற்கான கேள்வி கோரல்

**யாழ்ப்பாணம்**

➤ **யாழ். பல்கலைக்கழக பின் வீதியில் (தபாற்பெட்டி வீதி)**

**மக்கள் வங்கியிலிருந்து 75 மீற்றர் தொலைவில்**

1761 சதுர அடி 3 பரப்பு 4.07 குழி (32.26 பேர்ச்சஸ்)

08 படுக்கையறை கொண்ட வீடு.

தபால் உறையிடப்பட்ட கேள்வி மனுக்களை எமது கிளைக்காரியாலயமான **DFCC வங்கி PLC, இல.141, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்வி மனுப் பெட்டியில் 20 ஆம் திகதி மார்கழி மாதம் 2016 அன்றோ அல்லது அதற்கு முன்போ இடவும்.**

கிடைக்கப்பெறும் கேள்வி மனுக்களின் சிலவற்றையோ அல்லது அனைத்தையுமோ நிராகரிக்கும் உரிமை DFCC வங்கிக்கு உண்டு.

**விவரங்களுக்கு:**

**DFCC வங்கி PLC**

**யாழ்ப்பாணக்கிளை.**

**தொ.பே.** 021 222 1888/ 021 222 1444/ 021 222 1666

**த.சதிஷன், ஆ.விஸ்வாகரன், இ.திருவரங்கன்**

(அலுவலக நேரத்தில் மாத்திரம்)

(c.26964), (13.18.21)

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்

1. வணிக முதற் தேர்வு- 2014 (புதிய பாடத்திட்டம் - இறுதிச் சந்தர்ப்பம்)
2. வணிக இரண்டாம் தேர்வு- 2014 (புதிய பாடத்திட்டம்)
3. வணிக மூன்றாம் தேர்வு- 2014 (புதிய பாடத்திட்டம்)
4. வணிக நான்காம் தேர்வு- 2014 (புதிய பாடத்திட்டம்)
5. வணிக முதற் தேர்வு- 2014 (பழைய பாடத்திட்டம் - மீள் பரீட்சை - இறுதிச் சந்தர்ப்பம்)
6. வணிக மாணி–பகுதி–I– 2014 (பழைய பாடத்திட்டம் - மீள் பரீட்சை)
7. வணிக மாணி–பகுதி–II– 2014 (பழைய பாடத்திட்டம் - மீள் பரீட்சை)
8. வணிக மாணி–பகுதி–III– 2014 (பழைய பாடத்திட்டம் - மீள் பரீட்சை)

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிகவிரைவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா.300/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா.300/= க்கான காசுக்கட்டளை/தபாற் கட்டளையை சுய முகவரியிடப்பட்ட ரூபா.70/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன் இணைத்து, **சிரேஷ்ட உதவிப் பதிவாளர்,திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு: **அரையாண்டு பருவ அடிப்படையிலான கற்கைக்கால அளவுப் பெறுமதியிடப்பட்ட கற்கை அலகு முறைமை (Semester based course unit system and Grade Point Average evaluation) விரைவில் அறிமுகப்படுத்தப்பட இருப்பதால், ஏற்கனவே வணிகமாணிக் கற்கைநெறிக்கு பழைய மற்றும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பதிவுகளை மேற்கொண்டவர்கள், மேற்படிபரீட்சைகளுக்கு விண்ணப்பித்து, விரைவில் தங்கள் கற்கைநெறிகளை பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.**

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி 06.01.2017 (வெள்ளிக்கிழமை) ஆகும். பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற அலுவலக தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
07.12.2016


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 100 மாணவர்களுக்கு சைக்கிள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.8

வலி.மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பாடசாலைகளை சேர்ந்த 100 மாணவர்களுக்கு இன்றுவியாழக்கிழமைதுவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு வேள்ட் விசன் நிறுவன சங்கானைப் பிரதேச அபிவிருத்தித்திட்ட முகாமையாளர் வி.வென்சஸ் தலைமையில் இன்று மு.ப. 10 மணிக்கு வலி.மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

ஜேர்மனி அரசின் 1.3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின் கீழ் வலி.மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட 15 கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களே இவ்வாறு நன்மை அடையவுள்ளனர்.

இந்த நிகழ்வுக்கு வலி.மேற்குப் பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-50)

# 2 இரும்புப் பெட்டகங்கள் முள்ளிவாய்க்காலில் மீட்பு

## வெறுமையாகக் காணப்பட்டதால் பொலிஸாருக்குச் சந்தேகம்

யாழ்ப்பாணம், டிசெ. 8

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தை வளாகத்தில் இறுதிபோர் நடந்த காலப் பகுதியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படும் இரண்டு இரும்புப் பெட்டகங் கள் வெறுமையான நிலையில் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பெட்டகத்தை ஏற்கனவே யாராவது தோண்டி எடுத்து அதிலுள்ளவற்றை களவாடியிருக்கலாமென சந்தேகம் தெரிவித்த பொலிஸார் அது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகக் கூறினர்.

முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதியிலுள்ள கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைக்குச் சொந்தமான சந்தை வளாகத்தில் நிர்மாணப் பணிக்காகப் பிரதேச சபையால் கிடங்கு வெட்டும்போது குறித்த பெட்டகங்கள் கண்டறியப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.



அது தொடர்பில் பிரதேச சபையினர் முல்லைத்தீவு பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து பொலிஸார் பிரதேச சபையினரின் உதவியுடன் நிலத்தை அகழ்ந்து குறித்த பெட்டகங்களை மீட்டனர். எனினும் மீட்கப்பட்ட பெட்டகங்களில் எதுவும் காணப்படவில்லை.

(வ-4,7)

# மருதடியானுக்கு இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், டிசெ.8

பிள்ளையார் கதையை முன்னிட்டு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் இலட்சார்ச்சனை வழிபாடு எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி அடுத்த மாதம் 3ஆம் திகதி வரை 21 தினங்கள் தொடர்ந்து இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

ஜனவரி மாதம் 2ஆம் திகதி திருவெம்பாவை ஆரம்பமாகும். அன்றைய தினம் கஜமுகசூரன் சங்காரம் இடம்பெறும். 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கணபதி யாகம் ஆரம்பமாகிப் பெருங்கதை நிறைவுபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-115)


## வீடு வாடகைக்குத் தேவை

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி Or இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய 4 அறைகளுக்குக் கூடுதலாக மற்றும் இரண்டு வாகனத் தரிப்பிட வசதிகளுடன் இரு வீடுகள் வாடகைக்குத் தேவை.

077 494 5169

## காணி விற்பனைக்குண்டு

கந்தரோடையில், ஸ்கந்தவரோதைய பள்ளிக் கூடத்திற்கருகில், சுன்னாகம் செல்லும் வழியில், தெருவோடு அமைந்திருக்கும் காணி (5) ஐந்து பரப்பும் ஆறு குளியும் விற்பனைக்கு உண்டு.

077 628 2164, +614 030 40073
077 632 4974
email: nadana900@gmail.com

## கட்டடம் வாடகைக்கு வழங்குவதற்கான கூறுவிலை கோரல்

யாழ் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான இல. 373, பிரதான வீதியில் அமைந்துள்ள சங்க கூட்டுறவு நகர் இயங்கிய கட்டடமும், கடையுடன் கூடிய பேக்கரி கட்டடம் முழுவதும், வாடகைக்கு வழங்கப்படும். எனவே இக்கட்டடங்களை முழுமையாக வாடகைக்குப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் தங்களால் கோரப்படும் வாடகைத் தொகைகளையும் குறிப்பிட்டு தங்கள் விண்ணப்பங்களை தலைவர், யாழ்ப்பாணம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) இல.127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 2016.12.21 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கட்டடத்தினை நேரில் பார்வையிட விரும்பின்
கடமை நேரத்தில் (திங்கள் - வெள்ளி: மு.ப 8.30 - பி.ப.5.00
சனி மு.ப 8.30 பி.ப 1.30 வரை) நேரில் அல்லது
தொலைபேசி இல. 021 222 2587 உடன் தொடர்பு
கொள்ளவும்.

திரு. மு. ஜெ.சுஜீந்திரன் (ஜே.பி)
தலைவர்
யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வ-து
இல. 127,காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.
திசைமுகப்படுத்தும் நிகழ்வு-2016
**Orientation Programme - 2016**
<u>கலைமாணி பகுதி</u>- II

மேற்படி கலைமாணி – II பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் நன்மைகருதி 18.12.2016 (ஞாயிற்றுக் கிழமை) தொடக்கம் 28.01.2017 (ஞாயிற்றுக்கிழமை) வரை ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை திசைமுகப்படுத்தும் வகுப்புகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை மண்டபத்தில் (E-Hall) நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இவ் வகுப்புகளில் தவறாது கலந்துகொண்டு பயன்பெறுமாறு அழைக்கப்படுகின்றீர்கள்.

மேற்படி திசைமுகப்படுத்தும் வகுப்புக்கள் தொடர்பான நேர அட்டவணைகளை திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விவரங்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

பதிவாளர்
06.12.2016
(சி.26961)(13.18.21)

## வாடகைக்கு

Tata pickup AC கனரக வாகனம், தகுந்த சாரதியுடன் வாடகைக்கு வழங்கப்படும். மாதரீதியாகவோ அல்லது வருடாந்த ரீதியாகவோ வாடகைக்கு எடுக்கலாம்.

076 972 1953, 077 277 1198

## பெண் உதவியாளர் தேவை

கந்தரோடை, சுன்னாகத்திலே வதியும் வயோதிபத் தம்பதியினருடன் தங்கியிருந்து பணிபுரிய பெண் உதவியாளர் தேவை. 35 வயதுக்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது.
கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.

077 754 2174, 021 224 0393

## வீடு விற்பனைக்கு

சின்னக் கிணற்றடி ஒழுங்கையும் நாவலர் வீதியும் சந்திக்கும் இடத்தில் அரியாலை கனகரட்ணம் சந்திக்கு அண்மையில் 2 பரப்புக் காணியில் அமைந்துள்ள 4 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
(கண்டி வீதியில் இருந்து 100 மீற்றர் தூரம்)

தொடர்பு:077 618 9686

## சிறுநீரகம் தேவை

23 வயதுடைய O+ குருதியை சேர்ந்த பெண்ணுக்கு சிறுநீரகம் தேவை. தரவிரும்புபவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

077 028 7240, 077 4752 052

## கணித வகுப்பு

தரம் 5 புலமைப்பரிசில் மற்றும் தரம் 6 முதல் O/L வரை வீடுகளுக்கு வந்து கணிதபாடம் கற்பிக்கப்படும். யாழ்நகர், திருநெல்வேலி கொக்குவில், சுன்னாகம் ஆகிய இடங்களில் வசிப்போர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

077 248 7080

SUPER LUXURY
BUS FOR HIRE



Call
076 822 7522
076 822 7515
076 822 7523

29 Seats / Fully Adjustable Seats / Fully Air Conditionel
TV+DVD System / Free Wi-fi
581, K.K.S ROAD, JAFFNA.

## நல்லூர்ப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா- 2016

**இடம்:** அரியாலை பிரப்பங்குளம்
மகாமாரி அம்மன்
கல்யாண மண்டபம்
**காலம்:** 09.12.2016
வெள்ளிக்கிழமை
**நேரம்:** பிற்பகல் 2.00மணி
நல்லூர்ப் பிரதேச கலைஞர்கள்,
ஆர்வலர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.
- விழாக்குழுவினர் -

## மேசன் கூலிஆள்கள் தேவை

பிரபல கட்டட ஒப்பந்த நிறுவனமொன்றுக்கு யாழ்ப்பாணத்தில் மேசன் கூலியாள்கள் தேவை. மேசன் சம்பளம் 1500/= நாளாந்தம் வழங்கப்படும்.

076 824 5459

## வேலையாள்கள் தேவை

கிளிநொச்சி பழைய வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்திருக்கும் எமது நிறுவனத்திற்கு வேலையாள்கள் ஆண், பெண் இருபாலாரும் தேவை. 18-25 வயதிற்குட்பட்டவர்கள் சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.
நியூசன் செரமிக், பிறைவட் லிமிட்டட்,
A9 வீதி, கிளிநொச்சி.
(பழைய வைத்தியசாலைக்கு முன்பாக)

021 228 3872, 072 953 2598

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார் ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்

S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத்தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

தினசரி காலை 8 மணி முதல் மாலை 6.00 மணிவரை

நாதன் இன்
394 1/1, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.(வெலிங்டன் சந்தி)
072 681 6681, 076 557 5394

## ஸ்ரீ பரமானந்தா சிறுவர், முதியோர் இல்ல பதவி வெற்றிடம்

01. பெண் சிறுமிகள் மேற்பார்வையாளர்
02. பெண் சமையலாளர்
03. ஆண் முதியோர் பராமரிப்பாளர்
04. ஆண் பாதுகாப்பு உத்தியோகத்தர்

**தகைமைகள்:**

01. வயது - 35 இற்கு மேற்பட்டவராகவும் 55 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல்
02. இல்லத்தில் தங்கியிருந்து சேவையாற்றக் கூடியவர் விரும்பத்தக்கது.
03. கல்வித் தகைமைகள், அனுபவ விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்
04. ஊதியம் நேர்முகத் தேர்வின் போது தீர்மானிக்கப்படும்
05. விண்ணப்ப முடிவு திகதி - 25.12.2016

தலைவர்
ஸ்ரீபரமானந்தா சிறுவர், முதியோர் இல்லம்
வதிரி, கரவெட்டி.
தொ.பே.இல. 021 321 5156, 021 226 3136


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உப்பளங்களை தனியாருக்கு வழங்குவதற்கு கடும் எதிர்ப்பு

## ஆனையிறவு உப்பளம் முன்பாக மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி, டிசெ.8
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பளங்களை தனியார் மயப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று மக்கள் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மு.ப. 9 மணிக்கு ஆனையிறவு உப்பளத்துக்கு முன்பாக ஒன்று திரண்ட உப்பளங்களின் சுற்றயல் கிரா மக்கள் உப்பளங் களைத் தனியார் மயப்படுத்து வது பிரதேச மக்களுக்குச் செய்யும் மாபெரும் அநீதி என்று சுட்டிக்காட்டி ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஆனையிறவு உப்பளத்தின் அடையாளத்தை அளிக்காதே, உப்புக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயமாக்க வேண்டாம், கூட்டாக உழைப்போம் - தனி யார் மயமாக்கலை எதிர்ப்போம், எங்கள் வளத்தில் நாங்கள் வாழ்வோம், பிரதேச வளங்களில் பிரதேச மக்களுக்கே முன்னுரிமை- போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.

ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், நிதி அமைச்சர், வடக்கு முதலமைச்சர், அமைச்சர் ரிசாத் பதியுதீன், வடக்கு மாகாண எதிர்க் கட்சித் தலைவர், கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ஆகியோரிடமும், கண்டாவளை உதவித் திட்டமிடல் பணிப்பாளர், ஆனையிறவு உப்பள முகாமையாளர் ஆகியோரிடமும் ஆர்ப்பாட்டம் செய்தோர் மனுக்களைக் கையளித்தனர்.

ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பளங்களின் சுற்றயல் கிராம மக்கள் அமைப்புகளாகிய நாங்கள் சமர்ப்பிக்கும் மேன்முறையீட்டை தங்கள் மேலான கவனத்துக்குக் கொண்டுவருகிறோம். எமது பிரதேச மக்களின் வாழ்வாதாரப் பாதிப்பிலிருந்து பாதுகாத்து, எமது பிரதேச பொருளாதார அபிவிருத்தியை பேணுவதற்கு உதவும் படியாக பின்வரும் எமது கோரிக்கைகளைப் பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஆனையிறவு மற்றும் குறிஞ்சாத்தீவு உப்பளங்கள் தனியாரிடம் கையளிக்கப்படுவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் நடைபெறுவதை அவதானிக்க முடிகிறது. 1938 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த உப்பளங்கள் 1990 வரை மிகுந்த வினைத்திறனோடு அதிக வருமானத்தை ஈட்டியுள்ளன. ஆனையிறவு உப்பளத்தின் ஆண்டுக்கான உற்பத்தி 30 ஆயிரம் மெற்றிக்தொன்னாகவும், குறிஞ்சாத்தீவு உப்பளத்தின் ஆண்டுக்கான உற்பத்தி 40 ஆயிரம் மெற்றிக் தொன்னாகவும் இருந்துள்ளது.

2016 இல் ஆயிரத்து 100 மெற்றிக் தொன் உப்பு மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது. உப்பளங்களின் சீரமைப்புக்கு போதுமான நிதி ஒதுக்கப்படாமையே இதற்கான காரணமாகும். 1990ஆம் ஆண்டுக்கு முன்பு நாட்டுக்குத் தேவையான உப்பை விடவும் மேலதிகமாக பிற நாடுகளுக்கும் ஆனையிறவு உப்பு ஏற்றுமதி செய்யப் பட்ட காலம் இருந்தது. சுற்றயற் கிராமங்களின் மக்களுக்கான வாழ்வாதாரத்தை இந்த உப்பளங்களே பெரும்பாலும் வழங்கி வந்தன. உப்பளங்களைத் தொடர்ந்தும் அரச கூட்டுத்தாபனமாக இயக்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து, அதிக உற்பத்தியை மேற்கொள்ளக்கூடிய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். இந்தப் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்துக்கும், அதிக உற்பத்திக்கும் சாதகமான நிலமைகளை உருவாக்கித் தருமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். - என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ந-21,35)

## பால்நிலை வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், டிசெ.8
வன்முறையற்ற மகிழ்வான குடும்பத்தை உருவாக்குவோம் எனும் தொனிப்பொருளில் பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாட்டின் ஓர் அங்கமாக விழிப்புணர்வுச் சுவரொட்டியை மாவட்ட செயலர் நா. வேதநாயகன் நேற்றுமுன்தினம் வெளியிட்டார். முதல் பிரதியை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் செல்வி. ந. உதயனி பெற்றுக் கொண்டார். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு சபை இணைப்பாளர் கு. கௌதமன் கலந்து கொண்டார். மாவட்ட செயலகத்தின் பல் வேறு இடங்களிலும் துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டன. தற்போது பெண்களுக்கெதிரான நிகழ்த்தப்பட்டு வரும் வன் முறைகள் பற்றியும் அதற்கான பாதுகாப்பு நடவடிக்கை எவ்வாறு எடுக்கப்படலாம் என்பது பற்றியும் முறைப்பாட்டு முறைகள் பற்றியும் மாவட்ட பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் விளக்கமளித்தார்.

நவம்பர் 25ஆம் திகதி முதல் டிசெம்பர் 10ஆம் திகதி வரை குடும்பத்தில் சமத்துவம், சமாதானம் பேணி சமுதாயத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழித்திடுவோம் எனும் தொனிப்பொருளிலான 16 நாள் செயற்பாடு யாழ். சமூக செயற்பாட்டு மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைதீவு மாவட்டங்களில் கிராம மட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்குகளுடன், சமூக வலைத் தள விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மற்றும் பத்திரிகை செய்திகளினூடாக அறிவூட்டல்கள் வழங்கப்படுகின்றன. (ந-10)

# திருத்தப்படாதுள்ள வீதியால் 3 கிராமங்கள் திண்டாட்டம்

## சீரமைத்துத் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.8
மன்னார், முருங்கனில் பரிகண்டல், ஜீவநகர், ஆத்திமோட்டை கிராமங்களை இணைக்கும் வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளது. வீதியைச் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.



இவ்வாறு அந்தக் கிராமங்களைச்சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

500 குடும்பங்களுக்கு மேல் பயன்படுத்தும் இந்த வீதி சுமார் 6 கிலோமீற்றர்நீளமானது. மழை காலங்களில் இந்தப் பாதையால் பிரயாணம் செய்யமுடியாது. அவசர நோயாளி களைக் கூட வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாதுள்ளது. 2015ஆம் ஆண்டுவடக்குமாகாண முதலமைச்சருக்கு எழுத்து வடி விலான மனு ஒன்றை நேரடியாக ஒப்பட்டைத்தோம். அடுத்த வருடம் (2016 ஆம் ஆண்டு) தங்களின் கோரிக்கை முன்னிலைப்படுத்தப்படும் என பதிலளிக்கப்பட்டது. எமது வீதி சீரமைப்புத் தொடர்பாக வடக்கு மாகாண சபை பாரபட்சம் காட்டுகிறதுபோல் உள்ளது. 30.11.2016ஆம் திகதி உதயன் பத்திரிகையில் 157.6மில்லியன் செலவில் மன்னார் மாவட்டத்தில் 18 வீதிகள் சீரமைப்பு என்ற தலைப்பில் செய்தி வெளிவந்தது. இதுவும் எமக்கு ஏமாற்றத்தைத் தந்துள்ளது. ஏனைய பிரதேச செயலர் மட்டத்தில் பல கிராமங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. எங்களது நானாட்டான் பிரதேச செயலர் மட்டத்தில் ஒரு கிராமம் கூட உள்வாங்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் வடக்கு வீதி அபிவிருத்தி அமைச்சர் இந்த வீதியைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.-என்று பரிகண்டல் கிராமஅபிவிருத்திச்சங்க தலைவர் தெரிவித்தார்.

மிகவும் பழுதடைந்த வீதிகள் என்ற வகையில் முன்னுரிமை அடிப்படையில் சீரமைக்கப்படுகின்றன. கிராம மக்கள் எமக்குக் கோரிக்கை தரும்பட்சத்தில் இந்த வீதி முன்னுரிமை அடிப்படையில் திருத்திக் கொடுக்கப்படும். - என்று நானாட்டான் பிரதேச சபையினர் தெரிவித்தனர். (ந-21,10,23)



விபத்துகளை குறைக்கும் நடவடிக்கையாக யாழ். மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சரின் ஏற்பாட்டில் கோப்பாய் பொலிஸாரால் விபத்துகளை தடுக்கும் விழிப்புணர்வு ஸ்ரிக்கர்கள் வாகனங்களில் ஒட்டப்பட்டன. இந்த நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் திருநெல்வேலி சந்தியில் நடைபெற்றது. அதில் கோப்பாய் பொலிஸ் பிரிவை சேர்ந்த போக்குவரத்து பொலிஸாரும், பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ந-21,33)

# ஜெயலலிதாவுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், டிசெ.8
தமிழ் நாட்டின் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தில் சபை உறுப்பினர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். வடமாகாண சபையின் 67ஆவது அமர்வு நேற்று அவைத்தலைவர் சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. தேநீர் இடைவெளியின் போது வட மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் இந்த அகவணக்கம் இடம்பெற்றது.



ஜெயலலிதாவின் உருவப் படம் மற்றும் அண்மையில் மறைந்த கியூபா முன்னாள் ஜனாதிபதி பிடல்காஸ்ட்ரோவின் உருவப்படம் வைக்கப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. வடமாகாண சபை உறுப்பினர்களான பசுபதிப்பிள்ளை, ஆனோல்ட், லிங்கநாதன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர். (ந-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொழில் பூங்கா பணியகம் பூநகரியில் அமைவதே சிறந்தது

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ.8

வடக்கு மாகாணத்துக்கு கைத்தொழில் பூங்கா அமைக்கப்பட வேண்டும். அதற்கான காரியாலயம் அனைத்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கிளிநொச்சி, பூநகரி பிரதேசத்தில் அமையவேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் மீன்பிடித்துறை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டத்தில் மீன்பிடி அமைச்சு கைத்தொழில் பூங்கா ஒன்றை அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளது. அதற்கான முன்மொழிவு கடந்த மாதம் மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்பட்டது.

இணைத்தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் இதனைக் கோரிக்கை அடிப்படையில் ஏற்றுக் கொண்டனர். மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள நாயாறு வெளியில் ஆயிரத்து 200 ஹெக்ரெயர் காணியைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

வடமாகாண மக்கள் பயன்பெறும் வகையில் சிறுதொழில் முதலீட்டாளர்களுக்கு ஒரு பகுதி நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். வெளி முதலீட்டாளர்கள், சர்வதேச முதலீட்டாளர்களை உள்வாங்கும் போது மாகாண மற்றும் மத்திய ஒருங்கிணைந்த நிர்வாகமாக செயற்படுவதோடு மக்களது வளங்கள் மற்றும் தொழில்சார் வளங்கள் பேணப்பட வேண்டும்.

தொழிநுட்ப மற்றும் சாதாரண பணியாளர்கள் தெரிவில் மன்னார் மாவட்டம் உட்பட வடமாகாண பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். தொழிநுட்பப் பணியாளர் பற்றாக்குறை காணப்படுமிடத்து பொருத்தமான பயிற்சிகள் வழங்கி அதனைக் குறிப்பிட்ட காலத்துக்குள் மக்களுக்கு வழங்க ஆவன செய்யவேண்டும். பட்டதாரிகளை பணியாளர்களாக தெரிவு செய்யுமிடத்து வடமாகாண பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

இந்த செயற்றிட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ள காரியாலயம், கிளிநொச்சியை மையமாகக் கொண்ட பூநகரியில் அமைக்கப்படும் பட்சத்தில் அது ஏனைய மாவட்டங்களுக்கும் பொருத்தமான இடமாக இருக்கும். எதிர்காலத்தில் பூநக்ரியிலும் பண்ணை அமைக்க திட்டமிடப்பட்டுள்ள நிலையில் காரியாலய அமைவிடம் மிகவும் பொருத்தமானது.-என்றார். (ற-21)

# மானிய உரம் தாமதிப்பதால் நெற்பயிர்கள் அழியும் நிலை

## வவுனியா விவசாயிகள் விசனம்

வவுனியா, டிசெ.8

காலபோக செய்கைக்கான மானிய உரம் வழங்கப்படுவது இழுத்தடிக்கப்படுகின்றது என்று வவுனியா மாவட்ட விவசாயிகள் விசனம் தெரிவித்தனர். தற்போது நெற் செய்கை மேற்கொண்டவர்களுக்கு மானிய அடிப்படையில் அரசால் 5 ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. விவசாயிகள் நெற் செய்கையை ஆரம்பித்த போதும் பசளை பெற்றுக் கொள்வதற்கு காலதாமதம் ஏற்பட்டுள்ளது. பசளை வீச வேண்டிய காலத்தில் விசிற முடியாமல் போயுள்ளது. விதைக்கப்பட்ட நெல்மணிகள் தற்போது செழித்து வரும் நேரத்தில் உரங்களை விசிறத் தவறின் அழிவை எதிர்நோக்கும் அபாயமும் உள்ளது. கடன்பட்டு பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டுள்ளோம். உரிய அதிகாரிகள் கவனமெடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.- என்று அவர்கள் தெரிவித்தனர்.

காலதாமதம் ஏற்படுவதற்கு நாம் பொறுப்பல்ல. உரிய நேரத்தில் விண்ணப்பப் படிவங்களை பயனாளிகள் சமர்ப்பிக்காததால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இருந்தும் மானியத்தைப் பெற்றுக் கொடுப்பதில் நாம் ஆர்வம் காட்டி வருகின்றோம். இலங்கையில் எந்தப் பாகத்துக்கும் இன்னும் மானியம் வழங்கப்படவில்லை. விவசாய அமைச்சர் அலுவலகத்திலிருந்து மானியம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அடுத்த வாரத்துக்குள் பயனாளர்களின் வங்கியில் மானியத்துக்கான பணம் வைப்பிலிடப்படும். வவுனியா மாவட்டத்தில் இந்தமுறை பெரும்போக நெற் செய்கை 22 ஆயிரத்து 500 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டது. மழை வீழ்ச்சியின்மை காரணமாக விவசாயிகள் நெற்செய்கையில் ஆர்வம் குறைந்து காணப்படுகின்றனர். பருவமழை ஆரம்பிக்குமாக இருந்தால் விவசா யிகள் பலர் ஆர்வத்துடன் நெற் செய்கையில் ஈடுபட முன்வருவார்கள்.-என்று கமநல உதவி ஆணையாளர் ஆர். விஜயகுமார் தெரிவித்தார். (ற-21)

# ஜோதி லிங்க தரிசனம் 11ஆம் திகதி

யாழ்ப்பாணம், டிசெ. 8

பாரதத்தின் மகிமை வாய்ந்த 12 ஜோதிலிங்க தரிசனம் எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் கதிர்காமத்தில் ஆரம்பமாகவுள்ளது என பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினர் தெரிவித்தனர்.

பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வானது எதிர்வரும் 11 ஆம் திகதியில் இருந்து 13 ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை கதிர்மாகக் கந்தன் ஆலய வளாகத்திலுள்ள ஞானக் கணபதி கோயில் அன்னதான மண்டபத்துக்கு அருகில் நடைபெறவுள்ளது.

தமிழ் நாட்டிலுள்ள இராமேஸ்வர் பன்னிரு ஜோதி லிங்கங்களையும் ஓரேயிடத்தில் தரிசிக்கும் பாக்கியம் இலங்கை மக்களுக்குக் கிட்டியுள்ளது. அனைத்துப் பிரச்சினைகளையும் வெல்லும் வகையில் ஆன்மிகக் கண்ணைத் திறக்கவல்ல படவிளக்கக் கண்காட்சி, மனச்சுமையை இறைவனிடம் கொடுப்பதற்கான யாக குண்டம், இறைவனுடன் நெருக்கமான அனுபவத்தைப் பெறுவதற்கான தியானம் போன்றவற்றை மக்கள் முற்றிலும் இலவசமாக பெறமுடியும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (ற-10)

புலமைப்பரிசில் வெற்றிக்கு அவசியமான பயிற்சிகளைத் தாங்கிவரும் ஒரே கையேடு

புலமைச்சுடர்



அன்புக்குரிய பெற்றோர்களே!

**2017 தரம் 5இல்** கற்கப்போகும் உங்கள் பிள்ளைகள் தமது கற்றல் செயற்பாட்டை சுயமாக முன்னெடுக்க ஓர் அரிய சந்தர்ப்பம்.

- **பாடத்திட்டத்துக்கு அமைவான பயிற்சிகள்**
- **பல்வேறு பொது விவேக பயிற்சிகள்**
- **பகுதி I, பகுதி II என அமைந்த வினாத்தாள்கள்**
- **சுயமாக கட்டுரையாக்குவதற்கான வழிகாட்டல்**
- **பாடத்திட்டத்துக்கு அமைவான சிங்கள, ஆங்கில மொழிச் சொற்கள் அறிமுகம்**

இவற்றை உள்ளடக்கிய இந்த வருடம் வெளிவந்த 21 புலமைச்சுடர் கையேடுகள் அடங்கிய தொகுதி.

- **தொகுதி ஒன்றின் விலை ரூ 250/=**
- **தனியார் கல்வி நிலையங்களுக்கு விசேட விலைக் கழிவு உண்டு.**

முதலாவது கையேட்டின் வினாக்களுக்கான விடைகள் இரண்டாவது கையேட்டில் காணப்படும்.

தொடர்பு:

**077656 9617 / 076 8396297**

(26927)(10.17)

# சிறப்புத் தேவை உடையோருக்கு இலவசமாக செயற்கை உறுப்பு



வவுனியா, டிசெ.8

போர், விபத்து என்பவற்றால் தமது அவயவங்களை இழந்த - வசதியற்ற சிறப்புத் தேவைக் குட்பட்டவர்களுக்கு ஜெயப்பூர் செயற்கை உற்பத்தி நிறுவனத்துடன் இணைந்து செயற்கை உறுப்புக்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளன. முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட பத்துப் பயனாளிகளுக்கு செயற்கை உறுப்புக்கள் விரைவில் வழங்கப்படும்.

இவ்வாறு வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார் தெரிவித்தார்.

வவுனியா பட்டாணிச்சி புளியங்குளம் பொது நோக்கு மண்டபத்தில் சிறப்புத் தேவைக்குட்பட்டோருக்கான உதவிப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எமது அமைப்புக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக முதற்கட்டமாக பத்துப் பயனாளிகளுக்கு செயற்கை உறுப்புக்கள் இலவசமாக வழங்கப்பட்டன. கற்றல் நடவடிக்கையை மேற்கொண்டு வரும் மாணவர்களுக்கும் உதவிகள் வழங்கப்படுகின்றன. வசதியற்ற மாணவர்கள் தயக்கமின்றி உதவிகளைப் பெற்று சமூகத்தில் உயர்வான இடத்துக்குச் செல்ல வேண்டும். எமது அலுவலகம் வவுனியா சிந்தாமணி விநாயகர் ஆலயத்துக்கு அருகிலுள்ளது. அங்கு வந்து உங்களுடைய தேவைகளைத் தெரிவித்து உதவிகளைப்பெற்றுக்கொள்ளுங்கள் -என்றார்.

பட்டாணிச்சி புளியங்குளம் மாற்றுத் திறனாளிகள் சங்கம், சமுர்த்தி சங்கம் என்பன இணைந்து 45க்கும் மேற்பட்ட சிறப்புத் தேவைக்கு உட்பட்டவர்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கின. அதற்கான அனுசரணையை வன்னி மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் கே. கே. மஸ்தானும், தமிழ் விருட்சம் அமைப்பினரும் வழங்கினர். நிகழ்வில் சமுர்த்தி உத்தியோகத்தர் ரமேஸ், பட்டாணிச்சிபுளியங்குளம் கிராம அலுவலர், குடும்பநல உத்தியோகத்தர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்பில் எஸ்.சஜாஸ், மாற்றுத் திறனாளிகள் சங்கத் தலைவர் ஏ.ஏ. யரூஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.பி.யின் கப்பல்கள் எங்கே?

## சபையில் ஜே.வி.பி. கேள்வி



யாழ்ப்பாணம், டிசெ. 8
கே.பி.யின் 600 வங்கிக் கணக்குகளும் எங்கே ? 5 கப்பல்கள் எங்கே ? தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட தங்கம் எங்கே ? இவ்வாறு அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினார், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாதுகாப்பு, பன்னாட்டு வர்த்தகம் ஆகிய அமைச்சுகள் மீதான குழு நிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் முடிவடைந்த பின்னர் அரசியல் அஸ்திரமாகவே இராணுவத்தினரைப் பயன்படுத்தினர். நாட்டுக்காகச் சேவையாற்றிய முக்கிய இராணுவ அதிகாரிகள் கழற்றி விடப்பட்டனர். இதனால் பலர் குடும்பத்தோடு வெளிநாடு சென்று வாழ்கின்றனர். நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்திய படையினர், அரசின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டனர். இப்படித்தான் கடந்த ஆட்சியின்போது பாதுகாப்புக் கட்டமைப்பு தவறான வழியில் பயன்படுத்தப்பட்டுவந்தது.

ஒட்டுமொத்த இராணுவத்தையும் குறை கூறவில்லை. அந்த இராணுவத்தில் ஒரு குழுவை உருவாக்கிக் கொண்டே கடத்தல், கொலை செய்தல், அச்சுறுத்தல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஒட்டுமொத்த இராணுவத்தின் நன் மதிப்பைக் காக்க வேண்டுமானால் அந்தக் குழுவைக் கைது செய்து சட்ட நவடிக்கை எடுக்க வேண்டும். குழு தொடர்பான தகவல்கள் அம்பலப் படுத்தப்படவேண்டும்.

போர் முடிவின்போது பெருமளவு தங்கம் மீட்கப்பட்டது. புலிகளின் வங்கியிலிருந்து மீட்கப்பட்ட தங்கத்தில் டெக் பொறிக்கப்பட்டிருந்தது. மீட்கப்பட்ட தங்கத்தில் 45 கிலோ மாயமாகியுள்ளது என்று பிரதமர் குறிப்பிட்டிருந்தார். கைப்பற்றப்பட்ட தங்கத்துக்கு என்ன நடந்தது? சிறியளவே மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மிகுதி எங்கே?

கே.பியின் 600 வங்கிக் கணக்குகளும், 5 கப்பல்களும் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன என்று அரச ஊடகம் செய்தி வெளியிட்டது. பாதுகாப்புப் பேச்சாளராக இருந்த கெஹலிய ரம்புக்வெல்ல இந்தத் தகவலை வெளியிட்டிருந்தார். மேற்படி வங்கிக் கணக்குகளுக்கும், கப்பல்களுக்கும் என்ன நடந்தது? இவை குறித்து மக்களுக்கு அறிவிக்க வேண்டும். கடந்த அரசு மறைத்திருந்தால் இந்த அரசு அவை குறித்த தகவல்களை வெளியிட வேண்டும் – என்றார். (த-5)

# டட்லியின் உருவச்சிலை 11ஆம் திகதி திறப்பு

கொழும்பு, டிசெ 8
சுதந்திர இலங்கையில் 4 தடவைகள் பிரதமராகப் பதவிவகித்த டட்லிஷெல்டன்சேனநாயக்கவின் வெண்கலச் சிலையொன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பொரளை, கனத்தை சுற்றுவட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நண்பகல் 12 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

அத்துடன், கனத்தை சுற்றுவட்டம் டட்லி சேனநாயக்க சுற்றுவட்டம் எனவும் ஜனாதிபதியால் பெயரிடப்படவுள்ளது.

டட்லி சேனநாயக்க ஞாபகார்த்தக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த வைபவத்தில் ஜனாதிபதியுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தன், பொது எதிரணி உறுப்பினர் தினேஷ் குணவர்தன, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, ருக்மன் சேனநாயக்க உட்பட டட்லியின் குடும்ப உறுப்பினர்கள், அமைச்சர்கள், இராஜாங்க, பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித் துள்ளனர். (து)



# கிறிஸ்மஸ் மரத்தின் நிர்மாணம் நிறுத்தம்

கொழும்பு, டிசெ 8
கொழும்பு, காலி முகத்திடலில் அமைக்கப்பட்டு வந்த மிகப் பிரமாண்டமான கிறிஸ்மஸ் மரத்தின் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனை நிர்மாணிப்பதற்காகச் செலவிடப்படும் நிதியை, மக்களுக்குப் பயன்படுத்துமாறு கிறிஸ்தவ அமைப்புக்கள் விடுத்த கோரிக்கைக்கு இணங்க இந்தத் தீர்மானம் எடுக்கப்பட் டுள்ளது. கின்னஸ் சாதனையொன்றை நிலைநாட்டும் பொருட்டே, இந்த கிறிஸ்மஸ் மரம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (து)

# போதையில் படகு ஓட்டும் மீனவர்களுக்கும் அபராதம்

கொழும்பு, டிசெ 8
மதுபோதையில் படகுகளைச் செலுத்தும் மீனவர்களுக்கும் அபராதம் விதிக்கும் சட்டவரைவொன்றைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகக் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் திலீப் வெதஆராச்சி நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தின்போது இவ்வாறு தெரிவித்த அவர், மதுபோதையில் படகுகளைச் செலுத்துபவர்களால் ஏராளமான படகுகள் விபத்துகளில் சிக்கிச் சேதமாகியிருப்பதுடன் பல உயிர்கள் இழக்கப்பட் டுள்ளன. இத்தகைய இடர்களைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளை நாங்கள் இப்போது ஆராய்ந்து வருகிறோம். அத்துடன், மீனவர்கள் தடை செய்யப்பட்டுள்ள வலைகளைப் பாவிப்பதைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கைகளை எடுத்துவருகி றோம்– என்றார். (து)

# பண்டிகைக் கால பாதுகாப்புக்காக 1000 பொலிஸார்

## கொழும்பில் சிறப்பு ஏற்பாடு

கொழும்பு, டிசெ 8
எதிர்வரும் நத்தாருக்கும் புதுவருடத்துக்கும் பொருள்களை வாங்கத் தலைநகருக்கு வரும் மக்களின் பாதுகாப்புக்காக ஆயிரம் பேர் கொண்ட பொலிஸ் படையொன்று பணியில் அமர்த்தப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சிறப்புப் படையில் கொழும்பு மாநகரம் மற்றும் அதன் அயற் பிரதேசங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களிலுள்ள உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் எனவும்,

கொழும்பு கோட்டை, புறக்கோட்டை, பொரளை மற்றும் காலிமுகத்திடல் உள்ளிட்ட சனநடமாட்டம் அதிகமாகவுள்ள பகுதிகளில் இந்த சிறப்புப் படையினர் சிவில் உடைகளிலும் பணி புரிவார்கள் எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (து)

# சூரியக்கலங்கள் மூலம் நாடாளுமன்றுக்கு மின்சாரம்



யாழ்ப்பாணம், டிசெ. 8
நாடாளுமன்றத்தைச் சுற்றியுள்ள தியவன்னா ஆற்றில் மிதக்கும் சூரிய மின்கலங்களைக் கொண்டு நாடாளுமன்றத்துக்கு மின் சாரம் வழங்கும் திட்டம் எதிர்வரும் மாதங்களில் முன்னெடுக்கப்படும் என்று மின்வலு மற்றும் புதுப் பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சரான அஜி. பி.பெரேரா நேற்றுத் தெரிவித்தார்.

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு மற்றும் பெற்றோலிய வளத் துறை அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தாவது:

நாடாளுமன்றத்துக்குத் தேவையான மின்சாரத்தைச் சூரிய மின்கலங்களைப் பயன்படுத்திப் பெற்றுக் கொள்வதற்கான திட்டத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தின் வடிவமைப்புக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாதவகையில், நாடாளுமன்றைச் சுற்றியுள்ள ஆற்றில் (தியவன்னா ஓயா) சூரியக் கலத்தினால் மின்சாரத்தை உற்பத்தி செய்ய எமது அரசு திட்டமிட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய 1.5 மெகாவோட்ஸ் மின்சாரம் அவசியமாகின்றது.

இதனைச் சூரிய மின் கலத்தின் ஊடாகப் பெற்று முழு உலகத்துக்கும் முன்னுதாரணமாகச் செயற்படுவோம்.

கடந்த ஆட்சிக் காலத்திலேயே சம்பூர் அனல் மின் நிலையத்திட்டம் தாமதமாக்கப்பட்டது. கடந்த மே மாதம் 25 ஆம் திகதி இந்தத் திட்டத்திற்காக கேள்விப்பத்திரம் கோரியிருந்தும் சூழல் பிரச்சினை காரணமாக இதனை நாம் கைவிட்டுள்ளோம். இந்தத் திட்டத்தை ஆரம்பித்திருந்தாலும் இதன் பலன் 2022 அல்லது 2023 ஆம் ஆண்டுகளிலேயே கிடைக்கும் – என்றார். (த-5)

# கொக்கெய்னுடன் இருவர் கைது

கொழும்பு, டிசெ 8
அவிசாவளை, தல்துவப் பகுதியில் 1 கிலோகிராம் கொக்கெய்ன் போதைப் பொருளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனக் கலால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித் தனர்.

கைப்பற்றப்பட்டுள்ள கொக்கெய்ன், 20 மில்லியன் ரூபா பெறுமதியுடையது எனவும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கெண்டு வருவதாகவும் அதிகாரிகள் மேலும் கூறினர். (து)

# பெண்ணின் காலணிகளுக்குள் 8 லட்சம் பெறுமதியான தங்கம்



இந்தியாவுக்குச் செல்வதற்காக நேற்றுமுன்தினம் அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்ற பெண்ணொருவரின் காலணிகளுக்குள் இருந்து 8 இலட்சம் ரூபா பெறுமதியான 145 கிராம் தங்கத் தகடுகள் மீட்கப்பட்டதாகச் சுங்கத் திணைக்களப் பேச்சாளர் தர்மசேன கஹதவ தெரிவித்தார்.

கொழும்பு மாளிகாவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதான பெண்ணே இந்தத் தங்கத் தகடுகளுக்கு மேலதிகமாக தனது கைப் பையில் 80 ஆயிரம் ரூபா இலங்கைப் பணத்தையும் மறைத்து வைத்திருந் ததாகவும், அவர் நேற்று முன்தினம் அதிகாலை இந்தியாவின் மும்பை நகருக்குச் செல்லவிருந்த விமானத்தில் பயணிக்கவிருந்த நிலையில் பிடிபட்டார் எனவும் தர்மசேன கஹதவ கூறினார். (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுபலசேனாவை போசிக்கிறதா அரசு?

## கிழக்கு முதலமைச்சர் காட்டம்



மட்டக்களப்பு, டிசெ 8
கடந்த அரசு சிறுபான்மை மக்களின் உரிமைகளை நசுக்குவதற்கு எவ்வாறு பொதுபல சேனாவைப் பயன்படுத்தியதோ அதேபோன்று நல்லாட்சி அரசும் பொதுபலசேனாவை போசித்துப் பயன்படுத்துகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகக் கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் கேள்வி எழுப்பியுள்ளார்.
இது தொடர்பாக அவரது ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
பொதுபலசேனா அமைப்பின் கலகொட அத்தே ஞானசார தேரர் நீதிமன்ற உத்தரவையே பகிரங்கமாகக் கிழித்தெறிந்தும் இதுவரை கைதுசெய்யப்படாமலிருப்பது தொடர்பில் சந்தேகங்கள் எழுந்துள்ளன.
அதுமாத்திரமன்றிப் பொதுபலசேனா அமைப்பினர் தாக்குலொன்றை நடத்துவதற்குத் திட்டமிட்டு வந்துள்ளார்கள் என்பதை உறுதிப்படுத் தும் காணொலிகள் சமூக வலைத்தளங்களில் வெளி வந்துள்ளன.
நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் சீர்குலைப்பதற்கு இவர்கள் திட்டமிட்டுச் செயற்படு கின் றார்கள் என்பதற்கு இதைவிட வேறு ஆதாரங்கள் தேவையில்லை.
பொதுபலசேனா அமைப்பினர் வன்முறையைத் தூண்டும் நோக்கத்தில் தான் மட்டக்களப்புக்குப் பயணித்தார்கள் என்பது பகிரங்கமான உண்மை என்றபோதும், பொதுபலசேனாவைத் தாக்குவதற்கு மட்டக் களப்பில் ஒரு குழு தயாராகியிருந்தமையினாலேயே அவர்க ளைத் தடுத்ததாக நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச கூறியிருப்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு விடயம்.
ஏன் இந்த அரசு உண்மையைப் பகிரங்கமாகக் கூற மறுக்கின்றது. நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப வெளிப்படைத்தன்மை மிகவும் முக்கியமானது. ஆகவே மத ஒருமைப்பாட்டையும் தேசிய ஒற்றுமையையும் சீர்குலைக்க முனைவோர் கைதுசெய்யப்பட்டு, நாட்டில் உண்மையான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான வழிவகைகள் செய்யப்படவேண்டும் - என்றுள்ளது. (த-ய-46-47)

# பன்னாட்டு மட்டத்துக்கு மலையகப் பிரச்சினைகள்

## அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

நுவரெலியா, டிசெ. 8
மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு எதிர்காலத்தில் பன்னாட்டு மட்டத்தில் பேசித் தீர்வு காணப்படும் என கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் இன்று வடக்கு-கிழக்கு தமிழ்ப் பிரதிநிதிகள் மற்றும் ஜே.வி.பி. போன்ற கட்சித் தலைவர்கள் ஊடாகப் பேசப்படுகின்றன. வீடு, காணி, மனித உரிமை போன்ற விடயங்கள் அங்கே பேசப்படுகின்றன.
தேசிய ரீதியாகப் பேசப்படும் இந்தப் பிரச்சினைகள் பன்னாட்டு மட்டத்திலும் பேசப்படும் வழிவகைகளை எதிர்காலத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணி முன்னெடுக்கும். யாழ்ப்பாணத்தில் அங்குள்ள மக்களுடைய பிரச்சினைகள் பன்னாட்டு மட்டத்திலும், மனித உரிமை மீறல் அமைப்பின் ஊடாகவும் பேசப்பட்டுத் தீர்வுகள் காணக்கூடியதாக இருக்கின்றது.
இந்தவகையில் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கி வரும் வாழ்வாதார உரிமை பிரச்சினைகள் சர்வதேச மட்டத்தில் பேசப் பட வேண்டும் - என்றார். (த-ய-43)

# இலங்கை –தமிழக எழுத்தாளர்களின் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் டிச 8
இலங்கை -தமிழக எழுத்தாளர்களின் நூல் வெளியீட்டு விழா மற்றும் புத்தக விற்பனைக் கண்காட்சி எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் வெள்ளவத்தையில் அமைந்துள்ள கொழும்புத் தமிழ் சங்கத்தில் கம்பன் கழக தலைவர் தெ.ஈஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (த-8)

# இந்த நாட்டில் இனி இழப்புகள் ஏற்படக்கூடாது

## பொலன்னறுவை விகாராதிபதி கோரிக்கை



மட்டக்களப்பு, டிசெ. 8
எமது நாட்டில் இனிமேல் எந்தவொரு சமூகத்தினருக்கும் இழப்புகள் ஏற் பட்டுவிடக்கூடாது என பொலனறுவை மகாபோதி விகாராதிபதி எல்.தெரானந்த தேரர் தெரிவித்தார்.
மட்டக்களப்பில் இடம்பெற்றுவரும் கிழக்கு மாகாணத்தின் உண்மையைப் பிரகடனப்படுத்தும் குழுமத்தின் அமர் வில் நேற்றுச் சர்வமதக் குழுக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்தபோதே விகாராதிபதி மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அழிவுகளை ஏற்படுத்துவது, அநியாயங் களைப் புரிவது எல்லாம் இனிமேல் நமது வரலாற்றில் இடம்பெறக் கூடாது.
அந்த மகோன்னத பணிக்காக தமிழர், முஸ்லிம்கள், சிங்கள வர் ஆகிய நாமெல்லோரும் சேர்ந்து பணிசெய்ய வேண் டியவர்களாக இருக்கின்றோம். போருக்குப் பின்னர் வடக்கு- கிழக்கில் பௌதிக ரீதியான அபி விருத்திகள் இடம்பெற்றிருப் பதை நாம் நேரில் காணக் கிடைக் கின்றது.
நான் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, புத்தளம், கற்பிட்டி போன்ற பல்வேறு பிரதேசங் களுக்கு பயணம் செய்திருக் கின்றேன். அந்தப் பிரதேசங் களில் பௌதிக மாற்றங்களை அபிவிருத்தி செய்திருக்கின்றார்கள். ஆனால், துரதிர்ஸ்டவசமாக மக்களின் மனங்களில் உண்மையான அமைதியை ஏற்படுத்த நாம் தவறிவிட்டோம்.
எனவே, இந்த விடயத்தில் நாம் தோல்வியடைந்து விடாமல் துரிதமாகச் செயற்பட்டு இனங்களுக்கிடையில் உள்ளார்ந்த - உயிரோட்டமான அமைதியை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பொறுப்பு அரசு உட்பட நம் அனைவருக்கும் உண்டு.
வெறுமனே சமாதானத்தை மட்டும் பேசி விட்டுச் செயற்பாடு இல்லாமல் இருந்தால் உண்மையான சமாதானத்தை அடைய முடியாது. இதயங்களைத் திறக்க வேண்டும். சிந்தித்து ணர்ந்து செயற்படவேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் வேதனைகளை உணர்ந்து, உய்த்தறிந்து பரிகாரம் வழங்கவேண்டும்.
இந்தப் பெரும் பொறுப்பை எவரும் தட்டிக் கழிக்க முடியாது. பாதிக்கப்பட்டவர்களுக்கு பௌதிக ரீதியிலான உதவி களை வழங்குவது நமது கடமை என்பதை அரசு உட்பட அனை வரும் உணர்ந்துகொள்ள வேண்டும் - என்றார். (த-ய-46)

# நாடு முழுவதும் ஒருவித வைரஸ் தொற்று

கொழும்பு, டிசெ 8
நாடு முழுவதும் ஒருவித வைரஸ் தொற்று பரவி வருகின்றமையினால் மிகவும் அவதானமாக இருக்குமாறு குழந்தைகள் தொடர்பான சிறப்பு நிபுணர் தீபால் பெரேரா தெரிவித் துள்ளார்.
ஒரு சில நாள்களுக்குக் காய்ச்சல் காணப்படுகின்ற நிலையில் அது குனமாகியதும் ஒரு சில வாரங்களுக்கு வைரஸ் தொற்று பரவுவதாகவும், அந்த வைரஸ் தொற்றின் காரணமாக உலர் அல்லது சளியுடனான இருமல் காணப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
சிறு பிள்ளைகளிடையே இந்த வைரஸ் அதிகமாக பரவுவதனால் மக்கள் கூட்டம் அதிகம் உள்ள இடங்களுக்குச் சிறுவர்கள் அழைத்துச் செல்வதைத் தவிர்க்குமாறு அவர் குறிப்பிட்டார்.
உலர் அல்லது சளியுடனான இருமல் ஒரு சில வாரங்கள் தொடர்ந்தால் அது பக்டீரியா ஆபத்தினை ஏற்பட கூடும் என்பதனால் உடனடியாக வைத்திய சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு வைத்தியர் சுட்டிக்காட்டியுள்ளார். (து)



# என் குடும்ப உறுப்பினர்கள் அடுத்தடுத்துப் படுகொலை

## ஆரையம்பதிப் பெண் சாட்சியம்

எனது குடும்ப உறுப்பினர்கள் அடுத்தடுத்துப் படுகொலை செய்யப்பட் டார்கள். இவை அனைத் தும் மட்டக்களப்பு - ஆரையம்பதியிலே உள்ள எங்கள் சொந்த வீட்டிலேயே மிகவும் மோசமாக அரங் கேற்றப்பட்டன.
இவ்வாறு கண்ணீரோடு தெரிவித்தார் ஆரையம்பதி இராஜதுரைக் கிராமத்தைச் சேர்ந்த 57 வயதுடைய மோகனாம்பிகை.
இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டின் கீழ் கிழக்கு மாகாணத்தின் உண்மையைப் பிரகடனப்படுத்தும் குழுமத்தின் அமர்வு மட்டக் களப்பில் திங்கட்கிழமை இடம்பெற்றது.
இதில் சாட்சியமளித்த மேகனாம்பிகை மேலும் தெரிவித்ததாவது:
என் உடன் பிறந்த சகோதரன் தம்பிராஜா குருகுலசிங்கம் வயது 33, வங்கி ஊழியர். 1990 ஒக்ரோபர் 5ஆம் திகதி இரவு 7 மணியளவில் இனந்தெரியாத ஆயுதக் குழு ஒன்றினால் வீட்டிலிருந்து வெளியே கூட்டிச் செல்லப்பட்டு வீதியில் வைத்து தலையில் சுடப்பட்டு படு கொலை செய்யப்பட்டார். அவர் சுடப்பட்டதற்கான காரணம் இன்றுவரை எமக்குத் தெரியாது.
மதுபானச்சாலையின் உரிமையாளரான என் தந்தை இளையதம்பி தம்பிராஜா 1991 ஓகஸ்ட் 21 ஆம் திகதி வீட்டில் தூக்கத்திலிருந்த வேளையில் இரவு 10 மணியளவில் தலையிலும், மார்பிலும், இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்டுப் படு கொலை செய்யப்பட்டார்.
30 வயதுடைய என்னுடைய உடன்பிறந்த சகோதரி தம்பிராசா மலர் 1992 பெப்ரவரி 8 ஆம் திகதி எங் களுடைய வீட்டில் இருந்த போது இனந்தெரியாத ஆயுத தாரிகளால் வெளியே இழுத்துச் செல்லப்பட்டு சுட்ப் பட்டு படு கொலை செய்யப்பட்டார்.
எனது இரத்த உறவுகளான இந்த மூன்று பேரும் அடுத் தடுத்த ஆண்டு களாகப் படுகொலை செய்யப்பட்தற்கான காரணங்கள் இன்று வரை எமக்குத் தெரியாது.
தற்போது நான் தனிமையை உணர்கின்றேன். எனது தந்தை மற்றும் சகோதரர்களின் படு கொலைகளுக்கு நீதி வேண்டும்- என்றார். (த-ய)

# 1443 இலங்கையருக்கு இரட்டைக் குடியுரிமை

கொழும்பு, டிசெ 8
புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் 1443 இலங்கையர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. உள் துறை அமைச்சும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களமும் இணைந்து. இந்த இரட்டைக் குடியுரிமைகளை வழங்கியுள்ளன.
வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் 1443 இலங்கையர்களுக்கு நேற்று இந்த இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டது. இந்த நிகழ்வு நிகழ்வு பத்தரமுல்லை சஹிருபாயவில் நடைபெற்றது.
நிகழ்வில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் எஸ்.பி. நாவின்ன பங்கேற்றார். (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சல் அலுவலகம் அமைக்க காணி வழங்கியும் பயனில்லை

## இயக்கச்சி மக்கள் விசனம்

பளை, டிச.8
பளை, இயக்கச்சி சந்திக்கு அருகில் உப அஞ்சல் அலுவலகம் அமைக்க ஊர் மக்களால் காணி கொள்வனவு செய்து வழங்கப்பட்டுநான்கு வருடங்கள் கழிந்துள்ள போதும் இதுவரை நிரந்தரக் கட்டடம் அமைக்கவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பளை அஞ்சல் அலுவலகத்துக்கு உட்பட்ட இயக்கச்சி உப அலுவலகம் நீண்ட காலமாக தனியார் கட்டடமொன்றில் இயக்கச்சி சந்தியில் இயங்கியது. இந்த உப அஞ்சல் அலுவலகத் தால் இயக்கச்சி, புதுக்காடு, தர்மக்கேணி, கோவில்வயல், சங்கத்தார்வயல், குறிஞ்சாத்தீவு, மல்வில் உள் ளிட்ட பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயன் பெறுகின்றனர்.

போரின்போது ஆனையிறவு முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலால் அந்தப் பகுதிகளில் இருந்த மக்கள் இடம் பெயர்ந்து பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் பல்வேறு இடங்களில் தங்கினர். போர் முடிவுக்கு வந்தபின்னர் தங்களது சொந்த இடங்களில் மக்கள் மீள்குடியமர்ந்தனர். உப அஞ்சல் அலுவலகம் இயங்கிய கட்டடம் தரைமட்டமாகியிருந்தது. தமது தேவைகளுக்கு இன்றுவரை அந்தப் பகுதி மக்கள்பளைஅஞ்சல்அலுவலகத்தையே நாடி வருகின்றனர்.

உப அஞ்சல் அலுவலகத்துக்கென காணி இல்லாததால் நிரந்தரக் கட்டடம் அமைக்க முடியவில்லை என்று கூறப்பட்டது. அனைத்து மக்களும் இணைந்து நிதி உதவி வழங்கி 2013 ஆம் ஆண்டு உப அஞ்சல் அலுவலகத்துக்கென காணி கொள்வனவு செய்து வழங்கினர். நிரந்தரக் கட்டடம் அமைக்க அஞ்சல் திணைக்களம் நிதி ஒதுக்காததால் தற்காலிக கட்டடமொன்றிலேயே தற்போதும் உப அஞ்சல் அலுவலகம் இயங்கி வருகிறது.

உப அஞ்சல் அலவலகத்திற்கு நிரந்தரக்கட்டடம்அமைக்கநிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றுஅந்தப்பகுதிமக்கள்உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-9)



## நீரிழிவுப் பரிசோதனையும் விழிப்புணர்வு கருத்தரங்கும்

யாழ்ப்பாணம், டிசெ.8
யாழ்ப்பாண பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான நீரிழிவுப் பரிசோதனையும், நீரிழிவு தொடர்பான விழிப் புணர்வுக் கருத்தரங்கும் நேற்று நடத்தப்பட்டன.

யாழ்ப்பாண நீரிழிவு அசோசியேசனின் ஏற்பாட்டில் நேற்று காலை 9 மணியளவில் யாழ். பிரதேச செயலகத்தில் அவை இடம்பெற்றன.

கருத்தரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் சிவதிருமாறன், யாழ். மாநகர சபை சுகாதார அதிகாரி மருத்துவர் ஜெசிதரன், மருத்துவர் உமாசுதன், யாழ். நீரிழிவு ஆசோசியேசன் உறுப்பினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

ஆரோக்கியமான உணவுப் பழக்க வழங்கங்களை நாம் பின்பற்றும் போது நோய்களைக் கட்டுப்படுத்தலாம். கொலஸ்ரோலும் நீழிவும் இணைபிரியாத நண்பர்களாக உள்ளன.

ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களும், உடற் பயிற்சியின் ஊடாகவும் தொற்றா நோய்களில் இருந்து விடுபட்டு நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழலாம். எமது முன்னோர்கள் கடைப்பிடித்த உணவுகளை நாங்கள் பின்பற்றத் தவறிவிடுகின்றோம். அவை ஆரோக்கியமானவை. வீட்டுத் தோட்டம் அமைத்து எமக்குரிய உணவுப் பொருள்களை பெற்றுக்கொள்ளும் போது ஆரோக்கியமாக இருக்கலாம். இலைக்கஞ்சி, கஞ்சி, கூழ், இளநீர், தயிர், மோர் மற்றும் ஆரோக்கியமான உணவுகளை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.- என்று யாழ் மாநகர சபை சுகாதார அதிகாரி மருத்துவர் ஜெசிதரன் குறிப்பிட்டார். (ந-7)

## விபத்தில் சிக்கியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிசெ.8
யாழ்ப்பாணம் நல்லூர் வீதியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

திருநெல்வேலி, கலாசாலை வீதியைச் சேர்ந்த முத்தைய சண்முகநாதன் (வயது-78) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த அவரை நல்லூர் பகுதியில் இருந்து வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியது. சுமார் 10 மீற்றர் தூரம் இழுபட்டுச் சென்ற நிலையில் அவர் படுகாயமடைந்திருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இறப்புத் தொடர்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற் கொண்டார். (ந-7)



## செல்வம் எம்.பியின் தந்தைக்கு அரசியல் தலைவர்கள் அஞ்சலி

மன்னார், டிசெ.8
நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவருமான செல்வம் அடைக்கலநாதனின் தந்தையாருடைய இறுதி அஞ்சலி நிகழ்வில் சபாநாயகர் கரு ஜெயசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

தமிழ் தேசியக் கூட்டமைப் பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதி அவைத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனின் தந்தையான சித்த வைத்தியர் அடைக்கலம் அமிர்தநாதன் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை காலமானார்.

அன்னாரது பூதவுடல் மன்னார் தோட்டவெளி ஜோசப் வாஸ் நகரில் உள்ள அன்னாரில் இல்லத்தில் மக் கள் அஞ்சலிக்காக வைக்கப் பட்டிருந்தது.

நேற்றுக் காலை சிறப்பு வானூர்தி மூலம் மன்னாருக்குச் சென்ற சபாநாயகர் கரு ஜெயசூரிய, எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட குழுவினர் செல்வம் அடைக்கலநாதனின் தந்தைக்கு அஞ்சலி செலுத்தினர்.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க, தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும்ஊடகப்பேச்சாளருமாகிய எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களில் ஒருவரான சிறிதரன், கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோகேஸ்வரன், வியாழேந்திரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் எனப் பலரும் அஞ்சலி செலுத்தினர். (ந-21,56)

## கஞ்சா கடத்திய சந்தேகத்தில் கைதானோருக்கு மறியல் நீடிப்பு

சாவகச்சேரி, டிசெ.8
காரில் கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் எழுதுமட்டுவாழில் கைது செய்யப்பட்ட இருவரின் விளக்கமறியலை நீடித்தது சாவகச்சேரி நீதிமன்று.

கடந்த மாதம் ஏ-9 வீதி வழியாக வந்த காரில் வந்தவர்கள் எழுதுமட்டுவாழ் பகுதியில் போக்குவரத்துக் கண்காணிப்பில் ஈடுபட்ட விசேட போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினரால் துரத்திப் பிடிக்கப்பட்டனர்.

காருக்குள் பொதி செய்யப்பட்ட 7 கிலோ 900 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. காரில் இருந்த இருவர் கைது செய்யப்பட்டு கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தொண்டமானாறு மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குறித்த இரு சந்தேக நபர்களுக்கும் எதிராக கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கை விசாரித்த நீதிவான் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை இருவரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ந-21,9)

## விபத்துக்களைத் தடுக்க விழிப்புணர்வுப் பேரணி




வவுனியா, டிசெ.8
விபத்துகளைத் தடுக்கும் நோக்கில் வவுனியா புளியங்குளம் பொலிஸாரால் வீதிப் பாதுகாப்புத் தொடர்பான பேரணி நேற்று நடத்தப்பட்டது.

மு.ப. 11.30 மணியளவில் புளியங்குளம் பிரதான வீதி வழியாக முன்னெடுக்கப்பட்ட விழிப்புணர்வுப் பேரணி "விபத்துக்கள் அற்ற வீதிகளை அமைக்க அனைவரும் ஒன்றிணைவோம்" என்ற தொனிப் பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டது.

அதில் பொதுமக்கள், சாரதிகள், பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ந-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 5.7 ஏக்கர் நிலத்தில் அமெரிக்கத் தூதரகம்

### புதிதாக அமைக்கும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 8

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் 5.7 ஏக்கர் நிலத்தில் விரிவாக புதிதாகக் கட்டப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப நிகழ்வு அமெரிக்கத் தூதரக வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தற்போதுள்ள அமெரிக்கத் தூதரகத்தை ஒட்டியதாக வாங்கப்பட்ட காணியை உள்ளடக்கியதாகப் பெரிய தூதரகக் கட்டடத் தொகுதியை அமெரிக்கா அமைக்கவுள்ளது.

வொஷிங்டனில் இருந்து வந்திருந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், கடல்கடந்த நிர்மாணச் செயற்பாடுகள் பிரிவின் முதன்மைப் பிரதிப் பணிப்பாளர் வில்லியம் மோசர் மற்றும் அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்றனர்.

தற்போதுள்ள கட்டடத் தொகுதியை உள்ளடக்கியதாக, புதிதாக அமைக்கப்படவுள்ள தூதரக வளாகம், தூதரகப் பணியகம், மரைன் காவல் படைக்கான வதிவிடம், உதவிக் கட்டடங்கள், மற்றும் தூதுரக சமூகத்துக்கான வசதிகளைக் கொண்டதாக இருக்கும்.

இந்தப் புதிய தூதரக வளாகம், தூதரகப் பணியாளர்களின் பாதுகாப்பான, நிலையான, உறுதித் தன்மையான, நவீன பணியிடமாக இருக்கும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. வொஷிங்டனில் உள்ள நிறுவனம் ஒன்றினால் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த தூதரக வளாகத் தொகுதியின் கட்டுமானப் பணிகளை அமெரிக்க நிறுவனம் ஒன்றே மேற்கொள்ளவுள் ளது. (த-5)

## இரு ஆண்டுகளில் 22 கோடி லீற்றர் சட்டவிரோத மதுபானம் சிக்கியது

### சட்டம் ஒழுங்கு அமைச்சர் தகவல்

யாழ்ப்பாணம், டிசெ. 8

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் 22 கோடி 79 இலட்சத்து 69 ஆயிரத்து 890 லீற்றர் சட்டவிரோத மதுபானங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான புத்திக பத்திரன எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் ஒரு இலட்சத்து 98 ஆயிரத்து 745 பேர் கைது செய்யப்பட்டனர். இவை தொடர்பில் கடந்த இரண்டு வருடங்களில் மட்டும் 2 இலட்சத்து 28 ஆயிரத்து 734 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

2014 ஆம் ஆண்டு சட்டவிரோத மதுபானங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 790 சுற்றிவளைப்புக்களின்போது கோடா வகை மதுபானம் 8 இலட்சத்து 53 ஆயிரத்து 560 லீற்றரும், சட்டவிரோத மதுபானம் ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 2725 லீற்றரும், பியர் ஒரு இலட்சத்து 66 ஆயிரத்து 974 லீற்றரும், கள்ளு 7 இலட்சத்து 38 ஆயிரத்து 823 லீற்றரும், ஸ்பிரிட் வகை மதுபானம் 3 இலட்சத்து 78 ஆயிரத்து 823 லீற்றரும் என மொத்தமாக ஒரு கோடியே 45 இலட்சத்து 62 ஆயிரத்து 593 லீற்றர் மதுபான வகைகள் கைப்பற்றப்பட்டன. இதன்போது 98 ஆயிரத்து 768 பேர் கைது செய்யப்பட்டனர்.

அதேநேரம் 2015 ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 944 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் கோடா 23 இலட்சத்து 49 ஆயிரத்து 102 லீற்றரும், சட்டவிரோத மதுபானம் 12 கோடியே 42 இலட்சத்து 11 ஆயிரத்து 796 லீற்றரும், சாராயம் 75 இலட்சத்து 50 ஆயிரத்து 523 லீற்றரும், பியர் 11 இலட்சத்து 87 ஆயிரத்து 369 லீற்றரும், கள்ளு 91 இலட்சத்து 14 ஆயிரத்து 763 லீற்றரும், சட்டவிரோத ஸ்பிரிட் வகை 10 இலட்சத்து 38 ஆயிரத்து 744 லீற்றரும் என மொத்தமாக 21 கோடியே 34 இலட்சத்து 7297 லீற்றர் மதுபான வகைகள் கைப்பற்றப்பட்டன. இவற்றுடன் தொடர்புடையவர்களாக 99 ஆயிரத்து 977 பேர் கைது செய்யப்பட்டனர் -என்றார். (த-10)

## கூரையிலிருந்து விழுந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, டிசெ. 8

மட்டக்களப்பு - வாழைச் சேனை பொலிஸ் பிரிவிலுள்ள பேத்தாழையில் உள்ள யோகா பயிற்சி நிலையத்தின் கூரையிலிருந்து தவறி விழுந்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மீராவோடை தமிழ்ப் பிரிவைச் சேர்ந்த நடேசன் சுமன் (வயது-26) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தார்.

இவர் யோகா நிலையத்தில் கூரைத் திருத்த வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது தவறி தலை அடி படக் கீழே விழுந்துள்ளார்.

மயக்கமடைந்த அவரை உடனடியாக வாழைச் சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்தபோதும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். (த-ய-46)

## மத வாதத்தை ஒழிக்க மதத் தலைவர்கள் ஒன்றுபடவேண்டும்

### ராகுல தேரர் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 8

நாட்டுக்குள் காணப்படும் மத அடிப்படைவாதச் செயற்பாடுகளை தடுப்பதற்குச் சகல மத தலைவர்களும் உடன் ஒரு மேசையில் அமர்ந்து கலந்துரையாட வேண்டும் என ராகுல தேரர் தெரிவித்துள்ளார்.

தம்புள்ளை செயலகர் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த நாட்டிலுள்ள பௌத்த விகாரைகளைப் பாதுகாப்பதற்கு கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். இதற்காகக் காத்திரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். தான் இது தொடர்பில் நாட்டுத் தலைவர்களை அறிவுறுத்த நடவடிக்கை எடுத்த போதிலும், அது பயனளிக்காதுள்ளது. ஊடகங்கள் இது தொடர்பில் மக்களை அறிவூட்ட வேண்டும்-என்றார். (த)

## மழைவேண்டி பிரார்த்தனை

மட்டக்களப்பு, டிசெ. 8

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளில் இம்முறை பருவமழை குறைவடைந்துள்ளதால் நெற்பயிர்கள் நீரின்றிக் கருக ஆரம்பித்துள்ளன.

இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்றுப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மழைவேண்டி சிறப்புப் பிரார்த்தனை இடம்பெற்றது.

இலுப்படிச்சேனை, வெப்பவெட்டுவான், கொம்பர் சேனை, பண்டாரியாக்கட்டுப் பகுதி விவசாயிகள் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். (த-ய-46)

## கூட்டு எதிர்க் கட்சியில் பிளவு எதுவும் இல்லை

### கூறுகிறார் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, டிசெ. 8

கூட்டு எதிர்க்கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து மக்களைத் திசை திருப்ப அரசு பரப்புரை செய்து வருவதாகக் கூட்டு எதிர்க் கட்சியின் இணைப் பாளர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த , பசில் ராஜபக்சவை விமர்சித்ததால் பிளவு ஏற்பட்டுள்ளதாக ஊடகங்கள் அறிக்கையிட்டிருந்தாலும் அவ்வாறான ஒரு விடயம் நடக்கவில்லை எனவும் அவர் கூறினார். அரசுடன் தொடர்புபட்டவர்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடல்கள் வெற்றிகரமானது எனவும், அவர்கள் உரிய நேரத்தில் கூட்டு எதிர்க்கட்சியுடன் சேர விருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (த)

## பெண்கள் மீதான வன்முறைக்கு எதிராகக் கையெழுத்து வேட்டை

திருமலை, டிசெ 8

பெண்களுக்கு எதிரான அனைத்து வன்முறைகளையும் இல்லாது ஒழிப்போம் என்ற தொனிப்பொருளில் திருகோணமலை மாவட்டத்தில் கையெழுத்துப் பெறும் நடவடிக்கை இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்டப் பெண்கள் வலையமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கையெழுத்து பெறும் நடவடிக்கை, நேற்று முற்பகல் 10.00 மணியளவில் திருகோணமலை - அனுராதபுரச் சந்தி சந்தைத் தொகுதிக்கு அருகாமையில் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வு இன்று மூதூரில் இடம்பெறவுள்ள தாகவும், இதனைத் தொடர்ந்து கையெழுத்துப் பெறப்பட்ட அட்டைகளுடன் மனு ஒன்றும் ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளதாகவும் பெண்கள் வலையமைப்பினர் தெரிவித்தனர்.



பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் இந்த வருடத்தில் மாத்திரம் 1700 க்கும் அதிகமான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக பெண்களுக்கான தேசியக் குழு தெரிவித்துள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிகைக்காலத்தில் விசேட கழிவுகளை வழங்கும் ஊக்குவிப்புத் திட்டம் அறிமுகம்

## கொமர்சல் வங்கியின் கிரடிட் காட் மற்றும் டெபிட் காட் வைத்திருப்போர் பெறமுடியும்

**விசேட கழிவு**

**கிரடிட் காட் கழிவு**
15 வீதம்
முதல் 50 வீதம்

**டெபிட் காட் கழிவு**
10 வீதம்
முதல் 50 வீதம்

COMMERCIAL BANK

பண்டிகைக்காலத்தில் விசேட கழிவுகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் மெக்ஸ் லோயல்டி வெகுமதி ஊக்குவிப்புத் திட்டம் ஒன்றினை கொமர்சல் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

நவம்பர் மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மேற்படி திட்டமானது டிசெம்பர் மாதத்தின் பண்டிகைக் காலம் வரை நடைமுறையில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. சில நிலையங்களில் இந்தக் கழிவு நடைமுறை இரண்டு தினங்கள் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் இன்னும் சில இடங்களில் 15 தினங்களுக்கும் நடைமுறையில் இருக்கும் என்பதான தகவலும் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் கொமர்சல் வங்கியின் கிரடிட் காட் மற்றும் டெபிட் காட் வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் நத்தார் பண்டிகை பருவ காலத்தில் பொருள் கொள்வனவில் ஈடுபடும் போது விசேட கழிவுகளை பெற்றுக்கொள்ள முடியுமென தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையிலே மேற்படி திட்ட நடைமுறைப்படுத்தலில் நாட்டின் முன் னணி ஆடை விற்பனை நிலை யங்கள், காலணி, நகை, அலங்காரபொருள்கள், வாசனைப் பொருள்கள், விளையாட்டுப் பொருள்கள் மற்றும் உபகரணங்கள் என்பனவற்றை விற்பனை செய்யும் முன்னணி நிலையங்களை உள்ளடக்கியதான ஏறத்தாழ 100 முன்னணி வர்த்தக நிலையங்கள் முன்வந்து இணைந்துகொண்டுள்ளன.

மேலும் நாட்டில் உள்ள மிகவும் பிரபலமான பிரதான சில்லறை விற்பனைக் காட்சியகங்களில் கொமர்சல் வங்கி கிரடிட் கார்ட்களுக்கு மேலும் பெறுமதி சேர்க்கும் வகையில் கழிவுகள் மற்றும் வட்டியற்ற இலகு தவணை கொடுப்பனவு என்பனவற்றை வழங்கும் கொம்டீல் திட்டம் ஏற்கனவே நடைமுறையில் உள்ளதுடன் இந்த திட்டத்தின் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் வசதிகளை மேலும் மேம்படுத்தும் வகையிலேயே இந்த திட்டம் அமைந்துள்ளதாக கொமர்சல் வங்கி தெரிவித்துள்ளது.

இவை தவிர விசா மற்றும் மாஸ்டர் காட் நிறுவனங்கள் உலகளாவிய ரீதியில் நடத்தும் ஊக்குவிப்புத் திட்டங்களில் பங்கேற்கும் வாய்ப்பும் கொமர்சல் வங்கி காட் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்றமை நோக்கத்தக்கது.

அதேவேளை மெக்ஸ் லோயல்டி வெகுமதி திட்டத்தின் மூலம் கிரடிட் மற்றும் டெபிட் காட்களுக்கான வெகுமதிகளை வழங்கும் ஒரே வங்கியாக கொமர்சல் வங்கி திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**“நேபாளத்துக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் தெற்காசிய பிராந்தியத்தில் ஊழியர் புலம்பெயர்வை இலகுவாக்கல், பாதுகாப்பாக்கல் தொடர்பிலான கருத்தரங்கு”**




# புலம்பெயர்வு தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் இயைபாக கொண்டுள்ள அனுபவப் பகிர்வை ஊக்குவிக்கும் நிகழ்வு

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் தெற்காசிய பிராந்தியத்தில் எதிர்கொள்கின்ற பலவித சவால்களைக் கவனத்தில் கொண்டு மேற்படி தெற்காசிய பிராந்தியத்தில் ஊழியர் புலம்பெயர்வை இலகுவாக்கல், பாதுகாப்பாக்கல் எனும் தொனிப்பொருளில் ஆன பிராந்திய கருத்தரங்கு நிகழ்வுகள் அண்மையில் (DAI) டி.ஏ.ஐ. ஐரோப்பா மற்றும் தெற்காசிய கற்கைகளுக்கான நிலையம் என்பவற்றின் அனுசரணையில் இடம்பெற்றிருந்தது. அரச நிறுவனங்கள், கல்வியகங்கள், சிந்தனையாளர்கள், சிவில் சமூகம், ஊடகங்கள், புலம்பெயர் சம்மேளனங்கள், தனியார் துறை, சர்வதேச சமூகம், எஸ்.ஏ.ஏ.ஆர்.சீ. செயலகம் மற்றும் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளைச் சேர்ந்த ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் அங்கத்தவர்கள் இந்த கருத்தரங்கு நிகழ்வில் சர்வதேச பங்குபற்றுநர்களாக கலந்துகொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அந்தவகையிலே தெற்கு மற்றும் தென்கிழக்காசியா நாடுகள் மத்தியில் ஊழியர்கள் புலம்பெயர்வை நிர்வகிப்பது தொடர்பில் விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளை ஐரோப்பிய ஒன்றியம் முன்னெடுத்துள்ளதுடன் பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான செயன்முறைகளுக்கு, புலம்பெயர் மற்றும் நடமாடல் செயற்பாடுகளுக்கு உட்பட்டதாக இவற்றைவரையறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலைகளுக்கு இடையேயான கால்பந்தாட்ட போட்டித்தொடர்

### அனுசரணை வழங்கியது சமபோச

முன்னணி தானிய ஆகார வர்த்தகநாமமான சமபோசவுடன் இணைந்து இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் மற்றும் இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கம் என்பன ஏற்பாடு செய்திருந்த 15 வயதுக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான கால்பந்தாட்ட போட்டித்தொடர்கள் அண்மையில் வென்னப்புவ சேர்.அல்பர்ட் பீரிஸ் விளையாட்டரங்கில் இடம்பெற்றிருந்தது.

மேற்படி போட்டித் தொடரில் சிறந்த வீரருக்கான விருதை திகம்பிட்டிய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த நயனி தமாஷா ஜயபந்துவும், சிறந்த கோல் காப்பாளருக்கான விருதை பேனி தில்ஹர ஜயசிங்கவும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டித்தொடர் குறித்து இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்தின் பொதுச் செயலாளர் என்.எஸ்.பி.திசாநாயக்க வெளிப்படுத்திய கருத்துரையில்,

இந்தப் போட்டித்தொடருக்கான பங்களிப்பு குறித்து நாம் மிகவும் பெருமையடைகிறோம். இந்த வீரர்களின் அபாரமான ஆர்வம் மற்றும் திறமைகளைக் கண்டுநாம் வியப்படைகிறோம். கால்பந்தாட்டத் துறையில் வளர்ந்துவரும் வீரர்களை அடையாளம் காண்பதற்கான வாய்ப்பை நாம் பெற்றுள்ளதையிட்டு மகிழ்வடைகிறோம்"என்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

CSE
COLOMBO STOCK EXCHANGE

147 2/3, K.K.S Road Jaffna - 2122221455

பங்குச் சந்தை தகவல்கள்

| | | 7/12/2016 | www.cse.lk |
|---|---|---|---|
| சுட்டிகள் | | இன்று | நேற்று |
| ASPI | -23.10 | 6,327.30 | 6,350.40 |
| S&P SL20 | -6.21 | 3,533.84 | 3,540.05 |
| வியாபாரப் புரள்வு | | 830,145,280 | 492,971,744 |
| உள்நாடு- கொள்வனவு | | 389,103,200 | 182,637,712 |
| விற்பனை | | 283,481,440 | 219,508,896 |
| வெளிநாடு- கொள்வனவு | | 441,042,080 | 310,334,048 |
| விற்பனை | | 546,663,810 | 273,462,848 |



| அதிகூடிய பங்குப்பரிமாற்றம் கம்பனி | குறியீடு | இறுதி விலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| எயிட்கன் ஸ்பென்ஸ் | SPEN.N | 65 | 3,262,445 | 212,058,930 |
| டயலொக் | DIAL.N | 10.40 | 18,093,920 | 189,985,042 |
| நெஸ்லே லங்கா | NEST.N | 2,050.0 | 53,963 | 110,616,622 |
| லயன் பிரெவெரி சிலோன் | LION.N | 494.00 | 148,685 | 72,855,056 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 151 | 479,142 | 72,370,079 |
| கொமர்சியல் கிரெடிட் அண்ட் பைனான்ஸ் | COCR.N | 64 | 642,709 | 43,328,387 |
| அக்ஸஸ் இஞ்சினியரிங் | AEL.N | 25 | 1,669,711 | 41,740,469 |
| சென்ட்ரல் பைனான்ஸ் | CFIN.N | 100.0 | 173,368 | 17,325,518 |
| மெர்க்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் | MERC.N | 2,560.00 | 3,340 | 8,550,400 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 143 | 58,568 | 8,375,252 |

**அறிவித்தல்கள்**

பங்குலாபம்
சென்ட்ரல் பைனான்ஸ் (CFIN) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.50
கெமிக்கல் இன்டஸ்ரி (CIC) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.00
யுனைட்டட் மோட்டர்ஸ் லங்கா (UML) -பங்கு ஒன்றிற்கு Rs. 2.50

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 294 |
| பரிமாற்றத்தில் | 187 |
| விலை உழைப்பு | 12.2 |
| புத்தகப்பெறுமதி | 1.4 |
| பங்குலாப விளைவு | 2.8 |

நுட்பம்



# வளைந்த ஓலெட் டிஸ்பிளேயுடன் ஐபோன் 8

கைபேசிச் சந்தை உலகில் முன்னணியில் திகழும் அப்பிள் நிறுவனம் தனது அடுத்து வெளியீடான ஐபோன் 8 இனை வளைந்த ஓலெட் (OLED) டிஸ்பிளேயுடன் வெளியிடவுள்ளதான தகவலை வெளியிட்டுள்ளது.

அந்த வகையிலே இவை அன்ரோயிட் அதிதிறன் பேசிகளுக்கு இணையான தயாரிப்பாக இருக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது.

அப்பிள் ஐபோன் தனது 10ஆவது ஆண்டு விழாவினை வரும் வருடம் கொண்டாடவுள்ள நிலையில் ஐபோன் 8 குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன. அதேவேளை 2017ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையிலே இக் கைபேசியில் வயர்லெஸ் சார்ஜிங் அம்சம் இடம்பெறும் எனக் கூறப்படுகிறது. இதற்காக வயர்லெஸ் சார்ஜிங் தொழில் நுட்பத்திற்கெனத் தனி ஆய்வு மையத்தை அப்பிள் நிறுவனம் கட்டமைத்திருப்பது இதனை உறுதி செய்யும் வகையில் அமைந்துள்ளது.

4.7, 5.5 மற்றும் 5.8 இன்ச் எனும் அளவுகளில் மூன்று விதமான டிஸ்பிளே ஐபோன் 8 கைபேசிகளில் எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிர்ந்தது இந்தோனேசியா 54 பேர் பரிதாப உயிரிழப்பு

ஜகார்த்தா, டிசெ. 8
இந்தோனேசியாவின் சுமாத்திராத் தீவில் ஆக் மாகாணத்தில் நேற்று இடம்பெற்ற நில அதிர்வில் 54 பேர் உயிரிழந்தனர், நூற்றுக் கணக்கானோர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
பிடைஜெயா என்ற பகுதியில் ஏற்பட்ட இந்த நில அதிர்வு, ரிச்டர் அளவில் 6.5 எனப் பதிவானது. கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி சாவடைந்த 54 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். காயமடைந்தவர்களில் பலரது நிலமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று அச்சமும் விடுக்கப்பட்டது. மீட்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. சுனாமி அபாய எச்சரிப்பும் விடுக்கப்பட்டது. (ம-எ)



# அம்மாவே அம்புலன்ஸில் வருகிறார் உங்களுக்கு சுழல்விளக்குக் காரா?

அ.தி.மு.க. இடையே முறுகல்



தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் ஜெயாவின் உடல் அப்பல்லோ மருத்துவமனையில் இருந்து சென்னை போயஸ் கார்டனுக்கு கொண்டு செல்லப்பட்டபோது அமைச்சர்கள் தமது சுழல் விளக்குகள் பொருத்தப்பட்ட கார்களில் பின்னால் சென்றார்கள். அப்போது சில அ.தி.மு.க. தொண்டர்கள் கார்களை விட்டு இறங்குமாறு அமைச்சர்களுடன் முறுகலில் ஈடுபட்டனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
அமைச்சர்களின் கார்களைத் தாக்கியும், தட்டியும், வழிமறித்தும் அவர்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். நிலமை கட்டுக்குள் அடங்காமல் போவதை உணர்ந்த பொலிஸார் தடியடி நடத்தி தொண்டர்களைக் கலைத்தனர் என குறித்த ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## புதிய 100 ரூபா விரைவில் வரும்

புதிய 100 ரூபா நோட்டுக்களை விரைவில் பாவனைக்கு விடவுள்ளதாக இந்திய மத்திய அரசு அறிவித்தது. இந்தியாவில் அதிகரித்திருக்கும் ஊழல் மற்றும் கறுப்புப்பணச் சிக்கல்களை இல்லாமல் செய்வதற்காக பல திட்டங்களைப் பரிசீலித்து வந்த மோடி சில வாரங்களுக்கு முன்னர் நடைமுறையிலிருந்த 500 மற்றும் 1000 ரூபா நோட்டுக்களை செல்லாது என அறிவித்து, பதிலாக புதிய 500 மற்றும் 2 ஆயிரம் ரூபா நோட்டுக்களை நடைமுறைக்குக் கொண்டுவந்தார். பதுக்கப்பட்டிருக்கும் நோட்டுக்கள் குப்பையாகும் என்பதே இந்தத் திட் டம். ஆனால் சில்லறை இல்லாமல் மக்கள் பெரும் சிரமப் படுகின்றனர்.
இந்தத் திட்டம் தவறானது. எனவே மத்திய அரசு திரும்பப் பெறவேண்டும் என்று சில கட்சிகள் போர்க்கொடி தூக்கின. எதிர்ப்புக்கள் பெருகிவரும் நிலையில் திட்டத்தை திருப்பிப் பெறமுடியாது எனத் தெரிவித்த மத்திய அரசு சில்லறைப் பிரச்சினையை சமாளிப்பதற்காக புதிய 100 ரூபா நோட்டை அறிமுகம் செய்யவுள்ளதாகத் தெரிவித்தது. (ம-எ)

## தமிழ்நாட்டுக்கு ஆதரவு

இந்திய மத்திய அரசின் ஆதரவு தமிழ்நாட்டுக்கு எப்போதும் உண்டு என்று பிரதமர் நரேந்திர மோடி முதலமைச்சர் பன்னீர் செல்வத்திடம் தெரிவித்தார். தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக பிரதமர் நரேந்திரமோடி, நேற்றுமுன்தினம் சென்னை வந்தார். தனது அஞ்சலியைச் செலுத்திய பின்னர் புன்னீர் செல்வத்துடன் உரையாடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
மத்திய அரசு எந்த நேரத்திலும், எத்தகைய உதவியையும் தமிழகத்துக்குச் செய்யத் தயாராக உள்ளது. எந்தப் பிரச்சினை வந்தாலும், தமிழகத்துக்கு மத்திய அரசு தொடர்ந்து ஆதரவாக இருக்கும் என்று மோடி மேலும் தெரிவித்தார். (ம-எ)

# ஜெயாவின் முக்... சோ.ராமசாமி ...

சென்னை, டிசெ. 8
ஜெயலலிதாவின் முக்கிய ஆலோசகர்களில் ஒருவரான சட்டத்தரணி சோ.ராமசாமி நேற்று அதிகாலை உயிரிழந்தார்.



தமிழ்நாட்டு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா இதய நிறுத்தம் ஏற்பட்டு சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் கடந்த திங்கட்கிழமை உயிரிழந்தார். அவரது சாவு, ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் கதிகலங்க வைத்துள்ளது. அ.தி.மு.க. கட்சி நிலைகுலைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் ஜெயாவின் முக்கிய ஆலோசகரான 'சோ' உடல் நலக்குறைவு காரணமாக சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் நேற்று அதிகாலை உயிரிழந்தார். அப்பல்லோ மருத்துவமனையும் சோவின் உறவினர்களும் தகவலை உறுதிப்படுத்தினர்.
'துக்ளக்' பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரும், நடிகரும், சட்டத்தரணியும், அரசியல் விமர்சகருமான சோவின் மறைவு அடிமேல் அடியாக தமிழ்நாட்டுக்கு வந்து சேர்ந்துள்ளது. சோவின் மறைவுக்கு அரசியல் பிரமுகர்கள், திரையுலகத்தினர் எனப் பலரும் தமது இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர்.

### மோடி உருக்கம்

'சோ' ராமசாமி எதைக் கண்டும் அஞ்சாத உறுதி படைத்தவர். சோ சிறந்த தேசியவாதி, அறிவுக் கூர்மை வாய்ந்தவர், பன்முகத்தன்மை கொண்டவர். அச்சமில்லாமல் பேசும் உறுதி படைத்தவர். வெளிப்படையான தன்மை கொண்ட புத்திசாலி. இவை அனைத்துக்கும் மேலாக அவர் என்னுடைய நெருங்கிய நண்பர். சோ. ராமசாமியின் குடும்பத்துக்கும், அவருடைய துக்ளக் பத்திரிகை வாசகர்களுக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று மோடி தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டார்.

### ரஜனி புகழஞ்சலி

சோவின் உடலுக்கு அஞ்சலி செலுத்திய ரஜனி, 1978 ஆம் ஆண்டிலிருந்து எனக்கு 'சோ' நல்ல நண்பர். சென்னையில் இருந்தால் வாரத்துக்கு ஒருமுறையாவது அவரைச் சந்திப்பேன். பத்திரிகை துறையில் பெரிய ஜாம்பவானாக திகழ்... தவர். பொய் சொல்லாமல் எவருக்கும் பயப்படாமல் வாழ்ந்தவர். அவர் பொய் சொல்லி இதுவரை நான் கேள்விப் பட்டது இல்லை. அவரது நட்பு வட்டாரம் தமிழகம் மட்டுமல்ல டில்லி வரை வளர்ந்து கிடந்தது. இவ்வளவு பெரிய மனி... தரின் இழப்பு சாதாரண... மானது இல்லை என... தெரிவித்தார்.

### ஸ்டாலின் அதிர்ச்சி

முதுபெரும் பத்திரிகை ... பத்திரிகையை முதன் முத... 'துக்ளக்' வார இதழின் ... மறைந்த செய்தி கேட்டு ... நெருக்கடி நிலையை சந்... 'துக்ளக்' பத்திரிகையை ... தமிழக எதிர்க்கட்சித் தலை...

> 'துக்ளக்... ஆசிரிய... அரசிய... மறைவ... வந்து ...

மறைவுக்கு அரசியல் பி... திரையுலகத்தினர் என ப... இரங்கலைத் தெரிவித்து...

# 'ஜெ' இறந்த அதிர்ச்சி: உயிரிழப்பு 43 ஆனது



தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா உயிரிழந்த அதிர்ச்சியில் தமிழ்நாட்டில் சாவடைந்தவர்கள் எண்ணிக்கை 43 ஆக அதிகரித்தது.
செப்ரெம்பர் 22ஆம் திகதி சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் ஜெயலலிதா சேர்க்கப்பட்டார். நுரையீரலில் ஏற்பட்ட நோய்த் தொற்றுக் காரணமாகவே அவர் மருத்து வமனையில் சேர்க்கப்பட்டார் என பின்னர் தெரிவிக்கப்பட்டது. ஜெயலலிதா பூரண குணமடைந்தார் என்றும் அவர் விரும்பும் நேரத்தில் வீடு திரும்பலாம் என்றும் அப்பல்லோ மருத்துவமனை சில தினங்களுக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பித்திருந்தது. இதனால் ஜெயலலிதா விரைவில் பணிகளுக்குத் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கடந்த திங்கட்கிழமை இதய நிறுத்தம் காரணமாக சாவடைந்தார். ஜெயலலிதாவின் இழப்பு ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் தூக்கிவாரிப் போட்டது. ராஜாஜி அரங்கில் அவரது உடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பிரதமர் மோடி, குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி உட்பட இந்தியா வெங்கிலும் இருந்து அரசியல் பிரமுகர்கள் ஒன்றுதிரண்டு அவருக்குத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். ஜெயாவின் இழப்பை அறிந்ததும் மாரடைப்பு ஏற்பட்டும் தற்கொலை செய்து கொண்டும் 29 பேர் சாவடைந்தனர் என நேற்றுமுன்தினம் இரவு தெரிவிக்கப்பட்டது. நேற்று மதியம் வெளியான தகவல்களின் அடிப்படையில் உயிரிழப்பு எண்ணிக்கை 43 ஆக அதிகரித்தது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மூலம் ஜெயலலிதாவின் செய்தியைக் கேட்டு அதிர்ச்சியில் அவர்கள் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டது என குறித்த ஊடகங்கள் மேலும் தெரிவித்தன. (ம-எ)



## இந்தோனே... சிறிய ரக ...

15 பேர் உயி...

ஜகார்த்தா, டிசெ. ... இந்தோனேசி... கடந்த சனிக்கிழமை... மல்போனசிறியரக... விமானம், கடலில்... விபத்துக்குள்ள... எனத் தெரிவிக்க... இந்தோனேசியாவி... சனிக்கிழமை 'எம்2... ட்ரக்விமானமொன்... பாட்டு அறையுட... வலை இழந்து கா... போனது. விமா... தேடும் பணிகள் து... யில் மேற்கொள்... டுள்ளன எனத் தெ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கிய ஆலோசகர்
# ...ற்று உயிரிழப்பு





சலி செலுத்தினார்.

...ஆசிரியரும், புலனாய்வு
...லில் தொடக்கியவருமான
...ஆசிரியர் சோ ராமசாமி
...அதிர்ச்சிக்குள்ளானேன்.
...தித்து எதிர்நீச்சல் போட்டு
...நடத்தியவர் சோ என்று
...லவர் ஸ்டாலின் புகழஞ்

**ராமதாஸ் அனுதாபம்**

'துக்ளக்' பத்திரிகை ஆசிரியரும், அரசியல் விமர்சகருமான சோ ராமசாமி உடல்நலக் குறைவால் சென்னையில் இன்று காலமானார் என்று செய்தி கேட்டு அதிர்ச்சியும், வேதனையும், துயரமும் அடைந்தேன். அவரது அரசியல் விமர்சனங்களுக்கு ஆளாகாத தலைவர்கள் எவருமில்லை என்று பா.ம.க. நிறுவநர் ராமதாஸ் புகழஞ் சலி செலுத்தியுள்ளார். (ம-எ)

...' பத்திரிகையின் முன்னாள்
...ரும், நடிகரும், சட்டத்தரணியும்,
...ல் விமர்சகருமான சோவின்
... அடிமேல் அடியாக தமிழ்நாட்டுக்கு
...சேர்ந்துள்ளது. சோவின்
...ரமுகர்கள்,
...லரும் தமது
... வருகின்றனர்.

# ஆங் சாங் சூகிக்கு எதிராக கோலாலம்பூர் கொந்தளிப்பு

மியன்மார் அரசு தனது எல்லைக்குட்பட்ட றொகின்கய இஸ்லாமிய இனத்தவர்களை இனச் சுத்திகரிப்புச் செய்ய முயல்கிறது என ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சுமத்தியதை அடுத்து மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் மியன்மாரின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஆங்சாங் சூகிக்கு எதிராகவும் மியன்மார் அரசுக்கு எதிராகவும் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது.

மியன்மார் ஒரு பௌத்த நாடு. பங்களாதேஷில் இருந்து மியன்மாரின் றொகின் மாநிலத்துக்கு வந்து அகதிகளாகக் குடியேறியவர்கள் றொகின்கிய இஸ்லாமியர்கள் என்று அறியப்படுகின்றனர். மியன்மாரின் சிறுபான்மை இனத்தவர்களாக அவர்கள் உள்ளனர். குறித்த இஸ்லாமிய இனத்தவர்களைக் கொல்வதும், பங்ளாதேஷுக்குச் செல்ல வலியுறுத்தும் சம்பவங்களும் அங்கு அடிக்கடி இடம்பெறுகின்றன. அண்மையில் 400 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இதுவரை 1200 வீடுகள் எரியூட்டப்பட்டன என ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான பிரதிநிதி ஜோன் மெக்கிசிக் அண்மையில் தெரிவித்தார். துப்பாக்கிச் சூடு, வன்புணர்வு, கொலை போன்ற அசம்பாவிதங்களும் றொகின்கிய இஸ்லாமியர்களுக்கு எதிராக அரங்கேறுகின்றன. இது ஒரு திட்டமிட்ட இனச் சுத்திகரிப்பு என ஐக்கிய நாடுகள் சபை சாடியது.

விவகாரத்தில் மலேசியாவின் தலையீட்டை விரும்பவில்லை என மியன்மார் அரசு சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்தது. இந்த நிலையில் மியன்மாரின் நடவடிக்கைகளைக் கண்டித்து பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுதிரண்டு கோலாலம்பூரில் மிகப் பெரும் பேரணியை நேற்றுமுன்தினம் நடத்தினர். நஜிப் ராசாக்கும் இதில் கலந்து கொண்டார்.

மியன்மாரில் நடப்பவற்றைத் தட்டிக் கேட்பதற்காக தன்னை விமர்சித்துவரும் மியன்மார் அரசைப் பற்றி கவலை இல்லை. 3 கோடி மக்களைக் கொண்ட மலேசியா நாட்டின் தலைவர் என்ற முறையில் மியன்மாரில் நடைபெறும் இன அழிப்பைப் பற்றி கவலைப்படாமல், கண்களை மூடிக் கொண்டு அமைதியாக இருக்க முடியாது என நஜிப் மேலும் தெரிவித்தார்.




ஐக்கிய நாடுகள் சபையின் கருத்தை மலேசியப் பிரதமர் நஜிப் ரசாக் வரவேற்றார். மியன்மாருக்கு தனது கண்டனத்தையும் தெரிவித்தார். ஆனால் தனது (ம-எ)



# ...சியாவில் காணாமல்போன ...பொலிஸ் விமானம் விபத்து
## ...ரிழந்தனர் என அறிவிப்பு

...8
...யாவில்
...மகாணா
...போலிஸ்
...ல் மூழ்கி
...ளானது
...ப்பட்டது.
...ில் கடந்த
...28 ஸ்கை
...று கட்டுப்
...டன் தக
...ாணமல்
...னத்தை
...துரித கதி
...ள்ளப்பட்
...தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் குறித்த விமானம் கடலில் 24 மீற்றர் ஆழத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது என நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. 8 பொலிஸார், 5 சிப்பந்திகள் உட்பட விமானத்தில் மொத்தம் 13 பேர் பயணம் செய்தனர் எனவும் அவர்கள் அனைவரும் உயிரிழந்தனர் எனவும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. கறுப்புப் பெட்டியை தேடும்பணிகள் துரிதப்படுத்தப்பட்டன. (ம-எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மன்னிப்புக் கேட்பது மனிதத்தின் அடையாளம்

யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்டதற்காக நாடாளுமன்றத்திலே நேற்றுமுன்தினம் பகிரங்க மன்னிப்புக் கோரினார் இலங்கையின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க. 35 ஆண்டுகளின் பின்னர் சிங்களத் தலைவர் ஒருவர் நூலக எரிப்புக்காக மன்னிப்புக் கோரியிருக்கிறார். தமது தவறை உணர்ந்து கொள்வதற்கு சிங்களத் தலைவர்களுக்கு இவ்வளவு காலம் தேவைப்பட்டுள்ளது.

1981 ஜூன் மாதம் முதலாம் திகதி இரவு யாழ். நூலகம் எரித்து சாம்பராக்கப்பட்டது. அப்போதும் ஆட்சியில் இருந்தது ஐக்கிய தேசியக் கட்சியே. நாட்டின் தலைவராக இருந்தவர் ரணிலின் உறவினரான ஜே.ஆர்.ஜெயவர்த்தன. அவரது காலத்திலோ, அதன் பின்னர் வந்த எந்தவொரு தலைவரின் காலத்திலோ நூலக எரிப்புக்காக வருத்தம்கூடத் தெரிவிக்கப்பட்டது கிடையாது.

ஆசியாவிலேயே மிகப் பெரிய நூலகமாகத் திகழ்ந்தது யாழ். பொது நூலகம். கையெழுத்துப் பிரதிகள், ஓலைச்சுவடிகள் என மிக அரிய சேகரிப்புகள் உட்பட 97 ஆயிரம் நூல்கள் இருந்தன. தமிழ் மக்களின் பங்களிப்புடனேயே கட்டியெழுப்பப்பட்டது. 1933ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பணி அது. 1959ஆம் ஆண்டு முன்னாள் யாழ்ப்பாண முதல்வர் அல்பிரட் துரையப்பா நூலகத்தின் ஒரு பகுதியைத் திறந்து வைத்தார். ஈழத் தமிழ் மக்களின் பெருமை மிகு பொக்கிசமாக அது மிளிர்ந்தது. அதுவே அதன் அழிவுக்கும் காரணமாக இருந்தது.

தமிழ் இனத்தின் அடையாளமாக இருந்த நூலகம், இன அடக்குமுறையின் – இன அழிப்பின் – ஓர் அங்கமாக எரித்தழிக்கப்பட்டது. பொலிஸாரும், அரச ஆதரவு பெற்ற காடையர்களும் இணைந்து யாழ்ப்பாணப் பொது நூலகத்திற்குத் தீ வைத்ததற்கு நேரடிச் சாட்சிகள் உண்டு என்ற கூறப்படுகிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களான காமினி திசநாயக்கா மற்றும் லலித் அத்துலத்முதலி ஆகியோரின் ஆசீர்வாதத்துடன்தான் இவையனைத்தும் செய்யப்பட்டன என்கிற குற்றச்சாட்டும் உண்டு.

நூலகம் எரிக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதம் ஒன்றில் பேசிய ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார, தமிழர்களுக்கு இலங்கை தாயகம் இல்லை, இங்கு தாங்கள் சிறுமைப்படுத்தப்படுகிறார்கள் என்று கருதினால், அவர்கள் தங்கள் தாயகமான இந்தியாவுக்கே திரும்பிச் செல்லலாம் என்று தெரிவித்தார். அந்தளவிற்கு நூலக எரிப்பையும் அப்போது நடந்த தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளையும் நியாயப்படுத்தும் போக்கே இருந்தது. இன்று காலம் மாறியிருக்கிறது.

அதன் பின்னர் இரண்டு தடவைகள் இரு தலைவர்கள் இந்த விடயம் குறித்து நாடாளுமன்றத்தில் பேசியிருக்கிறார்கள். எனினும் அவர்கள் அதற்காக வருத்தம்கூடத் தெரிவித்ததில்லை. 1991ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் பேசிய அப்போதைய அரச தலைவர் ரணசிங்க பிரேமதாச, அவருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசுகையில், “விலைமதிப்பில்லாத யாழ்ப்பாண நூல் நிலையத்தை எரித்தவர்களை நீங்கள் கண்டறிய விரும்பினால் எங்களை எதிர்ப்பவர்களின் முகங்களை நீங்கள் பார்த்தால் போதும்” என்றார். லலித் அத்துலத்முதலி மற்றும் காமினி திசநாயக்க உள்ளிட்டோரால் அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருந்தது.

அதன் பின்னர் 2006ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் பேசிய அப்போதைய அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் “1983 இனக் கலவரங்களுக்கும் தமிழர்களுக்கு எதிரான படுகொலைகளுக்கும் யாழ். பொது நூலக எரிப்புக்கும் ஐக்கிய தேசியக் கட்சியே காரணம்” என்று தெரிவித்திருந்தார்.

இப்போதுதான் முதற்றடவையாக அந்தச் சம்பவத்திற்காக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் மன்னிப்புக் கேட்டிருக்கிறார். தவறை உணர்வதற்கு 35 ஆண்டுகள் சிங்களத் தலைவர்களுக்குத் தேவைப்பட்டிருக்கிறது. இதுகூட போகிற போக்கில் கேட்கப்பட்ட மன்னிப்பாகத்தான் இருக்கிறதே தவிர, முறையாக தமிழ் மக்களிடம் கேட்கப்பட்ட மன்னிப்பாகத் தெரியவில்லை. இருந்தாலும் தவறு என்று உணர்ந்த பின்னர் மன்னிப்புக் கேட்பதே மனித மாண்பு. 35 வருடங்கள் கழித்தாவது சிங்களத் தலைவர்கள் அதைச் செய்தார்களே என்று ஆறுதல்பட்டுக்கொள்ள வேண்டியதுதான்.

நூலக எரிப்புச் சம்பவத்தைவிட மோசமான சம்பவங்களும், இனப் படுகொலையும் அதன் பின்னர் நடந்து முடிந்திருக்கின்றன. அவற்றுக்கு எப்போது மன்னிப்புக் கேட்கப்போகிறார்கள்?

# தொலைபேசி உரையாடலால் ஐ.ஜி.பிக்கு பெரும் சிக்கல்

## “சேர்” என்று விளிக்கப்பட்டவர் யார்? என்பதை அறிவதற்கு சபையில் சர்ச்சை

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
ரெங்கன்



இரத்தினபுரியில் நிகழ்வொன்றில் பங்குபற்றிக் கொண்டிருந்த போது தமக்கு வந்த கைபேசி அழைப்பொன்றுக்கு பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர பதில் அளித்திருந்த விடயம் குறித்து இப்பொழுது பெரும் புரளியொன்று கிளப்பி விடப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் அவ்வாறு தொலைபேசியில் உரத்த குரலில் பேசிக் கொண்டிருந்ததை, துணிச்சல்மிக்க தொலைக்காட்சி நிருபர் ஒருவர் பதிவு செய்து ஒளிபரப்புச் செய்துள்ளார். தொலைபேசியில் அடுத்தமுனையில் இருந்து பேசியவரின் குரல் பதியப்படாமல் போனாலும், அவ்வாறு தொடர்பு கொண்டவர் “சேர்” என்று விளிக்கப்பட்டிருப்பதுடன், “நிலமே” என்ற ஒரு நபர் கைது செய்யப்படுவதைத் தவிர்க்கும்படியாக அவர் வற்புறுத்தியிருப்பதும் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தொலைபேசியில் “சேர்” என்று எவரை அழைத்திருப்பார் என்ற வகையிலான பல்வேறு ஊகங்கள் பரவிக் கொண்டிருந்த நிலையில், நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி. உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதி சிறிசேனவிடமே இதுபற்றிய கேள்வியொன்றை எழுப்பினார்.

“நிலமே” என்ற ஒருநபர் கைது செய்யப்படுவது தொடர்பாக பொலிஸ்மா அதிபர் எவருடனோ பேசுகையில் அவர் கைது செய்யப்படமாட்டார் என்று தெரிவித்திருக்கிறார் என்பதை உறுப்பினர் சுட்டிக் காட்டினார்.

> பொலிஸ் மா அதிபர் அவ்வாறு தொலைபேசியில் உரத்த குரலில் பேசிக் கொண்டிருந்ததை, துணிச்சல் மிக்க தொலைக்காட்சி நிருபர் ஒருவர் பதிவு செய்து ஒளிபரப்புச் செய்துள்ளார். தொலைபேசியில் அடுத்த முனையில் இருந்து பேசியவரின் குரல் பதியப்படாமல் போனாலும், அவ்வாறு தொடர்பு கொண்டவர் “சேர்” என்று விளிக்கப்பட்டிருப்பதுடன் “நிலமே” என்ற ஒரு நபர் கைது செய்யப்படுவதைத் தவிர்க்கும்படியாக அவர் வற்புறுத்தியிருப்பதும் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### ஜே.வி.பி உறுப்பினருக்கு ஜனாதிபதியின் பதில்

ஜனாதிபதி தமக்குக்கீழ்வரும் விடயங்கள் தொடர்பாக அறிக்கையொன்றை விடுத்து முடிந்த போது, ஜே.வி.பி. உறுப்பினர் இந்த விடயத்தைக் கிளப்பினார். பொலிஸ்மா அதிபரின் தொலைபேசி உரையாடலின் ஒளிப்பதிவைத் தாமும் பார்த்ததாகக் கூறிய ஜனாதிபதி, பொலிஸ் மா அதிபரின் செயற்பாடு முற்றாகத் தவறானது. அவரை அழைத்து விளக்கம் ஒன்றைக்கேட்பேன் என்று பதில் அளித்தார்.

பின்னர் அவரை அழைத்து ஜனாதிபதி விளக்கம் கோரிய போது, கடும் எச்சரிக்கை ஒன்றையும் விடுத்தார். இந்த விடயம் தொடர்பாக விசாரணையொன்றுக்கு பணிப்புரைவிடுப்பதாகவும் தெரிவித்துள்ளார். தம்முடன் தொலைபேசியில் உரையாடியவர் எவர் என்பதை நிச்சயமாக பொலிஸ் மா அதிபர் ஜனாதிபதியிடம் சொல்லியிருப்பார் என்பது திண்ணம்.

ஜனாதிபதி இவ்வாறு பதில் கூறியிருந்தமையை அடுத்து ஜே.வி.பி.தலைவர் அனுரகுமார திஸாநாயக்க பேசுகையில் பொலிஸ்மா அதிபர் 'சேர்' என்று குறிப்பிட்டது பொது பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்ணாயக்காவையா என்றுகேட்டார். அவ்வாறு இல்லையென்றால் அமைச்சர் சபையில் அதை மறுத்துரைக்கவேண்டும் என்றார். அரசு தரப்பில் பதில் ஏதும் தரப்படாததால், அந்த விடயம் அடுத்த வெள்ளிக்கிழமையும் சபையில் எழுப்பப்பட்டது. சரியான பதில் ஏதும் கொடுக்கப்படாத நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல குறுக்கிட்டு, விடயத்தைக் கைவிடச் செய்யும் வகையில் ஐ.ஜி.பி. 'சேர்' என்று குறிப்பிட்டது எவரோ ஒருவராக இருக்கலாம். நாங்கள் எமது ஆசிரியர்களை இப்போதும் கூட 'சேர்' என்றே அழைக்கிறோம் என்று கூறினார்.

தொலைபேசி உரையாடலில் 'நிலமே' என்று குறிப்பிடப்பட்டது மாத்தறை தெவிநுவர தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே திசான் விக்கிரமரட்ண குணசேகரவையே என்பது பின்னர் தெரியவந்தது. இவர் முன்னைய அரசின் கீழ் கனிம மணல் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும், பணிப்பாளராகவும் இருந்துள்ளார். இவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் நெருங்கிய உறவினருமாவார். குணசேகரவுக்கு எதிரான நிதிக்குற்றங்கள் தொடர்பாக நிதி குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இப்போது விசாரணைகளை முன்னெடுத்து வருகிறார்கள். பல்வேறு அறிக்கைகள் அவரிடமிருந்து கோரப்பட்டிருக்கும் நிலையில், அவர்கைது செய்யப்படக் கூடும் என்ற கதையும் பரவியுள்ளது.

பொலிஸ்மா அதிபரின் தொலைபேசி விவகாரம் சில கசப்பான உண்மைகளை வெளிக்கொணர்ந்துள்ளது. சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்ற நிலைக்கு மாறாக சிலர் அதிக சமத்துவத்துக்குரியவராய் இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டியுள்ளது. முன்னைய ஆட்சியின்போது குற்றம் இழைத்தவர்கள் பலரும் இதில் அடங்குகிறார்கள். ஜனாதிபதித் தேர்தலின்போது இப்படியானவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று இன்றைய ஆட்சியாளர்கள் உறுதியளித்திருந்தார்கள். இதில் இப்போது பலர் தவிர்க்கப்படும் உண்மை வெளிப்படுகின்றது. எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கும், ஆட்சியில் இருப்பவர்களுக்குமிடையில் தனிப்பட்ட தொடர்புகள் இருப்பது தெரியவந்துள்ளது. சில விசாரணைகள் தொடர்பான இடைக்கால அறிக்கைகளை அரசியல்வாதிகள் கேட்டுப் பெறுவதானது, அந்த அறிக்கைகள் விசாரணையில் உள்ளவர்களின் அல்லது அவர்கள் சார்பில் செயற்படுபவர்களின் கைகளுக்குள் போய்ச் சேர்ந்து விடுவதாக விசாரணையாளர்கள் கூறுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அரசமைப்புச்சபை அடுத்தவாரம் கூடவிருக்கின்றது. அதன்பேரில் ஒரு தீர்மானம் எடுக்கப்படும். பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பிரதமமந்திரி, எதிர்க்கட்சித் தலைவர், உங்கள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், சிவில் சமூகத்தினர் போன்றோர்கூட சபையில் உள்ளனர். இந்த நியமனம் தொடர்பில் நாங்கள் ஒரு முடிவு எடுப்போம் என்றார் சபாநாயகர்.

**ஐ.ஜி.பி விடயம் தொடர்பாக பிரதமரின் கருத்து**

சபாநாயகரின் கருத்தையடுத்து, பிரதமர் குறிப்புரையில், ஐ.ஜி.பி தொடர்பாக குற்றச்சாட்டுக் கள் இருக்குமானால், எங்களுக்கு அறிவியுங்கள். இப்போதைக்கு குற்றச்சாட்டு எதுவுமில்லை. அவர் தம்மிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கே சாதாரணமாகப் பதிலளித்துள்ளார். இப்போது பெரிய வேலைநிறுத்தங்களை எதிர்கொண்டிருக்கும் நிலையில், ஐ.ஜி.பியின் அதிகாரங்களைக் குறைத்துக் கொண்டிருக்கமுடியாது. சட்ட ஒழுங்கு நிலைமை சீர்குலைக்கப்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டியிருக்கின்றது. அவர் மீது நம்பகமான குற்றச்சாட்டுக்கள் இருந்தால்மட்டும் அரசமைப்புச்சபையில் எடுத்துக் கொள்வோம் . இல்லையென்றால் இந்த விடயத்தை வேறு இடத்தில் தீர்த்துக் கொள்ளலாம். ஐ.ஜி பி. எதனையும் விசாரிக்காமல் விடவில்லை. ஊடகங்களில் இது பெரிதுபடுத்தப்பட்டிருந்தாலும், பிரச்சினையொன்று இருப்பதாகத் தெரியவில்லை. குறித்த வழக்கு தொடரப்படுகின்ற அந்த நாளில்அந்த நபர் கைது செய்யப்பட மாட்டார் என்று தான் அவர் கூறியுள்ளார். குறித்த நபரிடமிருந்து சில ஆவணங்கள் தேவைப்பட்டுள்ளன. ஆவணங்கள் ஆராயப்பட்ட பின்னரே அடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐ.ஜி.பி என்னிடம் கூறியுள்ளார் என்றார் பிரதமர். ஐ.ஜி.பியின் நடத்தை தவறானது என்று ஜனாதிபதி கூறியிருக்கும் நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்த நிலைப்பாடு முரண்படுவதாக இருக்கிறது.



இவ்வாறான நிலைமைகள் அரசை மோசமாகப் பாதிப்பதாக இருக்கின்றன என்று சொல்லத் தேவையில்லை. குற்றச்செயல்கள் அதிகரித்துச் செல்கின்றன. சட்ட ஒழுங்குநிலை எதிர்பார்க்கும் விதத்தில் இல்லை. பொலிஸ் செயற்பாடுகள் அதிகரிக்கப்பட வேண்டிய நிலையில் காணப்படுகின்றன. ஆட்சியாளர்கள் வேறு பல விடயங்களிலும் கவனம் செலுத்த வேண்டிய நிலையில் இருக்கின்றனர்.

**பொலிஸ் மா அதிபர் உரையாடல்**

இரத்தினபுரியில் இடம்பெற்ற பொலிஸ் வரு டாந்த நிகழ்வொன்றில் உரை நிகழ்த்திக் கொண்டிருந்த

> "முன்னைய ஆட்சியின் போது குற்றம் இழைத்தவர்கள் பலரும் இதில் அடங்குகிறார்கள். ஜனாதிபதித் தேர்தலின் போது இப்படியானவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று இன்றைய ஆட்சியாளர்கள் உறுதியளித்திருந்தார்கள். இதில் இப்போது பலர் தவிர்க்கப்படும் உண்மை வெளிப்படுகின்றது. எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கும், ஆட்சியில் இருப்பவர்களுக்குமிடையில் தனிப்பட்ட தொடர்புகள் இருப்பது தெரியவந்துள்ளது.

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் கைபேசி மணி ஒலித்தது. அழைப்புக்கு பதிலளிக்கத் தொடங்கினார். அதில் அவர் சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமாக வழங்கியிருந்த பதில்களின் தமிழ்வடிவம் பின்வருமாறு:

ஜயசுந்தர: காலை வணக்கம் சேர். இது அவசர விடயமா சேர்? ஆம்! ஆம்! நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவு பணிப்பாளரை அது பற்றி ஆராயும்படியும், பின்னர் எனக்குத் தெரிவிக்கும்படியும் கூறியிருந்தேன். ஆனால் நேற்று கடமையை முடித்துக் கொண்டு வருவதில் நேரமாகி விட்டது. எனக்கு அது கிடைக்கவில்லை. அவைகளின் விவரங்களை அறிந்துகொண்டு, உங்களுடன் தொடர்பு கொள்வேன். ஆம் 'நிலமே'யின் விடயம்; 'நிலமே'யின்... வரும்படி சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நிச்சயமாக கைது செய்யப்படமாட்டார். என்னைக் கேட்காமல், எனது அனுமதியில்லாமல் கைது செய்யப்பட மாட்டாது. அது நிச்சயம் சேர்.

அவ்வாறு இல்லைசேர்! நான் விசாரித்து அறிந்தேன்! நிச்சயமாக அவர் கைது செய்யப்பட மாட்டார். ஓம் சேர் நன்றி! இவ்வாறு அந்த உரையாடல் முடிகின்றது.



# வாசகர் திருமுகம்

## அரசு பரிசீலிக்குமா?

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் இன்றைய நிலையில் அதனைக் குழப்பும் வகையில் செயற்படும் பேரினவாதத் தரப்புகளது பரப்புரைகளை வலுவிழக்க வைக்கும் விதத்தில் அரசு சாதாரண சிங்களப் பொதுமக்களுக்கு சமாதானத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவது அவசியமா கிறது. அதற்காக சிங்கள ஊடகங்களின் மூலம் சமாதானத்தின் அவசியம் குறித்த பரப்புரை வாக்கியங்களைப் பிரசுரித்தும், ஒளிபரப்பியும், விற்பனைக்காகப் பொதி செய்யும் பைக் கற்றுக்களில் அச்சிடப்பட்ட வாக்கியங்களை ஒட்டியும் சிங்கள மக்களைச் சிந்திக்க வைக்கும் உத்தியை அரசு மேற்கொள்ள இயலுமே? அரசு இது குறித்து பரிசீலிக்குமா?

*சி.காசிப்பிள்ளை*
*அல்லாரையூர்*

## சலூன், லோன்றி என்பவற்றை ஞாயிற்றுக்கிழமைகளில் திறப்பார்களா?

பலவருடங்களுக்கு முன்னர் சலூன், லோன்றி போன்ற பொதுமக்களின் அத்தியாவசிய வர்த்தக நிலையங்களைப் புதன் கிழமைகளில் பூட்டி ஞாயிற்றுக்கிழமைகளில் திறந்திருந்தார்கள். அந்த நிலை தற்போது மாறி விட்டது.

அரச ஊழியரோ ஏனைய வேலைசெய்பவர்களோ ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் வீட்டில் ஓய்வாக இருக்கின்றனர். ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டுமே தமதும், தமது பிள்ளைகளினதும் உடுபுடைவைகளை லோன்றியில் எடுக்கவோ, கொடுக்கவோ, சிகை அலங்காரக் கடைகளில் தமது தேவைகளை நிறைவேற்றவோ முடியும். ஆனால் ஞாயிற்றுக்கிழமைகளில், பூட்டுவதால் பொதுமக்கள் உட்படப் பலரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதைத் தவிர்ப்பதற்குப் புதன்கிழமைகளில் இவற்றைப் பூட்டி ஞாயிற்றுக்கிழமைகளில் திறந்தால் பொதுமக்களின் சிரமங்களைப் போக்கலாம் என்ற யோசனை இத்தால் முன்வைக்கப்படுகிறது. இது உரிய தரப்பினர்களது கவனத்துக்கு.

*மு.சந்திரகுமார்*
*சங்கானை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுண்டெலியின் பயம்



முன்னொரு காலத்தில் ஒரு காட்டில் முனிவர் ஒருவரின் குடிசை இருந்தது. அதன் அருகே ஒரு சிறிய மலையொன்றும் இருந்தது. அந்த மலையின் அருகே உள்ள ஒரு சிறிய துவாரத்தில் சுண்டெலி ஒன்று வாழ்ந்து கொண்டிருந்தது. அந்தக் காட்டில் பூனையின் நடமாட்டம் அதிகம் இருந்தது. அதனால், அது மிகவும் பயத்துடன் வாழ்ந்து வந்தது.

ஒருநாள் ஒரு பூனையின் பிடியிலிருந்து தப்பிய சுண்டெலி, ஆசிரமத்தில் உள்ள முனிவரைச் சரணடைந்தது. முனிவர் அதை அன்புடன் கவனித்தார்.

“பயப்படாதே!” என்று ஆறுதல் கூறினார்.

"நான் உனக்கு என்ன உதவி செய்யவேண்டும்?" என்று கேட்டார்.

“சுவாமி நான் பூனைகளைக் கண்டு அதிகமாகப் பயப்படுகிறேன். என்னையும் ஒரு பூனையாக மாற்றிவிட்டால், நான் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை அல்லவா?" என்றது சுண்டெலி.

முனிவர் அதைப் பெரும் பூனையாக மாற்றினார்.

ஒரு மாதம் சென்றது. பூனை அவர் முன்வந்து நின்றது.

"சுவாமி, பூனையாக இருப்பதிலும் பிரச்சினை உள்ளது. ஓநாய்கள் என்னை விரட்டுகின்றன" என்றது.

பூனையின் எண்ணத்தை அறிந்து கொண்ட முனிவர் அதை ஓநாயாக மாற்றினார். ஓநாய் சந்தோசமாகத் திரும்பிச் சென்றது. ஒரு மாதம் சென்றவுடன், மீண்டும் ஓநாய் திரும்பி வந்து முனிவரைச் சரணடைந்தது.

என்ன விடயம் என்று கேட்டார் முனிவர்.

“கரடிகள் தொல்லை தருகின்றன!" என்றது ஓநாய்.

அதைக் கரடியாக மாற்றி அனுப்பி வைத்தார் முனிவர்.

மீண்டும் ஒரே மாதத்தில் திரும்பியது கரடி.

இப்போதும் பிரச்சினையா?" என்று புன்சிரிப்புடன் கேட்டார் முனிவர்.

“ஆம் சிறுத்தைகள் என்னைக் கடிக்க வருகின்றன” என்றது.

“ஓஹோ!' என்ற முனிவர் அதை ஒரு சிறுத்தையாக உருமாற்றினார்.

ஒரு மாதம் சென்றவுடன் சிறுத்தை திரும்பி வந்தது.

“சிங்கங்கள் என்னைக் காட்டை விட்டு வெளியேறு என்று உத்தரவிடுகின்றன" என்றது.

“காரணம்?" என்னவென்று முனிவர் கேட்டார்.

"பலசாலிகள் ஒரே காட்டில் இருக்கக் கூடாது என்பதுதான் அவற்றின் எண்ணம்" என்றது.

முனிவர் அதைச் சிங்கமாக மாற்றினார்.

சிங்கம் ஒரு மாதம் சென்ற பிறகு, "சுவாமி, நகரத்திலிருந்து வந்த அரசன் ஒருவன் சிங்க வேட்டை ஆடினான். தப்பிப் பிழைத்தது நான் மட்டும்தான்!" என்றது.

முனிவர் சிங்கத்தை அரசராக்கினார். அதன்பின் இரண்டு மூன்று மாதங்கள் வரை அரசன் முனிவரைப் பார்க்கவில்லை. ஆறு மாதத்துக்குப் பின் அரசன், கிழிந்த துணிமணிகளுடன் வந்து முனிவரைப் பார்த்தான்.

“என்ன ஆயிற்று உனக்கு?" என்றார் முனிவர்.

“எதிரி நாட்டு அரசன் போர் தொடுத்தான். எனக்குப் போர் செய்யவே பயமாக இருந்தது. இருப்பினும் என் சார்பாக எல்லோரும் போர் புரிந்தனர். கடைசியில் எதிரிகள் அரண்மனைக்குள் புகுந்து என்னைக் கைது செய்தனர். பாதாளச் சிறையில் அடைத்தனர். நான் தப்பி வந்துவிட்டேன்" என்றான்.

இப்போது நான் என்ன செய்யவேண்டும், உனக்காக எதிரியுடன் போராட வேண்டுமா? என்றார் முனிவர்.

அந்த அரசன் அமைதியாக இருந்தான்.

முனிவர் சொன்னார். “சிற்றெலியாக இருந்த உன்னை அரசர் வரை உயர்த்தினேன்." ஆனாலும் உன்னுள் இருந்த எலித்தன்மை மாறவில்லை. பயத்துடனே இருந்தாய்.

“இனி, நான் உனக்கு உதவுவதற்காக எது செய்தாலும், அது உனக்கு உதவவே உதவாது. இதுவரை எலியின் மனதையே பெற்றிருக்கும் நீ, இனியும் எலியாக இருப்பதே நல்லது." என்று கூறி அரசனை எலியாக மாற்றினார் முனிவர்.



## சிட்டுக்குருவி

சின்னச் சின்ன சிட்டுக்குருவி
வண்ண வண்ண சாம்பல் நிறத்தில்
சிறகு விரித்துப் பறக்கும் குருவி

கொட்டிக் கிடக்கும் தானியக்
குவியலை
கூடி வந்து கூடி நின்று
தொட்டுத் தொட்டு கொத்தித் தின்று
கூடிப் பறந்து கூடு செல்லும்!

தனியாய் வராமல் ஒன்றோடொன்று
சேர்ந்து வரும் சிட்டுக் குருவி
நன்றாய் செப்பும் பாடம் செவியுறுவீர்
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை!



## பழமொழிகள்

1. அறிவாளிக்கு வயதாகாது.
2. அன்பு, உழைப்பை எளிதாக்குகிறது. துயரத்தை இனிமையாக்குகிறது.
3. அசிங்கமான முகம், அசிங்கமான மனதைவிட நல்லது.
4. எந்த நல்ல மனிதனும் திடீரென்று பணக்காரனாகிவிட முடியாது.



சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது **361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1660 - ஷேக்ஸ்பியரின் ஒதெல்லோ நாடகத்தில் டெஸ்டிமோனா பாத்திரத்தில் முதன் முதலாக ஒரு பெண் நடிகை பாகமேற்றார்.
1941 - இரண்டாம் உலகப் போர் அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் டிருஸ்வெல்பில் ஜப்பான் மீது அமெரிக்கப் போர்ப் பிரகடனம் செய்தபின் 'பேர்ள் துறைமுக உரை' நிகழ்த்தப்பட்டது.
1955 - ஐரோப்பிய கவுன்சிலால் ஐரோப்பியக் கொடி ஏற்றுக் கொள்ளப்பட்டது.
1982 - சுரினாமில் இராணுவ ஆட்சியாளரால் பல எதிர்ப்பாளர்கள் கொல்லப்பட்டனர்.
1985 - தென்னாசிய நாடுகளால் சார்க் அமைப்புத் தொடங்கப்பட்டது.
1988 - கொழும்பில் பதற்றம், துறைமுகம், ரயில்வே பகுதி ஸ்தம்பிதம். ஊழியர் வேலைக்குச் செல்ல முடியாத நிலை.
1991 - ரோமானிய அரசமைப்பு நடைமுறைக்கு வந்தது.
1995 - அல்ஜீரியாவில் ஆயுதக் குழுவால் 81 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.
1999 - முல்லைத்தீவுக் கடலில் கடும் சமர். டோறாப்படகு ஒன்று சேதம். 4 படையினர், 4 புலிகள் சாவு எனத் தெரிவிப்பு.
- இலங்கையில் 16 ஆண்டு காலமாகப் போரில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்பையும் ஆயுதங்களைக் கைவிடுமாறு பாப்பரசர் கோரிக்கை.
2002 - வானொலி ஒலிபரப்பு சாதனங்களைப் புலிகளுக்கு நோர்வே வழங்கிய[illegible]க சண்டே ரைம்ஸ் தகவல்.
2009 - ஈராக்கின் பாக்தாத்தில் குண்டு வெடிப்பில் 127 பேர் கொல்லப்பட்டதுடன் 448 பேர் காயமடைந்தனர்.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



பணம் மட்டுமே வாழ்க்கையல்ல. அதையும் தாண்டி மனிதன் அடைய வேண்டிய அனுபவங்கள் பல உள்ளன. மன நிம்மதி, அன்பு, தயவு, தியாகம் முதலிய குணங்கள் எல்லாம் பணத்தால் வருபவை அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசெம்பர் மாத ராசி பலன்



## சிம்மம்

### மனித நேயம் மிக்க சிம்ம ராசிக்காரர்களே

குடும்ப வருமானம் உயரும். வங்கிக் கடன் உதவியும் கிடைக்கும். கல்வியாளர்கள், ஆன்மிக அறிஞர்களின் நட்பால் சாதிப்பீர்கள். பிள்ளை பாக்கியம் உண்டு. மகளுக்கு நீங்கள் எதிர்பார்த்ததைப் போல் நல்ல குடும்பத்திலிருந்து உங்கள் ரசனைக் கேற்ற வரன் அமையும். மகனுக்கு வெளிநாடு தொடர்புடைய நிறுவனத்தில் வேலை அமையும்.

15 ஆம் திகதி வரை உங்கள் ராசிநாதன் சூரியன் கேந்திர பலம் பெற்று அமர்ந்திருப்ப தால் தடைகளெல்லாம் நீங்கும். அரச விடயங்கள் சாதகமாக முடிவடையும். சவாலான காரியங்களைக் கூட எளிதாக முடித்துக் காட்டுவீர்கள். சிலருக்கு புது வேலைக் கிடைக்கும். சொத்து சம்பந்தப்பட்ட வழக்கு சாதகமாக முடியும். ஆனால் 15 ஆம் திகதி வரை சூரியன் சனியுடன் இணைந்திருப்பதால் நெஞ்சு வலி, தலைச் சுற்றல், உடல் உஷ்ணம் இருப்பதைப் போன்ற பிரம்மையெல்லாம் வந்து நீங்கும். 4 ஆம் திகதி முதல் சுக்ரன் 6 இல் மறைவதால் அலைச்சலும், செலவினங்களும் அதிகமாகும். வீண் சந்தேகம், ஈகோப் பிரச்சினையால் கணவன்-மனைவிக்குள் பிரிவுகள் வரக்கூடும். வாகனத்தை இயக்கும் போது அலைப்பேசியை தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுக்காக சாட்சிக் கையொப்பமிட வேண்டாம். முக்கிய முடிவுகளை தவிர்ப்பது நல்லது.

**பெண்களுக்கு**

கன்னிப்பெண்களுக்கு காதல் கைகூடும். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண் டாகும். பெரிய வியாபாரிகளின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் மூத்த அதிகாரி உங் களுக்கு முக்கியத்துவம் தருவதை பார்த்து சக ஊழியர்களும் உங்களை மதிப்பார்கள். அனுபவ அறிவை பயன்படுத்தி அமைதியாக காய் நகர்த்தும் மாதம் இது.

## கன்னி

### மற்றவர்களின் மனம்கோணாமல் பேசும் கன்னி ராசிக்காரர்களே

இடம், பொருள், ஏவலறிந்து பேசும் வித்தையைக் கற்றுக் கொள்வீர்கள். அனுபவ அறிவால் முன்னேற்றம் உண்டாகும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுக மாவார்கள். புது ரக ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். பழைய வாகனத்தை மாற்றி புதியது வாங்குவீர்கள். தந்தைவழியில் உதவிகள் உண்டு. சூரியன் சாதக மான வீடுகளில் செல்வதால் அரசால் அனுகூலம் உண்டு.

அரச காரியங்கள் விரைந்து முடியும். வழக்குகளும் சாதகமாகும். அடிமனதில் தைரியம் பிறக்கும். பழைய நண்பர்கள் உதவிகரமாக இருப்பார்கள். குடும்பத்தில் அமைதி உண்டாகும். உங்கள் ஆலோசனைகளை எல்லோரும் ஏற்றுக் கொள் வார்கள்.

ஜென்ம குரு நடைபெறுவதால் திடீரென்று அறிமுகமாகுபவர்களை அதிகம் நம்பா தீர்கள். கை, கால் வலிக்கும். குதிக்காலில் வலி அதிகமாகும். சின்னச் சின்ன விபத்து களும் வரும். கணவன்-மனைவிக்குள் இருக்கும் அந்தரங்க விடயங்களையோ, கருத்து மோதல்களையோ வெளியாள்களிடம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம்.சனி பகவான் 3 ஆம் வீட்டில் வலுவாக அமர்ந்திருப்பதால் சிலர் அயல்நாடு சென்று வரு வீர்கள். புது வாய்ப்புகளும், பொறுப்புகளும் தேடி வரும். 5 ஆம் திகதி வரை செவ்வாய் சாதகமாக இல்லாததால் பிள்ளைகளால் பதட்டம், வீடு, மனை வாங்குவதில் சிக்கல்கள் வந்து செல்லும். ஆனால் 6 ஆம் திகதி முதல் செவ்வாய் 6 ஆம் வீட்டில் அமர்வதால் சகோதர வகையில் இருந்த மோதல்கள், சொத்துப் பிரச்சினைகளெல்லாம் நீங்கும்.

**பெண்களுக்கு**

நீண்ட நாள் கனவு நனவாகும். போட்டித் தேர்வு, நேர்முகத் தேர்வில் வெற்றி பெறுவீர் கள். வேலை கிடைக்கும். கல்யாணம் கூடி வரும். வியாபாரத்தில் புது முத லீடுகள் செய்ய பண உதவி கள் கிடைக்கும். பழைய வாடிக்கையாளர்களும் தேடி வருவார்கள். சவால்களில் வெற்றி பெறும் மாதம் இது.

**நாளை**
**கார்த்திகை-24**
வெள்ளிக்கிழமை -09.12.2016
திதி: தசமி மா.05.57
நட்சத்திரம்: ரேவதி பி.இ. 04.52
ராகுகாலம்: 10.48-12.18 வரை
சுபநேரம்: 06.18-07.48 வரை

# சந்தியாவின் மகளானவர் இந்தியாவின் மகளானார்

செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி, ஜெயலலிதா சென்னை அப்பலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போது, அவரின் உடலைவிட்டு உயிர் பிரிந்த பின்னரே மருத்துவ மனையிலிருந்து வெளியே வருவார், அவர் இறுதியாக உயிருடன் இருக்கும் இடம் அப்பலோவே என்பதை எம்மில் எவரும் அறிந்திருக்கவில்லை.

முதலமைச்சர், ஜெயலலிதா என்று அழைப்பவர்களை விட அம்மா என்று அழைப்பவர்களே அதிகம். 'அம்மா' எனும் இடம் அரியது. அதை அவ்வளவு இலகுவில் பிறிதொருவருக்கு கொடுத்துவிடமாட்டோம். நாம் சார்ந்த சமூகம் கொடுக்கவும் அனுமதியோம். ஆனால் ஜெயாவுக்கு 'அம்மா' என்ற மதிப்பு அந்தஸ்து சாலப் பொருத் தமானதாகவே அமைந்திருந்தது. அதைக் கொடுக்கவும் தமிழ்நாடு தயங்கியதில்லை.

இந்திய அரசியலில் தமிழ்நாட்டு அரசியல் மிகவும் சிக்கல் வாய்ந்தது. நூற்றுக்கணக்கான கட்சிகள், பிணக்குகள், சாதிப் பிரச்சினைகள், சிக்கல்கள், மத்திய அரசுடனான இழுபறிகள் என அத்தனையையும் ஒற்றையாளாகச் சாமாளித்தவர், வெற்றிகொண்டவர் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இதனை அவரின் கடும் போட்டிக் கட்சியான தி.மு.கவினது தலைவர் கருணாநிதியே ஏற்றுக் கொள்கிறார்.

1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் திகதி தமிழ்நாட் டின் முதலமைச்சராக முதன்முறை பதவியேற்றார் ஜெயலலிதா. அன்று அவருக்கு வயது 43. ஒரு தேசத்தைக் கட்டிக்காக்கும் அரசியல் சாணக்கியத்தை ஒருவர் தனது 43ஆவது வயதில் அடைவது என்பது அரிய திறமை.

1996 ஆம் ஆண்டு வருமானத்துக்கு அதிகமாக சொத்துச் சேர்த்தார் என்ற குற்றச்சாட்டில் முதல்முறை கைதுசெய் யப்பட்டார். ஏகப்பட்ட பிரிவுகளில் வழக்குத் தொட ரப்பட்டன. அக்காலத்தில் தான், அரசியலில் ஆபத்து அதிகம் என்பதை ஜெய லலிதா தெள்ளத்தெளிவாக புரிந்திருப்பார். ஆனால் துவண்டுவிடவில்லை. இன்று 'இரும்புப் பெண்' என்று பலரும் தெரிவிக்கும் அள வுக்கு உயர்வடைவதற்கு அடித்தளம் இட்டதென் னமோ அன்றைய கைதாகக்கூட இருக்கலாம். ஏகப்பட்ட வழக்குகள், கைதுகள், சிறைவாசங்கள், துரோகங்கள் என அத் தனையையும் ஒன்றன் பின்னர் ஒன்றாகத் தகர்த்துக் கொண்டிருந்தார்.




ஒரு பெண், அரசியலில் இவ்வளவு தூரம் சாதிக்க முடியு மாயின் அது ஜெயலலிதாவினால் மட்டுமே முடியும் என்று சொன்னால் சிறிது அதிகப் பிரசங்கித்தனமாகவே இருக்கும். மம்தா பானர்ஜி, சுஸ்மா சுவராஜ் போன்றவர்கள் தற்போதும் இந்தியா வில் கொடி கட்டிப் பறக்கிறார்கள். உலக அளவிலும் ஆங்சாங் சூகி போன்று பலர் உள்ளனர். ஆனால் தமிழ் நாட்டில் ஜெயாவுக்கு நிகர் அவரே.

மிகப் பெரும் பரப்பளவைக் கொண்ட சென்னை ராஜாஜி அரங்கு நேற்றுமுன்தினம் மக்கள் வெள்ளத்தால் அல்லோல கல்லோலப்பட்டது. பல்லாயிரக்கணக்கான பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட் டிருப்பினும் அவர்களால் மக்களின் படையெடுப்பை சமா ளிப்பதென்பது இயலாத காரியமாகிப் போனது. எங்கே பார்த்தாலும் அழுகை, கூச்சல், கதறல் ஒலிகள்தான். ஆண், பெண், இளைஞன், யுவதி, சிறுவர், முதியவர் என்று பலதரப் பினரதும் கண்களில் நீர் கட்டற்று ஓடியது. ஏனெனில் பறிகொடுத்தது தமிழகத்தின் தாயை அல்லவா!

ஆலோசனை வழங்கத் தந்தை இல்லை. ஆறுதல் உரைக்க அன்னை இல்லை. தேற்றிடச் சகோதரர்கள் இல்லை. உபசரிக்கக் குழந்தைகள் இல்லை. அன்பு பாராட்டிட கணவன் இல்லை. ஆனால் இந்தக் குறைகள் எவையும் ஜெயாவுக்கு இல்லை. ஏனெனில் சந்தியாவின் மகளாகப் பிறந்தவர் இந்தியாவின் மகளாகப் போற்றப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ‘ஜெ’: 29 ஆண்டுகளுக்குமுன் அவமரியாதைக்குள்ளானவர் அதே இடத்தில் மிகப்பெரிய மரியாதை பெற்றார்

தேவநாயகம் தேவானந்த்

திராவிடக்கழகங்களின் போர்வாள் என்று வர்ணிக்கப்படுகின்றவர்கள் எல்லாம், தமிழை மிகக் கச்சிதமாகக் கையாளும் ஆற்றல் பெற்றவர்கள். தொடர் மொழிகள் எதுகை,மோனை, உவமை, உருவகம், அடுக்குமொழிகள் என்று -தமிழ் அவர்கள் நாவில் நின்றுவிளையாடும். இந்தபேச்சாற்றலால்தான், திராவிட இயக்கங்கள் பெருவளர்ச்சிகண்டன. அண்ணாத்துரை, கருணாநிதி, நெடுஞ்செழியன் போன்றவர்களின் பேச்சுக்களை காசு கொடுத்துக் கேட்குமளவுக்கு அவை பிரபல்யமானவை. அண்ணாத்துரையின் பேச்சுக்களைக் கேட்க மக்கள் அலைமோதுவார்கள். அண்ணா தனது பேச்சுகளில் குட்டிக் கதைகள் சொல்லுவார் அவைகேட்போருக்கு சுவையானவைகளாக இருக்கும். இந்தப் பேச்சுப் பாரம்பரியத்தில் வராதவர் ஜெயலலிதா. ஆனால், அவர் தான் அ.தி.மு.கவின் கொள்கை பரப்புசெயலராகக் கட்சியை வெற்றிபெறச் செய்தார். அவரின் வசீகரமான தோற்றம், நடிகையென்ற அந்தஸ்து, அவரது பரப்புரைகளுக்கு துணை நின்றன. இவற்றுக்கெல்லாம் மேலாகத் துணிவோடு வெளிப்படையாகத் தனது மனதில் தோன்றுபவற்றை 'நறுக்' காகப் பேசுபவர். தனது மேடைப் பேச்சு குறித்து 'ஜெ' கூறுகையில் “பொதுக்கூட் டங்களில் குட்டிக்கதைகள் நகைச்சுவை உதாரணங்கள் சொல்வது என் வழக்கம். மக்கள் ரசிக்கிறார்கள். பொதுக்கூட்டங் களில் நான் வளவளவென்று பேசுவது இல்லை. குறிப்பெடுத்துக் கொண்டு பேசுகிறேன்”-என்றார். இவரது பேச்சுக்களை பாமரமக்கள் மிகவும் விரும்பிக் கேட்பார்கள். அதற்காக பல மணி நேரத்தைச் செலவிடுவார்கள். சேலம், ஆத்தூரில்நடந்த பொதுக்கூட்டத்தில் தாய்மார்கள் பகுதியில் ஒரு நிறைமாதக் கர்ப்பிணி இருந்திருக்கிறார். பிரசவ வலி வந்துவிட்டதாம். அப்படியும் ‘அம்மா பேச்சைக் கேட்காமல் போகமாட்டேன்' என்று பிடிவாதம் பிடித்திருக்கிறார். ‘இங்கேயே குழந்தை பிறக்கட்டும்... அம்மா பெயரையே வைக்கிறேன்' என்று அடம் பிடித்தாராம். தொண்டர்கள் பெரும்பாடு பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். அந்தளவுக்கு மக்கள் அளப்பெரும் அன்பு கொண்டிருந்தார்கள். ஜெயலலிதாவும் மேடைகளில் மக்களுக்காகப் பேசினார்.

### மக்களைக் கவர்ந்தமை போன்று சர்ச்சைகளையும் ஏற்படுத்திய ‘ஜெ’யின் பேச்சு

இவரது பேச்சு மக்களால் விரும்பப்பட்ட போதும், அது பல சர்ச்சைகளையும் கொண்டு வந்தது. ஒரு தடவை தமிழ்நாட்டு ஆளுநர் பற்றி இவர் தெரிவித்த கருத்து எல்லோரையும் அதிரவைத்தது.

மத்தியில் பா.ஜ.க. ஆட்சி நடந்தபோது அதற்கு ஆதரவளித்து, பின்னர் அதனை வாபஸ் பெற்றுக்கொண்ட ஜெயலலிதா பா.ஜ.க பற்றி சர்ச்சைக்குரிய கருத்துக்களை முன்வைத்து இந்திய அரசிலில் அதிர்வலைகளைத் தோற்றுவித்தார்.

“இஸ்லாமிய சகோதரர்களுக்கு நான் ஓர் உத்தரவாதம் தருகிறேன். நான் முன்பு ஒரு தவறு செய்துவிட்டேன். நான் செய்த தவறை ஒப்புக்கொள்ளும் துணிச்சல், தைரியம் எனக்கு உண்டு. அந்தத் தவறுக்குப் பரிகாரமாகத்தான் பி.ஜே.பி: ஆட்சியை நான் கவிழ்த்தேன்.” - சென்னை கடற்கரையில் ஓர் இஸ்லாமிய அமைப்பு ஏற்பாடு செய்த மாநாட்டில் உரையாற்றிய ஜெயலலிதா தான் பா.ஜ.கவுடன் கூட்டணி சேர்ந்தது தவறுண்டதைவெளிப்படையாகத்தெரிவித்தார்.



1998ஆம் ஆண்டில் நடந்த கோவை குண்டு வெடிப்பை மையமாக வைத்து தி.மு.க ஆட்சியைத் தங்களின் கூட்டணிக் கட்சியான மத்திய பா.ஜ.க. கலைக்கவில்லை என்ற கோபத்தில் ஜெயலலிதா கூறியது 'பல பிரச்சினைகளை நினைவில் வைத்திருக்கும் பா.ஜ.க. தலைமை, குறிப்பிட்ட சிலவற்றில் மட்டும் நினைவிழந்து (செலக்டீவ்அம்னெஷியா) பாதிக்கப் பட்டிருப்பது உண்மையிலேயே துரதிருஷ்டவசமானது. ஆசியாவிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவுக்கு தேசப்பாதுகாப்பில் அக்கறை இல்லாத இப்படிப்பட்ட ஒருவர் (அத்வானி). உள்துறை அமைச்சராகக் கிடைத்து இருக்கிறாரே என்ற வேதனைதான் ஏற்படுத்துகிறது என்று பரபரப்புக் குற்றச்சாட்டை எழுப்பினார். இதேபோன்று கம்யூனிஸ்ட்க்கள் பற்றி 2001ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த போது அவர் தெரிவித்த கருத்துக்கள் சர்ச்சைக்குள்ளாகின. 'தகரம்கண்டுபிடிக்கும் முன்பே கம்யூனிஸ்ட்க்கள் உண்டியலைக் கண்டு பிடித்தவர்கள்' அதனைச் சட்டமன்றத்திலும் ஜெயலலிதா பதிவு செய்தது, கம்யூனிஸ்ட் கட்சியினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

### எதற்கும் மசியாத உறுதியான போக்குக் கொண்டவர் ‘ஜெ’

ஒரு திராவிடக் கட்சிக்கு பிராமண சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் தலைமை தாங்குவதா என்ற விமர்சனம் எழுந்தபோது அதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக ஜெயலலிதா, ‘ஆமாம்! நான் பாப்பாத்தி தான்'' என்று தமிழக சட்டமன்றத்தில் பகிரங்கமாகஅறிவித்தார். தனது அரசியல் இருப்புக்காக எந்தச் சமரசமும் செய்து கொள்ளாதவர். தான் கொண்ட நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்காமல் அரசியல் நடத்தியவர். இதனால் தான் இத்தனை மரியாதைகளோடு அமரத்துவமடைந்திருக்கிறார். 'நான் கமராவின் முன்னால் மட்டும் தான் நடித்திருக்கிறேன். மற்றப்படி எனக்கு நடிக்கவராது' என்ற அவரின் கூற்று உண்மையாக இருந்திருக்கிறது.

“மக்களால் நான், மக்களுக்காக நான்” - இது தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் ஜெயலலிதா அடிக்கடி முழங்கிய வாசகம். இது குறித்து சில எதிர்க்கட்சியினர் ஏளனம் செய்தபோதிலும், மக்களின் குறிப்பாக அ.தி.மு.க. தொண்டர்களின் மத்தியில் வரவேற்புப் பெற்றிருந்தது. 'ஜெ' தனது அனல் பறக்கும் பேச்சாலும், புன்னகை முகத் தாலும் மக் களை வசீகரிக்கத் தொடங்கினார். ஜெ.இன் பேச்சுத் திறமை மற்றும் ஆங் கில, ஹிந்தி புலமைகளைக் கவனித்த எம்.ஜி.ஆர். இவர்தான் டில்லி அரசியலுக் குச் சரியான நபர் என்று தீர்மானித்து, 1983மார்ச் 4இல் ராஜ்யசபா எம்.பி.ஆக் கினார். ராஜ்யசபா அ.தி.மு.க. துணைத்தலை வராகவும் நியமித்தார். ராஜ்யசபாவில் ஜெ. பேசிய கன்னிப்பேச்சு பிரதமர் இந்திரா உட்பட அனைவரையும் கவர்ந்தது. அதே நேரத்தில் ஜெக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார் எம்.ஜி.ஆர். எனக் கட்சியின் மூத்த தலைவர்கள் அதிருப்தி அடைந் தார்கள். கட்சியிலிருந்து ஜெயலலிதாவைத் துரத்துவதற்குப் பல முயற்சிகளை எடுத்தார்கள். ஆனால், எம்.ஜி.ஆர். ஜெ மீது வைத்த அபரிமிதமான நம்பிக்கை அவரை அசுரவேகத்தில் வளர்ச்சி பெறவைத்தது. எம்.ஜி.ஆரின் உடல் நலக்குறைவின்போது ஜெ மூத்த தலைவர்களால் புறக்கணிக்கப்பட்டார். இருந் தாலும் அப்போது நடந்த தேர்தலில் தனது பரப் புரையால் அ.தி.மு.கவை வெற்றிபெறச் செய்தார். 1984இல்நடந்த தேர்தலில்தீவிரமாகப் பரப்புரை செய்தார். ஜெ.க்கு மூத்த தலை வர்களிடம்தான் அதிருப்தி இருந்ததே தவிர தொண் டர்களிடமும், மக்களிடமும் இல்லை என்பதை அவர் சென்ற இடமெல்லாம் கூடிய மக்கள் கூட்டம் நிரூபித்தது.

அந்தத் தேர்தலில் அ.தி. மு.க.152 இடங்களில் போட்டியிட்டு 132 தொகுதிகளில்வெற்றிபெற்றது. கூட்டணி கட்சியான காங்கிரஸுக்கு 62 இடங் கள் கிடைத்தன. எம்.ஜி. ஆர். அமெரிக்காவிலி ருந்த படியே ஆண்டிப்பட்டி தொகுதியில் வெற்றி பெற்றார். லோக்சபா தேர்தலில் காங். 25 அ.தி.மு.க.-12 தொகுதி களில்வெற்றி பெற்றன. இதை யடுத்து ஜெ. புகழ் உயரத் தொடங்கியது. அவருக்கென அமைச்சர்கள், எம்.எல். ஏ.க்கள், மாவட்டசெயலர்கள் என ஆதரவாளர்கள் உருவாகினர். சிகிச்சைமுடித்து அமெரிக்காவிலிருந்துதிரும்பிய எம்.ஜி.ஆர். முதல்வராகப் பதவியேற்றார்.

### எம்.ஜி.ஆரின் மறைவில்‘ஜெ’யின் அரசியல் வாழ்வில் திருப்பம்

1987 டிசெ. 24இல் எம்.ஜி.ஆர். மறைந்தார். முதல்வர் எம்.ஜி.ஆர் இறந்ததை அறிந்ததும் அவருடைய வீட்டுக்கு ஜெயலலிதா விரைந்தார். ஆனால், எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகி, எம்.ஜி. ஆரின் உடலை ஜெயலலிதா பார்க்க அனுமதிக்கவில்லை. எம்ஜிஆர் உடல் வைக்கப்பட்டிருந்த அறையை ஜானகி பூட்டச்செய்தார். எம்.ஜி.ஆரின் உடல் வீட்டின் பின்புறம் வழியாகப் பொது மக்கள் அஞ்சலிக் காக எடுத்துச் செல்லப் பட்டது. அதிர்ச்சி அடைந்தார் ஜெயலலிதா. தொடர்ந்து, எம்.ஜி.ஆரின் உடல் பொதுமக் கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த மண் டபத்துக்குச் சென்று, எம்.ஜி.ஆரின் தலைமாட்டின் அருகே சோகமே உருவாக நின்று கொண்டார்.

அந்த இடத்துக்கு எம்.ஜி. ஆரின் மனைவி ஜானகி தாமதமாக வந்ததால், ஜெயலலிதாவுக்குக்கிடைத்த முக்கியத்துவம் அவருக்குக் கிடைக்கவில்லை. சுமார் 30 மணிநேரம் எம். ஜி.ஆர்.உடலின்தலைமாட்டில்கண்ணீரும் கம்பலை யுமாக நின்றிருந்த ஜெயலலிதாவின் தோற்றம், அ.தி.மு.க.வினரின் மனதில் ஆழப்பதிந்தது.

2

இந்த நிலையில் எம்.ஜி. ஆரின்உடல்அடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்பட்டபோது. ஜெயலலிதா உடன்செல்ல விரும்பினார். அதற்காக எம்.ஜி.ஆர். உடல் வைக்கப்பட்டிருந்த இராணுவ டிரக்கில் ஏறமுயன்றார். அப்போது நடந்த ஒரு சம்பவம் கூடியிருந்த லட்சக்கணக்கான மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. அதாவது டிரக்கில் ஏறமுயன்ற ஜெயலலிதாவை, ஜானகியின் உறவினர் டிரக்கிலிருந்து கீழே இழுத்துத் தள்ளினார். எந்த ஓர் அரசியல்வாதியின் இறுதி ஊர்வலத்திலும் நடந்திராத இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து ஜெயலலிதாவும் ஜானகியும் அந்த இடத்திலிருந்து அப் புறப் படுத்தப்பட்டனர். இதனால், லட்சக்கணக்கான மக்கள் காணமுடிந்த எம்.ஜி.ஆர் உடல் அடக்கத்தை, ஜெயலலிதாவும் ஜானகியும் காணஇயலாமல் போனது.

விரக்தி அடைந்த ஜெயலலிதா, தனது அரசியல் எதிர்காலமே இருண்டு விட்டதாகக் கருதி, போயஸ் இல்லத்துக்குள் சென்று கதவை அடைத்துக்கொண்டார். இருப்பினும் எம்.ஜி.ஆர் உடல் அடக்கம் செய்யப்பட்டபின், அ.தி.மு.க தொண்டர்கள் மனதில், சோகமே உருவான ஜெயலலிதாவின் தோற்றமேநிலைத்து நின்றிருந்ததால், அவர்கள் திரளாகப்போய் இல்லத்துக்குச் சென்று ஆதரவு தெரிவித்தனர். இன்று ஜெயலலிதா உடல் அதே ராஜாஜி மண்டபத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, லட்சக்கணக்கான மக்கள் அவருடைய உடலுக்கு அஞ்சலி செலுத்தும் நிலை உருவானது. இந்தியாவின் அதியுர் சபைகள் இரண்டும் ஜெயலலிதாவின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து நாள் முழுவதும் ஒத்திவைத்திருக்கின்றன. இவ்வாறு ஒரு முதலமைச்சரின் இறுதிநிகழ்வுக்காக நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளும் ஒத்திவைக்கப்படுவது இதுவே முதல் தடவை. 20க்கு மேற்பட்ட மத்திய அமைச்சர்கள், மாநில முதல்வர்கள், பிரதமர், குடியரசுத் தலைவர் என்று பலரும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தியமை புதிய வரலாறாகப் பதியப்பட்டுள்ளது.

1987ஆம் ஆண்டு 29 ஆண்டுகளுக்கு முன் இதே ராஜாஜி அரங்கில் அவமரியாதைக்கு உள்ளாகி, உதைத்து இறக்கி விடப்பட்ட ஒரு பெண்மணியின் உடல் அதே இடத்தில் தேசியக்கொடி போர்த்தப் பட்டு, அரச மரியாதையுடன் வைக்கப்பட்டமை. சாதனையல்லாமல் வேறென்ன?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மேடம்:** குடும்ப பிரச்சினைக்கு சுமுகத்தீர்வு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் ஆதரவுடன் முன்னேறுவர். மாணவர்கள் நன்றாகப் படிப்பர்.

**இடபம்:** புதிய முயற்சியில் எதிர்பார்த்த நன்மை உண்டாகும். தொழில் வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக் கும். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** உங்கள் பேச்சில் தன்னம்பிக்கை மிகுந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் தாராள லாபம் கிடைக்கும். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு சிறப்பாக அமையும். பிள்ளைக்ளின் செயற்பாடு பெருமையளிக்கும்.

**கடகம்:** மனதில் குழப்பம் உருவாகி விலகும். நல்லவர்களின் உதவி கிடைக்கும். தொழில் வளர்ச்சி பெற அதிகம் உழைப்பீர்கள். லாபம் படிப்படியாக உயரும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

**சிங்கம்:** உங்களிடம் உதவி பெற்றவர் நன்றி மறந்து செயற்படுவர். குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். தொழில் வியாபார வளர்ச்சியால் லாபம் அதிகரிக்கும். வெளியூர் பயணத்தில் திடீர் மாறுதல் உண்டாகும்.

**கன்னி:** சிந்தனையில் புதுமை நிறைந்திருக்கும். தொழில் வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். வருமானம் திருப்தியளிக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**துலாம்:** வாழ்வில் முன்னேற்றம் பெற புதிய வழி பிறக்கும். தொழில் வியாபாரத்தில் சாதனை படைப்பீர்கள். பெண்கள் ஆடம்பரமாகச் செலவழிப்பர். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்என்பதால், கவனமாகக்கையாளுங்கள்.

**விருச்சிகம்:** முக்கியப் பணி நிறைவேற்றுவதில் கூடுதல் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனுக்காக பாடுபடுவர்.

**தனுசு:** எவருக்கும் தகுதி மீறிய வாக்குறுதியளிக்க வேண்டாம். தொழில் வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். மிதமான லாபம் கிடைக் கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். வாகனப்பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மகரம்:** சுயநல நோக்கத்துடன் சிலர் உங்களிடம் பழகுவர். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.

**கும்பம்:** நேர்மை மிக்கவராகச் செயற்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் மிதமாக இருக்கும். உறவினர் வருகையால் திடீர் செலவு செய்ய நேரிடலாம். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

**மீனம்:** கடந்த கால உழைப்பின் மூலம் நன்மை அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். நிலுவைப் பணமும் வசூலாகும். நண்பரின் அன்பும் -ஆதரவும் கிடைக்கும்.



# செல்பியால் சர்ச்சை

ஜெயலலிதாவின் இறுதிச்சடங்கில் ரசிகருடன் கருணாஸ் செல்பி எடுத்தது, தமிழக மக்களிடையே கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. முன்னதாக நடிகர் கருணாஸ் கடந்த சட்டமன்ற தேர்தலில் திருவாடனை தொகுதியில் அதிமுக சார்பில் நின்று வெற்றி பெற்றார். முதன்முதலாக சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கருணாஸ், சட்டசபையில் ஜெயலலிதாவை புகழ்ந்துப் பாடி அவரை நெகிழ்ச்சியில் ஆழ்த்திய சம்பவங்களும் நடந்ததுண்டு.

இந்தநிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 11.30 மணிக்கு ஜெயலலிதா உயிரிழந்ததாக வெளிவந்த செய்திக்கு பிறகுஇ ஒட்டுமொத்த தமிழகமே சோகத்தில் ஆழ்ந்தது. இந்திய ஜனாதிபதி, பிரதமர், உலக நாடுகளின் தூதர்கள், பல்வேறு மாநிலங்களின் முதல்வர்கள், முக்கிய அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் ஜெயலலிதாவின் உடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தி தங்களது சோகத்தை பகிர்ந்து கொண்டனர். அதன் பின்னர் மாலை 6 மணியளவில் ஜெயலலிதாவின் உடல் சென்னை மெரீனாவில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். நினைவிடத்துக்கு பின்புறம் அடக்கம் செய்யப்பட்டது. இந்த இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட கருணாஸ், ரசிகர் ஒருவருடன் சிரித்தபடி செல்பிக்கு போஸ் கொடுத்துள்ளார். இந்தப் புகைப்படம் தற்போது இணைய தளத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஜெயலலிதாவால் அரசியலுக்குள் கொண்டுவரப்பட்ட கருணாஸ், உணர்ச்சிபூர்வமான அந்த இடத்தில் இதுபோல் சிரித்தபடி இருப்பது பலரின் கண்டனத்துக்கும் ஆளாக்கியுள்ளது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | 8 | | | | 5 | | |
| 4 | | 7 | 6 | | | | | |
| | | | 9 | | 8 | | 1 | |
| | | | 3 | 8 | | | 5 | 1 |
| | | 1 | | 7 | | 2 | | |
| | 4 | | | 9 | 1 | | | |
| | 5 | | 8 | | | | | |
| | | 4 | | | 9 | 1 | 8 | 3 |
| | | 2 | | | | 6 | 9 | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | 1 | 6 | 2 | 4 | 7 | 3 | 9 |
| 4 | 7 | 2 | 9 | 3 | 5 | 6 | 1 | 8 |
| 6 | 9 | 3 | 1 | 7 | 8 | 5 | 2 | 4 |
| 3 | 6 | 5 | 8 | 1 | 7 | 4 | 9 | 2 |
| 9 | 1 | 4 | 5 | 6 | 2 | 8 | 7 | 3 |
| 7 | 2 | 8 | 3 | 4 | 9 | 1 | 6 | 5 |
| 5 | 3 | 7 | 2 | 8 | 6 | 9 | 4 | 1 |
| 1 | 8 | 6 | 4 | 9 | 3 | 2 | 5 | 7 |
| 2 | 4 | 9 | 7 | 5 | 1 | 3 | 8 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க் கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபலமானது.




நினைச்சது கிடைக்க இல்லைன்னா கிடைச்சதை நினைக்கலாம் எண்டது சரிதான்



அதுக்காக நினைச்ச ஊருக்கு பஸ் கிடைக்க இல்லைன்னா கிடைச்ச ஊருக்கு ஏறிப் போக முடியுமா?

கணவன்: காலெண்டர்ல என்ன பார்க்கிறாய்?
மனைவி: பல்லி விழும் பயன்



கணவன்: கொண்டா நான் பார்க்குறேன் அது சரி பல்லி எங்க விழுந்தது?
மனைவி: நீங்க சாப்பிட்ட சாம்பாரில...!

மௌனம் சம்மதம் எண்டு மட்டும் அர்த்தம் இல்லை...



வாயில நல்லா வருது... சொல்ல வேண்டாம் எண்டு பார்க்கிறேன் என்பதாய் கூட இருக்கலாம்.

வள்ளி மகன்(ணி)கண்டன் Retweeted
**வள்ளி ம(கன்)ணிகண்டன்**
விடாமல் தொடர்ந்த முயற்சியே எந்த செயலுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு பயறு பிட்டு

## தேவையான பொருள்கள்



அவல் - ஒரு கப்
முளைவிட்ட சிறு பயறு - 2 கப்
துருவிய தேங்காய் - ஒரு கப்
உள்ளி - 5 பல்
மிளகுப்பொடி - அரை தேக்கரண்டி
சீரகபொடி - அரை தேக்கரண்டி
தேங்காய் எண்ணெய் - ஒரு தேக்கரண்டி
மஞ்சள் பொடி - ஒரு சிட்டிகை

## செய்முறை

அவலை இரண்டு மணி நேரம் ஊறவைத்துக் கொள்ளவும்.
தேங்காய் துருவல், உள்ளி, மிளகு பொடி, சீரகப்பொடி, மஞ்சள் பொடி இவைகளை ஒன்றாகச் சேர்த்து மிக்ஸியில் அரைத்துக் கொள்ளவும்.
பின் ஊற வைத்த அவலுடன், முளை விட்ட சிறு பயறையும் அரைத்த கலவைகளையும் ஒன்றாகச் சேர்த்து கிளறி தேங்காய் எண்ணெயை விட்டு சாப்பிடவும்.




ருசிக்கு தேவையானால் சிறிது உப்பை சேர்த்துக் கொள்ளவும்.
இந்தவகையான பிட்டு உடல் நலத்துக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

# இது புதுசு

# கைப்பைகள்

புதிய வடிவங்களில் கைப்பைகள் அறிமுகமாகியுள்ளன. வெளிநாட்டுத்தரத்துக்கு நிகரான கைப்பைகள் விற்பனை செய்யப்படுகின்றன. பல வர்ணத் தோலினால், பல்வேறு வடிவங்களில், பெரிய அளவுகளில் தயாரிக்கப்படுகின்றன. இவை 4 ஆயிரம் ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.









1, 2 தலைமுடியை நன்கு வாரி, தலையின் முன்பகுதியில் இருபக்கங்களிலும் இருந்து தலைமுடியை எடுத்து சிறிய பாண்ட் இட்டுக் கொள்க.
3, 4 அதேபடி முறையை மீண்டும் ஒரு முறை செய்க.
5 எஞ்சிய தலைமுடியை படத்தில் காட்டியவாறு பாண்ட் இடுக.
6, 7 கொண்டை போன்ற அமைப்பில் இருந்து மேலதிகமாக நீளமாகத் தொங்கும் முடியை, கொண்டைப் பகுதியைச் சுற்றி கிளிப் செய்க.
8 ஏனைய பகுதியை விரும்பிய விதத்தில் ஒழுங்கு செய்க. அலங்காரம் தயார்.

# பழங்களை வெறும் வயிற்றில் சாப்பிடுவதால் கிடைக்கக் கூடிய பயன்கள்



பழங்களை வெறும் வயிற்றில் எடுத்துக்கொண்டால், அது நம் உடலின் நச்சுக்களை வெளியேற்றுவதிலும், எடை குறைப்பு, மற்றும் வாழ்வின் மற்ற செயல்களுக்குத் தேவையான அதிகப்படியான ஆற்றலைத் தருவதிலும் பெரும் பங்கு வகிக்கிறது!

பழங்கள் ஒரு முக்கியமான உணவு. சாதாரணமாக நீங்கள் இரண்டு துண்டுகள் பாண், அதன்பின் ஒரு துண்டு பழம் என்று எடுத்துக் கொள்கிறீர்கள் எனக் கொள்வோம். பழத்துண்டு வயிற்றின் வழியே நேராகக் குடலுக்குள் செல்லத் தயாராக இருக்கிறது. ஆனால் பழத்துக்கு முன்னால் எடுத்துக் கொண்ட பாணினால் பழம் குடல் பகுதிக்குச் செல்வது தடுக்கப்படுகிறது. இந்த சராசரி நேரத்தில் முழு உணவான பிரட் மற்றும் பழம் இரண்டும் அழுகி, புளித்து, அமிலமாக மாறுகிறது. பழம் வயிற்றிலுள்ள உணவு மற்றும் செரிமானத்துக்கு உதவும். சாறுகளுடனும் சேரும் நிமிடத்தில், அந்த முழு நிறையான உணவு கெட்டுப்போக ஆரம்பிக்கிறது. அதனால் தயவு செய்து பழங்களை வெறும் வயிற்றில் அல்லது உணவுக்கு முன் சாப்பிடுங்கள்.

உண்மையில் உணவுக்குப் பின் பழம் எடுக்கும்போது, பழமானது மற்ற உணவுடன் சேர்ந்து அழுகுவதால், வாயு உற்பத்தியாகி வயிறு ஊதக் காரணமாகிறது!!

நரை முடி தோன்றுவது, தலையில் வழுக்கை விழுவது, நரம்புகளின் திடீர் எழுச்சி, கண்களின் கீழ் கருவளையம் தோன்றுவது இவையெல்லாமே, வெறும் வயிற்றில் பழங்கள் எடுத்துக்கொண்டால், நடக்காமல் தடுக்கப்படும். ஒரு 3- நாள்கள் பழங்கள் மட்டுமே எடுத்துக் கொண்டு விரதம் இருக்கலாம். அந்த 3 நாள்களும், பழங்களை மட்டும் சாப்பிட்டு, மற்றும் புதிதாய் எடுக்கப்பட்ட பழச்சாறுகளையும் மட்டுமே நாள் முழுவதும் எடுத்துக்கொள்ளுங்கள்.

### கிவி பழம்:

இது ஒரு சிறியது. ஆனால் வலிமை மிகுந்த பழம். இப்பழம் பொட்டாசியம், மக்னீசியம், விற்றமின்- ஈ மற்றும் நார்ச்சத்துக்கள் நிறைந்த ஓர் நல்ல பழம். ஆரஞ்சுப் பழத்தை விட விற்றமின்-சி சத்து கிவி பழத்தில் இரண்டு மடங்கு அதிகம் உள்ளது.

### ஆப்பிள்:

ஆப்பிளில் விற்றமின்-சி சத்து குறைவாக இருப்பினும்,அதில் உள்ள antioxidants , flavonoids போன்றவை இந்த விற்றமின் - சி சத்துக்களை மேம்படுத்துவதால், பெருங்குடல் புற்று நோய், மாரடைப்பு, பக்கவாதம் போன்ற ஆபத்துக்களைக் குறைக்கிறது.

### ஸ்ட்ராபெர்ரி:

இந்தப் பழத்தில் மற்ற எல்லாப் பழங்களையும் விட. மொத்த Antioxidant சக்தி இருப்பதால், குருதி நாளங்களில் அடைப்பு, புற்றுநோய்க் காரணிகள் பெருகுதல் முதலியவை ஏற்படாமல் நம்மைப் பாதுகாக்கிறது.

### ஆரஞ்சு:

ஒரு நாளைக்கு 2-4 ஆரஞ்சு எடுப்பது ஜலதோஷத்தை விலக்கும். கொழுப்பைக் குறைக்க உதவும். மேலும் சிறுநீரகக் கற்களைக் கரைப்பதோடு, கற்கள் வராமலும் தடுக்கும். அதனுடன் பெருங்குடல் புற்றுநோயின் ஆபத்தைக் குறைக்கிறது.

### தர்பூசணி:

92% தண்ணீர்ச் சத்துக்களையுடையது. மேலும் இந்தப் பழத்தில் மாபெரும் அளவில் Glutathione இருப்பதால், அது நம் உடம்பின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஜெ' மறைவு...

லலிதாவின் உடலுக்குப் பின்பாக சசிகலாவின் அண்ணன் மகனான டிவி மகாதேவன் நின்று கொண்டிருந்தார்.

இதுதவிர, சசிகலாவின் அண்ணன் மனைவி இளவரசி, அவரது பிள்ளைகளான விவேக், பிரியா, சசிகலாவின் அண்ணன் மகன் சுந்தரவதனத்தின் மகள் பிரபா, அவரது கணவர் டாக்டர் சிவகுமார் உள்ளிட்டவர்களையும் முக்கியமாக அங்கே காணமுடிந்தது.

இந்த நிலையில்தான் ஜெயலலிதாவின் இறுதிச் சடங்கில் சசிகலாவின் உறவினர்கள் தென்பட்டது கட்சிக்கு உள்ளும் வெளியிலும் பல கேள்விகளை எழுப்பியுள்ளன.

**அ.தி.மு.கவை கட்டுப்பாட்டில் வைக்க பா.ஜ.க. விரும்புமா ?**

ஜெயலலிதா உயிரோடு இருக்கும்வரை, சசிகலா தனியாக எந்த ஒரு நிகழ்விலும் பங்கேற்றதில்லை. ஆனால், மூத்த பத்திரிகையாளர் சோ ராமசாமிக்குஅஞ்சலிசெலுத்த சசிகலா நேரில் வந் தார். ஆனால், இதனை வைத்து மட்டும் சசிகலா கட்சியின் முகமாக மாறு வார் என்ற முடிவுக்கு வந்துவிட முடியாது.தற்போதைய சூழலில் கட்சிக்குள் சசிகலாவின் ஆதிக்கத்துக்கு எந்த சவாலும் கிடையாது. தற்போது முதலமைச்சராக இருக்கும் ஓ. பன்னீர்செல்வம் சசிகலாவுக்கு எதிராக தன்னைகட்சிக்குள்உறுதிப்படுத்திக்கொள்ள முயல்வாரா என்பது பதில் இல்லாத கேள்வி. மாநிலங்கள வையில் அதிமுகவுக்கு உள்ள 13 இடங்களின் ஆதரவு ஆளும் பாரதீய ஜனதாக் கட்சிக்கு எப்போதும் தேவைப்படும். அதனால், அ.தி.மு.க. வைக் கட்டுப்பாட்டுக்குள் வைத் திருக்கடில்லியில்ஆளும் பா.ஜ.கவும் தொடர்ந்து முயற்சி செய்யும்.

இந்த நிலையில், ஜெயலலிதாவின் கோடிக்கணக்கான ரூபா மதிப்புள்ள சொத்துக ளுக்கு யார் வாரிசு, அ.தி.மு.கவை வழி நடத்தப் போவது யார் என்ற கேள்விகளுக்கு தெளிவான பதில்கள் இதுவரை கிடைக்கவில்லை.

**கடைகள் வாடகைக்கு**

யாழ். போதனா வைத்தியசாலைக்கு அண்மித்த பகுதியில் கடைகள் வாடகைக்குண்டு.
அலுவலகங்களுக்கும் ஏற்றது. (J6672) (10.19)
தொடர்பு தொலைபேசி இலக்கம்: 0777 651826

## கண்ணீர் அஞ்சலி



எமது வங்கிக்கிளையின்
சக உத்தியோகத்தர் **திரு.ரகுநந்தன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

**நாகலிங்கம்
புவனேந்திரன்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**முகாமையாளரும், உத்தியோகத்தர்களும்
தேசிய சேமிப்பு வங்கி,
யாழ் 2nd கிளை,
யாழ்ப்பாணம்.** (J 6670) (14,18,21)

## மரண அறிவித்தல்

### தம்பையா இராசேந்திரம் (கிளியண்ணை)

(முன்னாள் கிளை முகாமையாளர், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கனடாவில் வசித்து வந்தவருமான தம்பையா இராசேந்திரம் நேற்று (07.12.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் லீலாவதியின் (இளைப்பாறிய ஆசிரியை, மல்லாகம் மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற மைதிலி மற்றும் தர்மினி, முரளீதரன், குமுதினி, கமலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவபூதராயர் வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.** (J/6671) (10.17)

தகவல்:
**குடும்பத்தினர்.
021 224 1092**

## மரண அறிவித்தல்



### நாகலிங்கம் புவனேந்திரம்

**உரிமையாளர் - இந்திரா கபே நெல்லியடி**

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் புவனேந்திரம் நேற்று (07.12.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் -சின்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான நடேசு-திலகவதி தம்பதியரின் மருமகனும், உதயமதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தர்மராசா மற்றும் இராசேந்திரம், தெய்வேந்திரம், மகேந்திரம் ஆகியோரின் சகோதரரும், ரகுநந்தன் (N.S.B யாழ்ப்பாணம்.), சாளினி (ஆசிரியை, யா/உடுத்துறை மகாவித்தியாலயம்), குகநந்தன் (லண்டன்), சிவநந்தன், கஸ்தூரி (யா/குடத்தனை G.T.M.S ஆசிரியை), கிருஷ்ணானந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதர்சினி (ஆசிரியை யா/நெல்லியடி மத்திய கல்லூரி), ஸ்ரீ கிருஷ்ணன் (சமுர்த்தி முகாமையாளர்-அச்சுவேலி), டாக்டர் சத்தியமூர்த்தி (மாவட்ட வைத்திய சாலை - முல்லைத்தீவு) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

**முருகமூர்த்தி வீதி,
நெல்லியடி.** (C/26965) (10.19)

தகவல்:
**நா.தெய்வேந்திரம் (சகோதரன்)
உரிமையாளர்-இந்திரா கபே,
நெல்லியடி,
கணேசன் ஹாட்வெயார்-நெல்லியடி.**

## மரண அறிவித்தல்



### திருமதி இராசம்மா வேலாயுதம்

நெல்லியடி முருகமூர்த்தி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா வேலாயுதம் நேற்று (07.12.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் (தேநீர் கடை - கந்தையா) அவர்களின் அன்பு மனைவியும், இந்திராதேவி, பாலேந்திரன், பாலச்சந்திரன், காலஞ்சென்றவர்களான பாலகிருஷ்ணன், பாலசுப்ரமணியம் ஆகியோரின் அன்புத் தாயும், சத்தியசீலன், வசந்தாதேவி, விஜயலஷ்மி, இந்திராதேவி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும், சசிகரன், சசிதா, காலஞ்சென்ற சசிகாந் மற்றும் வசுமதி, கஜேந்திரன், வளர்மதி, விஜயபாஸ்கர், பாலமுரளி, நவநீதன், கீர்த்தனா (ஆஸ்திரேலியா), அபிராமி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், விதுஷன் (கனடா), தர்மினி (கனடா), நிதுஷரன், கிர்ஷிகா, டனுஷ்கா, சுகன்யா, மிதுஷாந், தனராஜ், தனுசிகா, தட்சாயினி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங் கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தடங்கன் புளியடி,
முருகமூர்த்தி கோயிலடி,
நெல்லியடி.** (என்.201) (13.18.17.21)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி இராஜேஸ்வரி (இரத்தினம் ரீச்சர்) செல்வராசா

(ஓய்வு பெற்ற ஆசிரியை - யாழ் ஏழாலை சைவமகாஜன வித்தியாலயம்)

கட்டுவன் தெற்கு ஏழாலையைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கு நாக்கியம்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி (இரத்தினம் ரீச்சர்) செல்வராசா 04.12.2016 ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்வராஜாவின்(ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பசுபதி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சிவதாசன் மற்றும் மகேஸ்வரி(கனடா), இராஜலஷ்சுமி(சூந்தில்) ஆகியோரின் சகோதரியும் சிவமலர் (லண்டன்), காலஞ்சென்ற சண்முகராஜா (ஆசிரியர்) மற்றும் சிவராசா ஆகியோரின் மைத்துனரும் கஜனி, பிரகதீஸ்வரன் (கண்ணன் - ஜேர்மனி), சிவறூபன் (றூபன் - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜோதினி (ஜேர்மனி), சிறீதரன், சர்மிளா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் சிவதரன், சிறீபாக்கியா, நர்த்தனன், சிம்மயி, பிரஷாலினி, பிரவீனா, பிறித்திகா, பிறியேஸ், பிறஷான், சிமன்ஜா, செனியா, செயின் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஏழாலை வடக்கு,
ஏழாலை.** (J 6661) (14.18.21)

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஜெ' மறைவு: வேகமாக நடந்த ஆட்சி மாற்றம் எழுப்பும் கேள்விகள்

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா டிசெம்பர் 5ஆம் திகதியன்று இரவு 11.30 மணியளவில் காலமான பின்னர், புதிய முதலமைச்சரின் பதவியேற்பு என்பது மிக விரைவாகவும், அமைதியாகவும் நடந்தேறியதும், ஜெயலலிதா உயிரோடு இருந்த காலகட்டத்தில் அவரால் ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள் அவரது சடலத்துக்கு அருகில் நின்றுகொண்டிருந்ததும் தமிழக அரசியல் அரங்கில் பலத்த கேள்விகளையும் சலசலப்புகளையும் உருவாக்கியிருக்கிறது.

இது தொடர்பில் பி.பி.சி செய்திச் சேவையின் செய்தியாளர் வி.முரளிதரன் எழுதிய பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜெயலலிதாவின் உடலுக்கு அருகே சசிகலாவின் உறவினர்கள் மட்டுமே நின்றது சர்ச்சையை உண்டாக்கியது. டிசெம்பர் 4ஆம் திகதியன்றே முதல்வரின் உடல்நிலை மோசமடைந்த நிலையில், அன்று இரவே அப்பலோ மருத்துவமனைக்கு வந்தார் சசிகலாவின் அண்ணன் வி. திவாகரன். இதற்கு அடுத்த நாளான டிசெம்பர் 5ஆம் திகதி அப்பலோ மருத்துவமனையிலேயே அமைந்திருக்கும் கூட்ட அரங்கில் அதிமுக சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றதாகக் கூறப்பட்டது. ஆனால், இது குறித்து அந்தக்கட்சியின் சார்பில் எந்தவித அறிக்கையோ, விளக்கமோ அளிக்கப்படவில்லை.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களிடம் என்னவிதமான வாக்குறுதிகள் வாங்கப்பட்டன, என்னென்ன அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன என்பவை குறித்து உறுதியான தகவல்கள் ஏதும் இல்லாத நிலையில், அன்று மாலை 6 மணியளவில் மீண்டும் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடக்குமென தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையில்தான் அன்று இரவு 11. 30 மணிக்கு ஜெயலலிதா காலமானதாக நள்ளிரவு 12.20 மணியளவில் அப்பலோ மருத்துவமனை ஒரு அறிக்கை மூலம் அறிவித்தது.

அதுவரை மருத்துவமனையில் இருந்த மூத்த அமைச்சர்களான ஓ. பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிச்சாமி உள்ளிட்ட அமைச்சர்கள் மருத்துவமனையிலிருந்து புறப்பட்டனர். பின்னர் சசிகலாவும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

அதிகாலை 1. 30 மணியளவில் ஆளுநர் மாளிகையில் நடந்த ஒரு நிகழ்வில் தமிழகத்தின் முதல்வராக ஓ. பன்னீர்செல்வம் முழு அமைச்சரவையுடன் பதவியேற்றார்.

இதற்கு முன்பாக, சி.என். அண்ணாதுரை, எம்.ஜி. ராமச்சந்திரன் ஆகிய இரண்டு பேரும் தமிழக முதல்வர்களாகப் பதவியிலிருக்கும் போதே உயிரிழந்திருக்கின்றனர். அந்த இரண்டு தருணங்களிலுமே இடைக்கால முதல்வராக நெடுஞ்செழியன் ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டார். அண்ணாதுரை பெப்ரவரி 3, 1969இல் உயிரிழந்த நிலையில், திமுகவின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் பெப்ரவரி 9ஆம் திகதியன்று, முறைப்படி அறிவிக்கப்பட்டு நடத்தப்பட்டது. அதில் மு.கருணாநிதி முதல்வராக தேர்வு செய்யப்பட்டார்.

1987ஆம் ஆண்டு டிசெம்பரில் முதலமைச்சர் எம்.ஜி. ராமச்சந்திரன் காலமான போதும், இடைக்கால முதலமைச்சராக நெடுஞ்செழியனுக்கு ஆளுநர் குரானா பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். ஆனால், ஜெயலலிதா உயிரிழந்த பின்னர் டிசெம்பர் ஆறாம் திகதி அதிகாலை 1.50 மணியளவில் ஆளுநர் மாளிகை வெளியிட்ட செய்திக் குறிப்பில் ஓ. பன்னீர்செல்வம் தான் அதிமுகவின் சட்டமன்றக் கட்சித் தலைவராக தேர்வு செய்யப்பட்டிருப்பதாக கடிதம் அளித்ததையேற்று அவருக்கு முதல்வராகப் பதவியேற்பு செய்யவிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதிமுகவின் சட்டமன்ற உறுப்பினர் கூட்டத்தில் என்ன விவாதிக்கப்பட்டது, முதல்வர் பதவிக்கு வேறு யாருடைய பெயரும் பரிசீலிக்கப்பட்டதா என்ற விவரங்கள்ஏதும்வெளியிடப்படவில்லை.

மேலும், முதல்வர் ஜெயலலிதாவின் உடல் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டதும் அவரது உடல் அருகே முந்தைய காலகட்டங்களில் ஜெயலலிதாவால் கட்சியிலிருந்து ஓரம்கட்டப்பட்ட சசிகலாவின் உறவினர்கள் பலரும் நின்றிருந்தனர்.

சசிகலாவின் கணவரான எம். நடராஜன் அருகிலேயே இருந்தார். பிரதமர் நரேந்திர மோடி ஜெயலலிதாவுக்குஅஞ்சலிசெலுத்த வந்தபோது நடராஜனிடமும் சில வினாடிகள் பேசியது பலருக்கும் ஆச்சரியமளித்தது. அதேபோல, ஜெய

(23 ஆம் பக்கம் பார்க்க)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
கந்தையா
துரைராசா

(ஓய்வுபெற்ற கிராம சேவகர், முன்னாள் உறுப்பினர்- பிரதேசசபை புத்தூர்)

தோற்றம்
25.10.1949

மறைவு
30.11.2014

திதி: பூர்வபக்க நவமி

நீங்கள் இவ் உலகை விட்டு நீங்கி
ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
எம்மை விட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்

நீர்வேலி வீதி,
கைதடி வடக்கு,
கைதடி.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி அழைப்பு



மலர்வு
17 . 03 . 1950

உதிர்வு
06 . 11 . 2016

கடந்த 06.11.2016 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் கணபதிப்பிள்ளை சந்திரலிங்கம்**

அவர்களின் வீட்டுக் கிரியைகள் இன்று (08.12.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காந்தி வீதி,
துன்னாலைமேற்கு, கரவெட்டி

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
16 . 12 . 1932

மறைவு
08 . 11 . 2016

**அமரர் முருகேசு சுந்தரம்**

கடந்த 08.11.2016 இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி நிகழ்வு இன்று (08.12.2016) வியாழக்கிழமை காலை 6.30 மணியளவில் நயினாதீவு கங்காதரணி தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னார் நோயுற்ற வேளை சிகிச்சை அளித்த நயினாதீவு மருத்துவமனை, யாழ் போதனா மருத்துவமனை மருத்துவர்கள், தாதியர்கள், ஊழியர்கள் மற்றும் கண்ணீர் போஸ்ரர்கள் பிரசுரங்கள், தொலைபேசிகள் வாயிலாகவும் மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

7ஆம் வட்டாரம், நயினாதீவு.

குடும்பத்தினர்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2824 திகதி 07.12.2016
20 46 54 57 A 32
ரூ. 39,833,800/-

Galaxy Star
வெற்றி வாரம் 116 திகதி 07.12.2016
12 13 19 36 54
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,399,800 /-

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**மார்க்கண்டு உதயகுமார்**
(உப தபால் ஊழியர்)
தோற்றம்
24.12.1956

இறைவன் அடியில்
08.12.2011

**வசந்திமாலா உதயகுமார்**
தோற்றம்
08.02.1965

கருவில் உருவளித்து
ஊனில் உயிர்தந்து
வாழ்வில் வளம் தந்த
இதய தெய்வங்களே!

அரக்கர்களின் அராஜகத்துக்கு ஆகுதி ஆனீரே
ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
யாரும் இல்லை எம் துயர் போக்க....
ஆண்டவனே! ஆணையிடு!
நீதி நிலைக்க நீதித்தாயின் கண்திறக்க
அதுவே ஆருயிர் மருந்தாம் எமக்கு
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இராஜ வீதி,
நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

(ஜே.6652) (13.21)

பிள்ளைகள்,
செந்தூரன், குகதீபன்,
சங்கீதன், கோபிகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாட நூலில்...

கல்வி அமைச்சின் மூலமாக வெளியிடப்படுகின்ற பாடநூல்களில், தரம் 6,7,8,9,10 ஆம் ஆண்டு வரலாற்று பாடத்திட்டத்தில் தமிழர் தொடர்பான வரலாறு திட்டமிடப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்தில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் கல்வி அமைச்சில் இது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அமைச்சர் இராதாகிருஸ்ணன் தெரிவித்ததாவது:

இந்தக் கூட்டத்தில் நாங்கள் அனைவரும் இணைந்து தீர்மானத்தை மேற்கொண்டிருக்கின்றோம். கடந்த காலங்களில் நடந்த விடயங்களை மீண்டும் விவாதித்து எதுவும் நடக்கப் போவதில்லை. எதிர்காலத்தில் என்ன நடக்கவேண்டும், எவ்வாறான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும், அதற்கு நாம் எவ்வாறு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

மிகவிரைவில் ஒரு குழு ஒன்றை அமைப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரைக்கு அமைய மாற்றங்களைக் கொண்டு வருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் தற்போது மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள புத்தகங்களில் ஒரு சில குறைபாடுகள் இருப்பது தொடர்பிலும் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்றேன் - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட கல்வி அமைச்சின் அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

நாங்கள் வரலாற்றுப் பாடம் தொடர்பாகத் தமிழ்ப் பேராசிரியர்கள் பலருக்கும் கடிதம் அனுப்பிப் பாடவிதானம் தொடர்பாக தங்களுடைய பங்களிப்பைத் தருமாறு கோரியிருந்தோம். ஆனால் அவர்கள் யாரும் இந்த விடயம் தொடர்பாக எமக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வரவில்லை. இதன் காரணமாகவே இவ்வாறான குறைபாடுகள் ஏற்பட்டிருக்க வாய்ப்பு இருக்கின்றது.

நாம் இதனைத் திட்டமிட்ட அடிப்படையில் புறக்கணிக்கவில்லை. எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய புதிய குழு அமைக்கப்பட்டு அவர்களுடைய பரிந்துரைகளுக்கு அமைய தேவையான முக்கிய விடயங்களை உள்வாங்க முடியும்.

ஆனால் அவர்கள் எங்களுடன் தொடர்ச்சியாக இணைந்து வேலை செய்ய வேண்டும் - என்றார்கள். (த-5)

## எம்மை மீறி....

முன்தினம் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் இருந்துவரும் பிரச்சினைக்குத் தீர்வு பெறவேண்டும் என்றால் அரசமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும். அதனூடாகவே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று தெரிவித்து இன்று அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. மாகாண சபைகளுக்குக் கூடுதலான அதிகாரங்கள் வழங்குவதற்கும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமலாக்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசமைப்பில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு நாடு 5 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டால் இலங்கையில் நல்லிணக்கம் இல்லாமல் போகும். இன, மத அடிப்படையில் நாடு பிரிந்து விடும். இதனையே இந்தியா மற்றும் மேற்கத்தேய நாடுகள் எதிர்பார்க்கின்றன. அனைத்து மக்களும் வேறுபாடுகளை மறந்து அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும். நாட்டுப்பற்றுள்ள முஸ்லிம்களும் தமிழர்களும் எம்முடன் இணைந்து போராட முன்வர வேண்டும்.

மட்டக்களப்புப் பயணத்துக்கு எமக்குத் தடை விதிக்கப்பட்டது. குறைவான அதிகாரங்கள் இருக்கும்போதே எமக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. கூடுதலான அதிகாரங்கள் மாகாணங்களுக்கு கிடைத்தால் நிலமை என்னவாகும்.

அரசமைப்பில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் இல்லாமல் செய்யப்படக் கூடாது. நிறைவேற்று அதிகாரம் இருந்தால் மாத்திரமே ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக ஜனாதிபதியால் நடவடிக்கை எடுக்க முடியும். நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமலாக்குவதற்கல்ல, அதனை அசைப்பதற்கும் நாம் இடமளிக்க மாட்டோம். அதற்காக தேசப்பற்றுள்ள அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும் - என்றார். (த-5)

## வடக்கு மாகாண...

றுத் தெரிவித்தார். வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வின்போது, ஆளும் கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், அமைச்சர்களை விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் காலத்தை மேலும் ஒரு வாரத்துக்கு நீடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இதற்குப் பதிலளித்து உரையாற்றிய முதலமைச்சர்,

வடக்கு அமைச்சர்களுக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு இரு ஓய்வு பெற்ற நீதிபதிகள் உள்ளிட்ட மூவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவுக்கு முறைப்பாடு செய்வதற்கான கால அவகாசம் நேற்று (நேற்று முன்தினம்) முடிவடைந்தது. இருப்பினும் அதனை ஒரு வார காலத்துக்கு நீடிக்க முடியும். இந்தக் குழுவுக்கு இதுவரை 5 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன- என்றார். (த-5-10)

## தாஜுதீனின்...

கொலை யில் சந்தேக நபரான முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகரவுக்கு முன் பிணை வழங்கப்படக் கூடாது. அவர் கைது செய்யப்படவேண் டும் என்றும் கோரிக்கை முன்வைத்தனர். முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமர சேகர தமக்கு முன் பிணை வழங் கக் கோரி கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப் பித்துள்ளார்.

இதன்போதே ஆனந்த சமரசேகரவுக்கு முன் பிணை வழங்கப்படக்கூடாது என்றும், அவர் கைது செய்யப்படவேண்டும், வசீம் தாஜுதீனின் கொலைக்கு உரிய நீதிவேண்டும் என்றும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கேட்டுக் கொண்டனர். (த-5)

## வடக்கு அரசுக்கு...

தலைவர் சீ.வி.கே.சிவஞானம் மாகாண சபையில் நேற்று அறிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவைத் தலைவர் மேற்படி விடயத்தைச் சபையில் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபைக்கு என்று கீதம் தயாரிப்பது தொடர்பில் சபை நடவடிக்கைக் குழு முதலில் ஊடகங்கள் வாயிலாக விளம்பரப்படுத்தும். அதன் மூலம் பொருத்தமான கீதம் தெரிவு செய்யப்பட்டு அது உருவாக்க ஏற்பாடுகள் மேற் கொள்ளப்படும் - என்றார்.

வடக்கு மாகாண சபை 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி செயற்பட ஆரம்பித்தது. மூன்று ஆண்டுகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன. இதுவரை சபைக்குரிய தனித்துவமான கீதம் தயாரிக்கப்படவில்லை. இதேவேளை மாகாணசபைக்குரிய கொடியும், ஏற்க னவே இருந்த கொடியே பயன்படுத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (து-5-8)

## ஜயம்பதி....

டுள்ளது. நாடாளுமன்றத்தில் அவரே இந்தத் தகவலை நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்குப் பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபால தலைமையில் கூடியது. சிறப்புரிமை பிரச்சினையொன்றை முன்வைத்து தனக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள விடயத்தை சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார் ஜயம்பதி.

“எனது கையடக்கத் தொலைபேசிக்கு நேற்று (நேற்று முன்தினம்) அழைப்பை ஏற்படுத்திய நபர் ஒருவர், அரசமைப்புத் தயாரிப்பு நடவடிக்கையில் எனது வகிபாகத்தைத் தொடர்புபடுத்தித் தகாத வார்த்தைகளால் திட்டினார். என்னையும், எனது குடும்பத்தையும் கொலை செய்யப் போவதாக மிரட்டலும் விடுத்தார். இது குறித்துக் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன். வெலிக்கடை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளேன். கருத்துகளைக் கருத்துகளால் எதிர்கொள்ள முடியாதவர்களே இவ்வாறான செயலில் இறங்கியுள்ளனர். இப்படியான அச்சுறுத்தல்கள் மூலம் எமது பயணத்தைத் தடுத்து நிறுத்தி விடமுடியாது” என்றார் ஜயம்பதி.

இதையடுத்து கருத்து வெளியிட்ட பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபால, விடயத்தைச் சிறப்புரிமை பற்றிய குழுவுக்கு ஆற்றல்படுத்துவதாகவும், பொலிஸ்மா அதிபர் ஊடாகத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார். (த-5)

## புதிய...

கருதி எதிர்காலத்தில் அதிகாரத்துக்கு வரும் எதிர்பார்ப்பில் குறுகிய அரசியல் நோக்கத்துடன் செயற்பட்டால் அதன் பிரதிபலனை எதிர் காலத்தில் சகலரும் அனுபவிக்க வேண்டி வரும்.

நாட்டில் ஏன் போர் ஏற்பட்டது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மீண்டு மொரு போர் ஏற்படாமல் இருப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். போருக்குப் பின்னர் செய்ய வேண்டிய முக்கிய விடயங்களைக் கடந்த அரசு செய்யவில்லை. எதிர்காலத்தில் மற்றுமொரு போர் ஏற்பட்டால் என்று உதய கம்மன்பில சபையில் கேள்வியொன்றை எழுப்பியிருந்தார். இப்படியானதொரு எண்ணம் எமது மனங்களில் இருந்தால் அவ்வாறான சிந்தனையைத் தடுப்பதற்கு அடிப்படையான தொரு வேலைத்திட்டம் அவசியம்.

புதிய அரசமைப்பு தயாரிப்புப் பணி குறித்தும் தவறான கருத்துக்கள் மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டு வருகின்றன. உப குழுக்களின் அறிக்கையை மையப்படுத்திப் பரப்புரை செய்கின்றனர். இன்று நாம் எமது பொறுப்பை நிறைவேற்றாவிட்டால் நாளைய நாள் இருள் சூழ்ந்ததாகிவிடும். பிரச்சினைகளுக்குத் தீர்வைக்காண சகலரும் இணைந்து சகோத ரத்துடன் செயற்படுவோம் - என்றார். (த-5)

## ஒற்றையாட்சியை...

மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசியப் பாதுகாப்பு குறித்து எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும். ஒரு அடியேனும் பின்நோக்கி நகரக் கூடாது. அத்துடன், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது சம்பந்தமாகவும் அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதி ஒற்றையாட்சியைக் காட்டிக்கொடுக்கமாட்டார் - விட்டுக் கொடார். புதிய அரசமைப்பு தயாரிப்பின்போது தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலேயே பணி இடம்பெறவேண்டும் - என்றார். (த-5)

## கம்மன்பிலவுக்கு...

தெரிவித்தார். நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

“பயங்கரவாதம் முறியடிக்கப்பட்டவுடன் அதனுடன் தொடர்புடைய கட்சிகளையும் தடை செய்ய வேண்டும். இதேபோன்று கூட்டமைப்பையும் தடை செய்ய வேண்டும்’ என்று தூய ஹெலஉறுமயவின் தலைவர் கம்மன்பில தெரிவித்துள்ளாரே என்ற ஊடகவியலாளரின் கேள்விக்கு, இனவாதத்தையே பேசிக்கொண்டிருக்கும் புதிய ஹெல உறுமயக் கட்சியைத் தான் முதலில் தடை செய்ய வேண்டும். மாறாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அல்ல என்றார் அமைச்சர். (த-5)

## 25 ஆயிரம்...

கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வீதிச் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக தண்டப் பணம் அறவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டதற்கு மக்கள் வரவேற்பளித்துள்ளனர். வீதிச் சட்டங்களுக்கு எதிராக நடந்துகொள்ளபவர்களே இதனை எதிர்த்துப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுகின்றனர். அவர்களுக்குப் பின்னால் யார் உள்ளனர். அவர்கள் யாருடைய அரசியல் நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுகின்றனர் என்பது தெரியும்.

இதுவரை காலமும் நாட்டில் முறையான வீதிச் சட்டம் கொண்டுவரப்படவில்லை. அதன் காரணமாகத் தண்டப் பணம் அறவிட முடியாத நிலை காணப்பட்டது. தற்போது சட்டமொன்று கொண்டுவரப்பட்டு தான் அறவிடப்படவுள்ளது.

2014ஆம் ஆண்டு இடதுபக்கமாக முன் செல்ல எத்தனித்ததன் விளைவாக 2 ஆயிரத்து 400 பேர் இறந்துள்ளனர். 2015 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 415 பேர் என்பதுடன், 2016 ஆம் ஆண்டின் 10 மாதத்தில் மாத்திரம் 2 ஆயிரத்து 400 பேர் இறந்துள்ளனர். ஒரு நாளைக்குச் சராசரியாக 8 பேர் இறந்துள்ளனர்.

அரசு வீதிச் சட்டங்களை மீறுபவர்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள இந்த நடவடிக்கையை அடுத்து விபத்துகள் கணிசமான அளவு குறைந்துள்ளதுடன், இறப்பு வீதம் நாளைக்கு 2 பேராகவும் குறைந்துள்ளது - என்றார்.

இந்த விடயம் தொடர்பில் கருத்துவெளியிட்ட நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுஜன ஊடகப் பிரதியமைச் சர் கருணாசேன பரணவிதாரண தெரிவித்ததாவது:

தனியார் பேருந்து உரிமையாளர் முன்னெடுத்த பணிப் புறக்கணிப்பின் போது ஊடகங்கள் அவர்கள் பக்கமே நின்று செய்திகளை வெளியிட்டிருந்தன. மக்கள் இவ்வாறு 25ஆயிரம் தண்டப் பண அறவீட்டுக்கு வரவேற்புத் தெரிவித்துள்ளனர். எமது நாட்டில் வீதிச் சட்ட மீறலுக்கு நீதி குறைவாக உள்ளது. அதனையே சீர்செய்கின்றோம். பணிப்புறக்கணிப்பின்போது 128 அரசு பேருந்துகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இது பொதுச் சொத்துகளுக்கு சேதப்படுத்திய குற்றமாகும். குறித்த குற்றத்தை நிகழ்த்திய அனைவருக்கு எதிராகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், தண்டனையும் விதிக்கப்படும் - என்றார். (த-5)

## குளத்தில்...

நிதர்சினி (வயது-18) ஆகியோரே உயிரிழந்தனர். நிதர்சினி திருமணம் முடித்து சில மாதங்களே என்று கூறப்பட்டது.

இல்லம் ஒன்றில் தங்கியிருந்து கல்வி கற்கும் பாடசாலைச் சிறுமி பாடசாலை வி முறையை அடுத்து தனது வீட்டிற்குச் செ றுள்ளார். வீட்டிலுள்ள ஏனைய சகோ ரங்களும் இணைந்து குளத்தினை பார்வையிடச் சென்றுள்ளனர்.

அண்மையில் திருமணமான நிதர்சி யின் கணவர் படகு ஒன்றில் அனைவ யும் ஏற்றி குளத்திற்குள் அழைத்துச்செ கரைக்குக் கூட்டிவந்து இறக்கியுள்ள இறக்கிய படகினை நிறுத்தி விட்டுவரு காக அவர் சென்றபோது, ஒருவர் குள னில் தவறிவிழ மற்றைய சகோதரி ரைப் பிடிக்க முற்பட்டபோது, இருவ குளத்தில் விழுந்துவிட்டனர்.

ஏனைய சகோதரர்கள் எழுப்பிய அவ குரலினையடுத்து வீதியால் சென்றவ தும் அயலவர்களினதும் உதவியு படகினைச் செலுத்தியவர் குளத்தி வீழ்ந்த இருவரையும் மீட்டு உடனடி அக்கராயன் வைத்தியசாலைக் கொண்டுசென்றனர். எனினும் அதற் யில் சகோதரிகள் இருவரினதும் உயிர் பிரிந்துவிட்டன என்பதை மருத்துவ சோதனை உறுதிப்படுத்தியது. சம்ப தொடர்பில் அக்கராயன் பொலிஸ் விசாரணைகளை மேற்கொண்டுள்ள இந்தச் சம்பவம் அந்தக் கிராமத்தை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

(வ-4,21,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகபுரம், இளைஞர், உருத்திரபுரம் எவ்.ஏ. கிண்ணத் தொடரில் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 8
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் எவ்.ஏ. கிண்ணத்துக்காக தேசிய மட்டத்தில் நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் கரைச்சி லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்களில் கனகபுரம், இளைஞர், உருத்திரபுரம் அணிகள் வென்றன.
உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இந்த ஆட்டங்கள் நடைபெற்றன.
முதலில் இடம்பெற்ற கனகபுரம் அணிக்கும் ஜெயந்தி நகர் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கனகபுரம் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து நடைபெற்ற உழவர் ஒன்றிய அணிக்கும் பரந்தன் இளைஞர் வட்ட அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பரந்தன் இளைஞர் வட்ட அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. உருத்திரபுரம் அணிக்கும் உதயதாரகை அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உருத்திரபுரம் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



# ரசலின் அதிரடி ஆட்டத்தால் டாக்கா இறுதிக்குத் தகுதி

## சங்கா தடுமாறினார்

பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடரில் இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது டாக்கா அணி.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற குல்னா அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.
நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 140 ஓட்டங்களைச் சேர்த்தது டாக்கா. அதிகபட்சமாக ரசல் 46 ஓட்டங்களையும் (25 பந்துகளில்), டுவைன் பிராவோ 23 ஓட்டங்களையும் சேர்த்தனர்.
பந்துவீச்சில் யுனைட் கான் 4 இலக்குகளையும், பிளெச்சர் 2 இலக்குகளையும் கௌவல் ஓர் இலக்கையும் வீழ்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய குல்னா அணி 86 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து தோல்வியடைந்தது. பிளெச்சர் எடுத்த 28 ஓட்டங்களே அதிகபட்சம்.
பந்துவீச்சில் ரசல், பிராவோ இருவரும் தலா 4 இலக்குகளையும், ஜெய்ட், சகிப் அல் கசன், இஸ்லாம், கொசைன் நால்வரும் த்லா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 8
மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் லீக் முறையிலான ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உருத்திரபுரம் அணியை எதிர்த்து இளவாலை சென். லூட்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 8
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை குறித்த கழகத்தின் மைதானத்தில் மாலை 5மணிக்கு இடம்பெறவுள்ளது. 2018 ஆம் ஆண்டு வைர விழா கொண்டாடுவது தொடர்பாகவும் குறித்த கூட்டத்தில் ஆலோசிக்கவுள்ளதால் அனைத்து கழக உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-422)

# கரம் தொடர்

யாழ்ப்பாணம், டிசெ. 8
யாழ். மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆசிரியர்களுக்கு இடையில் தேசிய ரீதியில் நடத்தத் திட்டமிட்ட கரம் தொடர் யாழ். மத்திய கல்லூரியின் உள்ளரங்கில் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இடம்பெறவுள்ளன. (ம-23)

# யாழ். மத்திய கல்லூரியின் மேசைப்பந்தாட்ட முடிவுகள்

JAFFNA CENTRAL COLLEGE
BICENTENNIAL 1816-2016

யாழ்ப்பாணம், டிசெ. 8
யாழ். மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆசிரியர்களுக்கு இடையில் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட மேசைப் பந்தாட்டத் தொடரில் வெற்றிபெற்றோர் விவரங்கள் வருமாறு.
ஆண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஜெ.மோகன் முதலாமிடத்தையும், கிங்சிலி இரண்டாமிடத்தையும், வினோகாந் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.
பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சிறிமைதிலி முதலாமிடத்தையும், திருமதி ஹரிகரன் இரண்டாம் இடத்தையும், எஸ். சிந்துஜா மூன்றாமிடத்தையும் தமதாக்கினர்.
ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மோகன், கிங்சிலி இணை முதலாமிடத்தையும், வினோகாந், குமரேசன் இணை இரண்டாம் இடத்தையும், யோகானந்தன், சுரேந்திரன் இணை மூன்றாம் இடத்தையும் தமதாக்கினர்.
பெண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி ஹரிகரன், மைதிலி இணை முதலாமிடம் இடத்தையும், சிந்துஜா, பிரியங்கா இணை இரண்டாம் இடத்தையும், மென்சுயா, வசந்துரா இணை மூன்றாம் இடத்தையும் கைப்பற்றின.
கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஜெ.மோகன்,சிறி மைதிலி இணை முதலாம் இடத்தையும், வினோகாந், சிந்துஜா இணை இரண்டாம் இடத்தையும், கிங்சிலி, திருமதி சுரேந்திரன் இணை மூன்றாம் இடத்தையும் கைப்பற்றின. (ம-23)

# இறுதி ஆட்டம் நாளை

நியூசிலாந்து-ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடை யிலான மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் மெல்பேர்ணில் நாளை நடைபெறவுள்ளது.
முடிவடைந்த இரு ஆட்டங்களில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றது. இதனால் நாளைய ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் கிண்ணத்தை ஆஸ்திரேலியாவே கைப்பற்றும். ஆனால் 3:0 என்ற வழித்துத் துடைப்பைத் தவிர்த்து தொடரை குறைந்தபட்சம் 1:2 என்றாக்க வேண்டுமாயின் நாளைய ஆட்டத்தில் வென்றேயாகவேண்டும் என்ற நெருக்கடி நியூசிலாந்துக்கு உள்ளது. (ம)





# தோமஸ் ஏ, பி அணிகள் அரையிறுதியில் சந்திப்பு

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திவந்த கபடித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.
ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்திலேயே ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ள முதலாவது அரையிறுதியில் பருத்தித்துறை சென். தோமஸ் ஏ அணியை எதிர்த்து பருத்தித்துறை சென். தோமஸ் பி அணி மோதவுள்ளது. (ம-422)



# உருத்திரபுரம் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 8
மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் லீக் முறையிலான ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் உருத்திரபுரம் அணி வெற்றிபெற்றது.
உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது.
உருத்திரபுரம் அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் அணி மோதியது.
இதில் உருத்திரபுரம் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வோர்ணர் சாதனை

ஒரு நாள் ஆட்டங்களில் ஒரு வருடத்தில் அதிக சதம் விளாசிய ஆஸ்திரேலிய வீரர் என்ற சாதனையைப் படைத்தார் வோர்ணர்.
நியூசிலாந்துக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் சதம் கடந்தார் வோர்ணர். இந்த சதத்தின் உதவியுடன் இந்த வருடத்தில் 22 ஆட்டங்களில் விளையாடியுள்ள வோர்ணர் 6 சதம், 4 அரைசதம் உட்பட ஆயிரத்து 232 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதன்மூலம் ஒரு நாள் கிரிக்கெட்டில் ஒரே ஆண்டில் அதிக சதங்கள் விளாசிய ஆஸ்திரேலிய வீரர் என்ற சாதனையைப் படைத்தார். இதற்கு முன்னர் ரிக்கி பொண்டிங் 2003 ஆம் ஆண்டு, 2007 ஆம் ஆண்டு என இரு தடவையும் ஹைடன் 2007 ஆம் ஆண்டிலும் 5 சதங்கள் அடித்ததே சாதனையாக இருந்தது. (ம)





# ஹற்றிக் படைக்கும் முனைப்பில் களமிறங்குகிறது இந்திய அணி

இங்கிலாந்துக்கு எதிராக ஹற்றிக் வெற்றிபெறும் முனைப்பில் இந்திய அணி இன்று நான்காவது டெஸ்டில் களமிறங்குகிறது.
இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள இங்கிலாந்து அணி தற்போது 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையில் மூன்று ஆட்டங்கள் முடிவடைந்துள்ளன. முதலாவது ஆட்டம் சமநிலை கண்டது. இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆட்டங்களில் இந்தியா வெற்றிபெற்றது. இந்த நிலையில் நான்காவது ஆட்டம் இன்று ஆரம்பமாகிறது.
மும்பை வான்கடே மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. ஆட்டத்தின் முதலிரு நாள்களிலும் பவுன்சர் தன்மை ஆடுகளத்தில் இருக்கும். மூன்றாம் நாளிலிருந்து சுழலுக்கு சாதகமான முறையில் ஆடுகளம் மாறிவிடும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தத் தன்மை இங்கிலாந்தை விட இந்தியாவுக்கு அதிக சாதகம் எனச் சொல்லப்படுகிறது.
நட்சத்திரத் துடுப்பாட்ட வீரராக ஹமீட் காயம் காரணமாக விலகியுள்ளமையும், புரோட் முழுமையான உடல்தகுதி இல்லாமல் அவதிப்பட்டு வருவதும் இங்கிலாந்துக்கு பின்னடைவைக் கொடுக்கக்கூடிய விடயங்கள். (ம)

# நேசிக்கப்பட்டவர் 'ஜெ' சச்சின் புகழஞ்சலி

எல்லோராலும் நேசிக்கப்பட்டவர் ஜெயலலிதா என்று சச்சின் புகழஞ்சலி செலுத்தினார்.
தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரான ஜெயலலிதா சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் கடந்த திங்கட்கிழமை உயிரிழந்தார். பிரபலங்கள் பலரும் அவருக்கு தமது இரங்கலைத் தெரிவித்து வருகின்ற நிலையில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சினும் தனது புகழஞ்சலியைத் செலுத்தினார்.
"தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் சாவுச் செய்தி கேட்டு துயரம் அடைந்தேன். அவர் எல்லோராலும் நேசிக்கப்பட்டவர். இந்த இழப்பை தாங்கிக் கொள்ளும் வல்லமையை கடவுள் நமக்கு தருவாராக" என்று தனது ருவிற்றரில் சச்சின் குறிப்பிட்டார். (ம)





# சகாவுக்கு ஓய்வு

இங்கிலாந்துக்கு எதிராக இன்று ஆரம்பமாகும் நான்காவது டெஸ்ட் ஆட்டத்திலும் சகாவுக்கு ஓய்வு வழங்கப்பட்டு பார்திவ் பட்டேல் அணியில் இணைக்கப்பட்டார்.
இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் செய்து ஐந்து ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது இங்கிலாந்து. இரு அணிகளுக்கும் இடையிலான நான்காவது ஆட்டம் இன்று ஆரம்பமாகிறது. இந்த அணிக்கான இலக்குக் காப்பாளரைத் தேர்வுசெய்வதில் தொடர்ந்து பல சிக்கல்கள் இருந்தன. கோக்லி, பட்டேலுக்கு ஆதரவை வழங்கினார். தெரிவுக்குழு சகாவுக்கு ஆதரவை வழங்கியது. கோக்லியின் கருத்தை புறக்கணித்து விட இயலாது என்பதால் பட்டேலின் பெயரும் பரிசீலிக்கப்படவுள்ளது என்று நேற்று முன்தினம் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் சகாவுக்கு ஓய்வு வழங்கி பட்டேலை அணியில் இணைத்துள்ளோம் என தெரிவுக்குழு நேற்று முறைப் படி அறிவித்தது. (ம)

# ஐக்கியம் – விண்மீன் அரையிறுதியில் மோதல்

யாழ்ப்பாணம், டிசெ. 8
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கபடித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.
ஐக்கியத்தின் மைதானத்தில் இரவு 8 மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய அணியை எதிர்த்து பலாலி விண்மீன் 'பி' அணி மோதவுள்ளது. (ம-422)



ஐக்கியம் அணி



விண்மீன் அணி

# ஆட்டம் சமநிலை!

யாழ்ப்பாணம், டிசெ. 8
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கபடித் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சென். தோமஸ் 'பி,' ஐக்கியம் 'ஏ' அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
ஐக்கியத்தின் மைதானத்தில் இரவு 7 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெற்றது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா 25 புள்ளிகளைப் பெற்றதை அடுத்தே இந்த ஆட்டம் சமநிலை கண்டது. ஆட்ட நாயகனாக சென். தோமஸ் அணியைச் சேர்ந்த அஜித் தெரிவுசெய்யப்பட்டார். (ம-422)

# நியூசிப் பந்துவீச்சில் மோசமான அடைவு

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் நியூசிலாந்தின் பந்துவீச்சாளர்கள் மோசமான அடைவை வெளிப்படுத்தினர்.
இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா 378 ஓட்டங்களைக் குவித்தது. 262 ஓட்டங்களில் நியூசிலாந்தின் இன்னிங்ஸ் முடிவு கண்டது. ஆஸ்திரேலிய அணிக்கு சவால் வழங்கும் வகையில் நியூசிலாந்துப் பந்துவீச்சாளர்களின் செயற்பாடு அமையவில்லை. குறிப்பாக வேகப்பந்து வீச்சாளர்களான ஹென்றி, போல்ட் இருவரும் முறையே 91, 80 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தனர்.
நியூசிலாந்துப் பந்துவீச்சாளர்கள் இருவர் ஓர் ஆட்டத்தில் 80 ஓட்டங்களுக்கும் அதிகமாக விட்டுக்கொடுப்பது இதுவே முதற் தடவையாகும். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரகானே விலகல் காயமே காரணம்

இங்கிலாந்துக்கு எதிராக இன்று ஆரம்பமாகும் டெஸ்ட் ஆட்டத்துக்கான இந்திய அணியிலிருந்து காயம் காரணமாக ரகானே விலகினார்.

இந்த ஆட்டத்துக்காக மும்பை வான்கடே மைதானத்தில் இந்திய வீரர்கள் நேற்று தீவிர வலைப் பயிற்சியில் ஈடுபட்டனர். களத்தடுப்புப் பயிற்சியில் ஈடுபடும்போது ரகானேயின் கைவிரலில் காயம் ஏற்பட்டது. இதன் காரணமாக அவர் இன்று ஆரம்பமாகும் ஆட்டத்திலிருந்தும் இறுதி டெஸ்ட்டிலிருந்தும் விலகினார். ரகானேயின் இடத்துக்கு இளம் வீரர் மனேஸ் பாண்டே தெரிவாகலாம் என்று சொல்லப்படுகிறது. அவ்வாறு பாண்டே தெரிவானாலும் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் அவர் இடம்பெறுவது கடினம். காயத்தால் அவதியுற்று குணமடைந்த லோகேஸ் ராகுல் இன்று அணிக்குத் திரும்புவார். இதனால் அவரே ரகானேயின் இடத்தைப் பிரதியீடு செய்வார் என்று கருதப்படுகிறது. (ம)

வீடு வாடகைக்கு
யாழ்நகரில் அமைதியான சூழலில்
வீடு வாடகைக்கு உண்டு
T.P. 077 3673309

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.
பிரெஞ்சு மொழி
யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்
FRENCH EMBASSY இன் கீழ்
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.
உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது.
பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள்.
பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து செல்வோர்; யாழ், வன்னி, பிறமாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AFஇல் படிக்கிறார்கள்.
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதக்கடவை → AF [வெள்ளை மாடிக்கட்டடம்]

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் திரிலோகஈஸ்வரா

(முன்னாள் நீர்ப்பாசன திணைக்கள பட வரைஞர். (D.O.A)



தோற்றம் 1945.01.13 — மறைவு 2016.12.06

அரியாலையைப் பிறப்பிடமாகவும், தற்காலிகமாக சிங்கப்பூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் திரிலோகாஈஸ்வரா 06.12.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சீவரட்ணம் - புஸ்பராணி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கோசலராணியின் அன்புக் கணவரும் துவாரகனின் பாசமிகு தந்தையும் தக்ஷாயினியின் அன்பு மாமனாரும் டிபாஞ்சலியின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ள்ள மற்றும் தர்மலிங்கம் காலஞ்சென்றவர்களான தியாகராசா, திருமதி சரஸ்வதி மற்றும் பிரகலாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தவமணி, மோகனாம்பிகை காலஞ்சென்ற இராஜரட்ணம் மற்றும் புவனேஸ்வரி, இந்திராணி, ஜீவேந்திரா, உருத்திரா, கேமாராணி, பூமாராணி காலஞ்சென்ற புஸ்பேந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனரும் அஜன், அசோக்குமார், மீரா, செல்வேந்திரா, கௌசல்யா, ரஞ்சித்குமார், கவிதா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2016) வியாழக்கிழமை பி.ப. 4 மணியளவில் 66/1, ஆனந்தன் வடலி வீதி, கொழும்புத்துறையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
துவாரகன் (மகன்)

(ஜே/6645)(17.18.21)




# சௌத்கேட்டின் பயிற்சியில் தொடர் வெற்றிகள் குவியும்

## ரூனி நம்பிக்கை

இங்கிலாந்து அணியின் முகாமையாளராக நியமிக்கப்பட்ட சௌத்கேட்டின் பயிற்சியில் அந்த அணி தொடர் வெற்றிகளைக் குவிக்கும் என்று ரூனி நம்பிக்கை தெரிவித்தார்.

இங்கிலாந்து அணியின் இடைக்கால முகாமையாளராக இருந்த சௌத் கேட், சில தினங்களுக்கு முன்னர் அந்த அணி யின் நிரந்தர முகாமையாளராக 2020 ஆம் ஆண்டு வரை நியமிக்கப் பட்டார். அவரின்நியமனத்துக்கு அணியின் தலைவரான ரூனி முக்கிய காரணம் எனக் கருதப்படுகிறார். அவர் பகிரங்கமாகவே சௌத் கேட்டை நியமிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். இந்த நிலையில் தற்போது சௌத்கேட்டின் பயிற்சியிலும் முகாமையின் கீழும் இங்கிலாந்து தொடர் வெற்றிகளைக் குவிக்கும் என்ற நம்பிக்கையையும் தெரிவித்தார்.

"நெருக்கடியான சூழ்நிலையில் சௌத்கேட் தனது நியமனத்தைப் பெற்றுள்ளார். இங்கிலாந்து அணி கடந்த சில வாரங்களாக தடுமாறுகிறது. இந்தத் தடுமாற்றங்களிலிருந்து நாம் மீண்டுவர சௌத்கேட்டின் பயிற்சியும் முகாமையும் அவசியம். கால்பந்து உலகக்கிண்ணத் தொடர் உட்பட ஏனைய முக்கிய தொடர்களுக்கு அவர் முகாமையாளராகச் செயற்படவுள்ளார். சிறப்பாகச் செயற்பட முடியும் என்ற நம்பிக்கை உள்ளது" என ரூனி மேலும் தெரிவித்தார். (ம)

## மேசைப்பந்தாட்டப் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், டிசெ. 8

வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான மேசைப்பந்தாட்டப் பயிற்சி முகாமொன்று அண்மையில் நடைபெற்றது.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்ற இந்தப் பயிற்சி முகாமில் கொழும்பு, யாழ்ப்பாணம், வட மராட்சி பிரதேச பயிற்றுநர்கள் வள வாளர்களாக கலந்து கொண்டனர். ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிற்சி பெற்றனர். (ம-422)

## உடல்தகுதியை நிரூபித்தே களமிறங்குவார் டோனி

இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் இந்திய அணித் தலைவர் டோனி, பயிற்சி ஆட்டமொன்றில் விளையாடி உடற்தகுதியை நிரூபித்தே தொடரில் பங்கெடுப்பார் என்று சில இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவரான மகேந்திர சிங் டோனி ஒக்ரோபர் 29ஆம் திகதி, விசாகபட்டினத்தில் நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தில் இறுதியாக விளையாடினார். கிட்டத்தட்ட இரண்டரை மாத இடைவெளி கழித்து தனது அடுத்த ஒருநாள் ஆட்டத்தில் டோனி களமிறங்க இருக்கிறார். ஜனவரி 15 ஆம் திகதி இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதல் ஒரு நாள் ஆட்டத்திலேயே டோனி களமிறங்கவுள்ளார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் விதிமுறையின்படி பன்னாட்டு ஆட்டங்களில் விளையாடும் ஒரு வீரர் இரண்டு மாத இடைவெளிக்குள் குறைந்தது ஒரு முதல் தர ஆட்டத்தில் விளையாடாமல் பிறிதொரு பன்னாட்டு ஆட்டத்தில் களமிறங்க முடியாது. இதனால் டோனியின் பங்குபற்றலில் சிக்கல் உள்ளது எனச் சொல்லப்பட்ட நிலையில் குறித்த விதிமுறையிலிருந்து டோனிக்கு விலக்கு அளிக்கப்பட்டது.

டெஸ்ட் ஆட்டங்களில் டோனி ஓய்வுபெற்ற காரணத்தால் இந்த விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்தது. ஆனால் குறித்த விதிகளைப் பேணி தனது உடல்தகுதியை நிரூபித்தே களமிறங்க டோனி விருப்பப்படுகிறார். இதனால் இங்கிலாந்து அணி ஜனவரி 12 ஆம் திகதி விளையாடும் பயிற்சி ஆட்டத்தி ் அவர் களமிறங்குவார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம)



# கோக்லியின் ருவிற் கோல்டன் ருவிற்

அனுஸ்கா சர்மாவுக்கு ஆதரவு தெரிவித்து விராட் கோக்லி பதிவு செய்த ருவிற், இந்தியாவின் கோல்டன் ருவிற் ஆகத் தெரிவுசெய்யப்பட்டது.

பொலிவூட் நடிகை அனுஷ்கா சர்மாவுக்கும், கிரிக்கெட் வீரர் விராட் கோக்லிக்கும் இடையேயான காதல் அனைவரும் அறிந்ததே. இதனால் கோக்லி சிறிது தடுமாறினால் அனுஸ்காவே அதற்குக் காரணம் என்று இணையவாசிகள் பதிவிட்டு தமது ஆதங்கத்தைப் போக்கிக் கொள்வார்கள். குறிப்பாக இந்த வருடத்தின் ஆரம்பத்தில் இவ்வாறான சம்பவங்கள் அதிக அளவில் இடம்பெற்றன. இதனால் கோபமடைந்த கோக்லி, ரி-20 உலகக் கிண்ண அரையிறுதிக்கு முன்னர் ஒரு ருவிற் செய்தார். அதில் "அனுஷ்கா சர்மாவைக் கேலிசெய்பவர்களைக் கண்டு அருவருப்படைகிறேன். அவர் எனக்கு சாதகமாகவே இருக்கிறார்" என்று குறிப்பிட்டார். இந்த ருவிற் கிட்டத்தட்ட 40 ஆயிரம் ரீ-ருவிற்களையும், கிட்டத்தட்ட ஒரு லட்சத்து 10 ஆயிரம் லைக்குகளையும் பெற்றது. இதனாலேயே இந்த ருவிற் இந்தியாவின் கோல்டன் ருவிற் எனத் தெரிவு செய்யப்பட்டது. (ம)

சுந்தர்சன் நிறுவனத்தின் மாபெரும் மலிவு விற்பனை


10.12.2016 தொடக்கம் 17.12.2016 வரை
1st Prize - Sofa Set
2nd Prize - Washing Machine
3rd Prize - LED TV
138, யாழ் வீதி, மானிப்பாய்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.